உ
சிவமயம்

# கனக தீபம்



உயர்திரு

## வேலுப்பிள்ளை கனகராசா

27.10.2015

உ

சிவமயம்



நயினாதீவை பிறப்பிடமாகவும் செங்கலடி, மட்டக்களப்பை
வசிப்பிடமாகவும் கொண்ட

அமரர்

# வேலுப்பிள்ளை கனகராசா

அவர்களின்

## சிவபதப்பேறு குறித்த
## 31ம் நாள்

# நினைவு மலர்

## 27.10.2015

# சமர்ப்பணம்

குடும்பத்தின் ஒளி விளக்காய், குல மகனாய்,

தலை மகனாய், சகோதரனாய், கணவனாய்,

தந்தையாய், மாமனாய், பாட்டனாய் திகழ்ந்து

அன்போடும், பண்போடும், பாசத்தோடும்

பேணிப் பாதுகாத்து எம்மை நல்வழி நடத்தி

இன்று வானுறையும் தெய்வமாகிவிட்ட

தங்களுக்கு, உங்கள் புகழ் மணக்கும்

இப்புனித கனகதீபத்தை தங்கள்

பொன்னடிகளில் காணிக்கையாக்குகிறோம்.

அன்புடன் ஏற்றருள்க.

**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**உற்றார், உறவினர்கள்**





விழி
அசைத்தது
01.10.1941



விழி
நிலைத்தது
27.09.2015

எங்கள் அன்புத் தெய்வம்

# அமரர் உயர்திரு வேலுப்பிள்ளை கனகராசா

(முன்னாள் உதவிப் பதிவாளர் நாயகம், வடக்கு, கிழக்கு மாகாணம்)

## திதி நிர்ணய வெண்பா

சீர் பூத்த மன்மத ஆண்டு புரட்டாதி பத்தாம் நாள் ஞாயிறு
பார் போற்ற நன்னெறி அறத்தோடு வாழ்ந்து
பேர் புகழ் பூத்த வேலுப்பிள்ளை கனகராசா அவர்கள்
பௌர்ணமி திதி புரட்டாதிதனில் இறைவன் தாழ் அடைந்தனரே இனிது

முன்னறி தெய்வங்களுடன் அமரர் வேலுப்பிள்ளை கனகராசா









உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



# விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமம் கை கூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம் கை

# தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனி பாம்பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியாரவர்க்கு மிகவே.

# திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலும் காணேடி
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவும் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா - கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற வெஞ் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டுள்ளங்
குளிர என்கண்கள் குளிர்ந்தனவே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்(று) அருள் செய்தவன் மன்னிய
தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

உலகெலாமுணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவு உலாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்.

## திருப்புகழ்

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன் அடிபேணி
கற்றிடும் அடியவர் புத்தியி லுறைபவர்
கற்பக மெனவினை கடிதேகும்
மத்தமும் மதியமும் வைத்திடும் அரன் மகன்
மற்பொரு திரள்புய மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள் பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்

# கடமை வீரர் கனகராசாவின் வாழ்க்கைப் பதிவுகள்

இலங்கையின் வடபால் இருக்கும் சப்த தீவுகளில் நடு நாயகமாக விளங்கும் மணி பல்லவம் என்னும் புகழ் பூத்த நயினாதீவிற்கு மணிபீடம் என்றொரு பெயரும் உள்ளது. சக்தி பீடங்கள் அறுபத்து நான்கிலும் இது ஒன்றே இலங்கையில் உள்ளது என்பது முக்கியமாகக் கூறப்பட வேண்டியதாகும். இத்தீவக மக்கள் அம்பிகையின் அருளால் சகல சிறப்புகளையும் பெருமைகளையும் பெற்ற மதிப்பிற்குரியவர்களா -கிறார்கள்.

இத்தகைய பெருமைக்குரிய நயினாதீவில் அன்பும் பண்பும் மிக்க பெருவாழ்வு வாழ்ந்த உயர் வேளாண் குடிப் பெருமக்களான வேலுப்பிள்ளை + தங்கம்மா தம்பதிகட்கு தலைமகனாக 1941ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதலாம் நாள் கனகராசா அவர்கள் இம் மண்ணில் அவதரித்துப் பெற்றோரை மகிழ்வித்தார். இவரின் உடன் பிறந்தோர் கமலவேணி, விவேகானந்தராசா, செல்வராசன், விஜயரெட்ணம், அன்னசோதி, யோகம்மா, மங்கையற்கரசி, நாகலட்சுமி, கேதீஸ்வரராசா, புவனேஸ்வரி என்போராவர்.

பதின்மருடன் கூடிப் பிறந்திருந்தாலும் தாய் தந்தையர் அவர் தமது தலைமகன் என்பதாலோ என்னவோ மிகுந்த கரிசனையுடனும் அன்புடனும் வளர்த்தனர். இவர் தமது ஆரம்பக்கல்வியை நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஸ்ட வித்தியாலயத்தில் கற்றார். 5ம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தனது இளமைக்கால கல்வித் திறமையை வெளிக்காட்டினார்.

பின்னர் வசாவிளான் மத்திய கல்லூரியில் இணைந்து தனது கல்வியைத் தொடர்ந்து H - S- C வரையும் கற்றுத் தேர்ந்தார். பாடசாலைக் காலத்தில் கல்வியோடு மட்டும் நின்று விடாது மைல் ஓட்டம், நீளம் பாய்தல், உயரம் பாய்தல் போன்ற விளையாட்டுக்களில் பெரும் வீரனாகவும் கரப்பந்தாட்டம், கால் பந்தாட்டம் விளையாட்டுக்களில் மிகுந்த ஆர்வம் உடையவராகவும் விளங்கினார்.

மேற்கொண்டு உயர் கல்வியாகிய பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர்வதை விட தனது குடும்பத்தை முன்னேற்றுவதே முதன்மையானது எனக் கருதி

கொழும்பில் பிரபல பிரத்தியேகக் கம்பனி ஒன்றில் கணக்காளராகச் சேர்ந்து கொண்டார். பின்னர் 1961ம் ஆண்டு ஆனிமாதம் 19ம் திகதி அரச சேவையில் இணைந்தார். அவருடைய ஆரம்பகால அரசசேவை கொழும்பில் ஆரம்பமாகியது. இவர் மூன்று மொழிகளிலும் சேவை ஆற்றும் திறமை உடையவராக இருந்தார். கருணை நிறைந்த வெள்ளை உள்ளம், என்றும் மலர்ந்த முகம், அவசரமற்ற மென்மையான நடை, ஆடம்பரமற்ற ஆடை அணி, மெல்லிய தோற்றம் , ஆசை அவா வெகுளித்தன்மைகளற்ற சுபாவம், மன்னிக்கும் மனிதப் பண்பு, இரக்கத் தன்மை இவற்றையெல்லாம் வெளிக் காட்டுவது போன்ற வெண்மையான முடி, கடமையில் ஈடுபடும் பொழுது வெளிப்படும் அசுரவேகம் இவை அனைத்தும் தன்னகத்தே கொண்டவர் தான் அமரர் திரு. கனகராசா அவர்கள்.

1969ம் ஆண்டு யாழ் நகரைப் பிறப்பிடமாகக் கொண்டு மட்டக்களப்பு செங்கலடியில் வசித்து வந்த தனக்கு அறிமுகமான உயர் வேளாண்குடிப் பெருமக்களான இராமுப்பிள்ளை + இராசம்மா தம்பதிகளின் ஒரே மகளான பராசக்தியை மனம் விரும்பி மணந்து கொண்டார். திருமணத்திற்கு முன்னரே இவரது மனைவி தனது தாய் தந்தையை இழந்திருந்தார். திருமணத்தின் மூலமும் இவர் பிரதிபலன் எதிர்பாராத கருணை பொங்கும் தனது இரக்க சுபாவத்தை வெளிப்படுத்தினார்.

தனது பிறந்த வீட்டவர்களை நேசித்தது போலவே தனது மனைவியிடமும் மிகுந்த அன்பும் ஆதரவும் காட்டினார். இவர் பெற்றெடுத்த நன் முத்துக்களே நிரஞ்ஜனி, நிரஞ்சன், சுதர்சனி, அனுஷா எனும் நான்கு செல்வங்கள். நிரஞ்ஜினியும் நிரஞ்சனும் பட்டம் பெற்று விஞ்ஞான ஆசிரியர்களாகவும் சுதர்சனி பட்டம் பெற்றுக் கணக்காளராகவும் அனுஷா வைத்திய அதிகாரியாகவும் பணியாற்றுகிறார்கள். இவர்களை உரிய காலத்தில் முறையே நிரஞ்ஜனியை கணனி வள நிலைய முகாமையாளரான ஜெகதீஸ்வரனுக்கும் சுதர்சனியை பொறியியலாளரான விஜயராகவனுக்கும் மகன் நிரஞ்சனை ஆசிரியையான வளர்மதிக்கும் அனுஷாவை வைத்திய அதிகாரியாகிய சிறிசங்கருக்கும் திருமணம் செய்து வைத்து நிறைவடைந்தார். அத்துடன் அக்ஷயா, அரங்கன், விக்னா, அருணோதன், சோபிறா என்னும் பேரப் பிள்ளைகளுக்குப் பாட்டனார் ஆகி மகிழ்ந்தார்.

தனது திருமணத்தின் பின்னர் 1970ம் ஆண்டு மனைவியின் ஊராகிய மட்டக்களப்பிற்கு இடமாற்றம் பெற்று மட்டக்களப்பு பதிவாளர் திணைக்களத்தில் காணிப் பதிவாளராகக் கடமை ஏற்றார். 1981ம் ஆண்டு மேலதிக மாவட்டப் பதிவாளராகப் பதவி உயர்வு பெற்று அம்பாறை, திருகோணமலை, கல்முனை, மட்டக்களப்பு எனத் தன் சேவையைத் தொடர்ந்தார்.

1981ம் ஆண்டு அம்பாறையில் அவர் கடமையாற்றிக் கொண்டிருக்கும் பொழுது பல விடயங்களில் குழம்பிப் போயிருந்த திருகோணமலை பதிவாளர் திணைக்களத்தைப் பொறுப்பேற்குமாறு இவரது திறமையில் நம்பிக்கை வைத்து அரச அதிபர் திரு. லயனல் பெர்ணாண்டோ அவசர அழைப்பு விடுத்தார். கடமையைக் கண்ணாகக் கருதும் திரு. கனகராசா அவர்கள் எதுவித மறுப்பும் கூறாது திணைக்களத்தைப் பொறுப்பேற்று மூன்றே மாதங்களில் சகல விடயங்களையும் ஒழுங்கு நிலைப்படுத்தினார். இச் செயலினால் அரச அதிபரின் நன் மதிப்பையும் பாராட்டையும் பெற்றுக் கொண்டார்.

1984ம் ஆண்டு கல்முனை பதிவாளர் காரியாலயத்தில் ஐயா சேவையாற்ற வேண்டுமென்று அப்போதைய பாராளுமன்ற அங்கத்தவரும் மேலதிகாரிகளும் விரும்பியதற்கிணங்க அங்கு இடமாற்றம் பெற்று வந்தார். அவருடைய குடும்பம் செங்கலடியில் இருந்த காரணத்தினால் தினமும் காலை ஆறு மணிக்குக் கல்முனைக்குப் புறப்பட்டு மாலை ஏழு மணிக்கு வீடு திரும்பும் வழக்கத்தை மேற்கொண்டார். அசுர வேகத்தில் திணைக்களத்தின் குறைபாடுகளைச் சீராக்கினார். வேலைப் பழுவும் ஓய்வின்மையும் அவரது உடல் நலத்தைக் குன்றச் செய்தது. அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் இருதய நோயாளியாக அவர் அனுமதிக்கப்பட்டது. 1984ம் ஆண்டு தான் கடுமையான (Serious) நோயாளியாக இருந்த அந்த நிலையிலும் கூட வைத்தியசாலையில் எதிர்பாராத விதமாகச் சந்தித்த தனது அலுவலக உத்தியோகத்தரிடம் "என் மனைவி எனது தனிப்பட்ட அலுவலகத் திறப்பைக் கொண்டு தருவார் பெற்றுக் கொள்ளுங்கள்" என்று கூறினார். இது இவரது கடமையின் உயர்வுக்கு ஓர் சான்று.

திருமலை, கல்முனை மாவட்டங்களில் பணியாற்றிய காலத்தில் நாட்டில் பெரும்பாலும் குழப்ப நிலையே காணப்பட்டது. விடுமுறையில் வீட்டில் நிற்கும்

காலங்களில் நாட்டில் பிரச்சனைகள் ஏதும் தோன்றி விட்டால் உடனும் தனது காரியாலயத்திற்குச் செல்ல வேண்டுமென்பதில் குறியாக இருப்பார். இதனால் அவர் தனது குடும்பத்தாரின் அதிருப்தியையும் சம்பாதித்துக் கொண்டுள்ளார். நாட்டுப் பிரச்சனைகள் ஏற்படும் சமயங்களில் அவர் தனது காரியாலயத்தைக் கட்டிக் காப்பாற்றுவதும், குடும்பத்தார் தனியாகப் பிரச்சனைகளை எதிர்கொள்வதும் வழமையான நடைமுறை.

பிற மாவட்டங்களிலேயே தனது சேவைக் காலத்தின் பெரும் பகுதியைச் செலவிட்டு இறுதியில் 1993ம் ஆண்டு பதவி உயர்வுடன் மட்டக்களப்பிற்கு இடமாற்றம் பெற்று வந்தார். அதன் பின்னரே அவர் தனது குடும்பத்தாருடன் சேர்ந்து வாழ முடிந்தது. கடமை, நேர்மை எனறு மெழுகுவர்த்தி போல் தன்னை உருக்கிக் கொண்டதாலோ, சேவைக் காலத்தில் பெரும் பகுதி பிற மாவட்டங்களில் வாழ்ந்ததுவோ, எதுவோ எதுவித தீய பழக்கங்களுமற்ற அவரின் உடல் நலம் குன்றி இருதயத்திலும் பாதிப்பு உண்டாகியது.

1999ம் ஆண்டு பெப்ரவரி மாதம் மீண்டும் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். இம்முறை அவரது நோயின் தீவிரத்தால் மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு செல்ல வேண்டியதாயிற்று. அங்கு அவரது இருதயம் ஒழுங்காக இயங்குவதற்கு "இதய இயக்கி" (Pace maker) என்னும் கருவியை அவர் உடலில் பொருத்தினார்கள். இதனால் ஆரம்பத்தில் அவர் சிறிது மனநெகிழ்வு அடைந்தாலும் பின்னர் அதனையும் இயல்பாக ஏற்றுக் கொண்டு மீண்டும் தனது பழைய நிலைக்குத் திரும்பி தன் பணியைத் தொடர்ந்தார்.

1984ம் ஆண்டு ஏற்பட்ட சுகயீனத்தின் போதும் 1999ம் ஆண்டு ஏற்பட்ட சுகயீனத்தின் போதும் அக்கால கட்டத்தில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் கடமையாற்றிய Dr. விவேகானந்தராசா V.P அவர்கள் மிகுந்த கவனமெடுத்து தானே முன்னின்று சிகிச்சைகளைச் செய்து "வைத்தியர் இறைவனின் பிரதி நிதி" என்பதற்கமைய சேவையாற்றி திரு. கனகராசா அவர்களின் நோய் தீர்க்கப் பெரிதும் உதவினார். இதனை அவரும் அவரது குடும்பத்தாரும் என்றும் நன்றியறிதலுடன் நினைவு கூருவதுண்டு.

$2000^{ம்}$ ஆண்டு திரு. கனகராசா அவர்களுக்குப் பதிவாளர் நாயகமாகப் பதவி உயர்வு கிடைத்தது. இந்தப் பதவி அதுவரையில் தமிழர் ஒருவருக்கும் கிடைத்திருக்கவில்லை. இருப்பினும் அப் பதவி உயர்வை அவர் ஏற்றுக் கொள்ளவில்லை. நாட்டில் நிலவிய குழப்பநிலை காரணமாக வளர்ந்து விட்ட தன் பிள்ளைகளையும் மனைவியையும் தனியே விட்டு கொழும்பில் சென்று கடமையாற்ற அவர் விரும்பவில்லை. இது அவரது ஆடம்பரமற்றதும், ஆசைகளற்ற துறவி மனப்பான்மையையும் வெளிப்படுத்துகின்றது.

நியூசிலாந்தில் இருக்கும் இவருடைய இளைய மகள் தன்னுடைய நாட்டிற்கு வரும்படி எத்தனையோ தடவைகள் கேட்டும் வரமுடியாது என்று ஒதுங்கியவர். பேத்தி பிறந்த வேளையில் அவவைப் பார்க்க வேண்டுமென்ற ஆவலில் தனது மனைவியுடன் அங்கு சென்று ஆறுமாத காலம் தங்கியிருந்து வந்தார். இவர் ஓர் ஆன்மீக வாதியும் கூட செங்கலடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், மட்டக்களப்பு ஏரன்ஸ்லேன் குருந்தையடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், பூம்புகார் கண்ணகையம்மன், மனைவியின் குல தெய்வமாகிய ஏறாவூர் பத்திரகாளியம்மன் ஆலயம், தனது பிறந்த ஊரில் அருளாட்சி புரியும் ஸ்ரீ நாகபூசணியம்மன் ஆலயம் இவற்றிற்கெல்லாம் தன்னால் இயன்ற தொண்டையும் நிதியையும் நிருவாகப் பணிகளையும் ஆற்றி நிறைவு கண்டவர்.

தான் கல்வி கற்ற வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரியைப் பற்றியும் அங்கு கற்பித்த ஆசிரியர்கள், அதிபர்களையும் அவர்கள் மாணவர்களிடத்தில் வைத்திருந்த அக்கறையையும் அனுசரணையையும் அடிக்கடி நினைவு கூர்ந்து கதைப்பதுண்டு. அத்துடன் தனது நண்பர்களுடன் சேர்ந்து செய்த குறும்புகளையும் தனது குடும்பத்தாரிடம் கூறி பழைய நினைவுகளைப் புதுப்பித்துக் கொள்வார். தனது பாடசாலை நண்பர்களை இடைக்கிடையாவது சந்திக்க முடியவில்லையென்பது குறித்து அவர் மனதில் சிறு வருத்தமிருந்தது.

இவர் ஓய்வு பெற்ற பின்னரும் தேர்தல் திணைக்களம் இவருடைய சேவை தங்களுக்குத் தேவையெனக் கருதி இவரைத் தங்களுடன் இணைத்துக் கொண்டனர். மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளரான திரு. சிவபாத சுந்தரம், திரு. கிருஷ்ணானந்தலிங்கம், திரு. சுதாகரன் என்போருக்கும் தன்னலமற்ற தனது

சேவையை வழங்கினார். பின்னர் தனது உடல் நலக் குறைவால் 2012ம் ஆண்டுடன் தன்னால் சேவை செய்ய இயலாது என்று கூறி விலகிக் கொண்டார். இருப்பினும் தன்னிடம் காணி சம்பந்தமாக ஆலோசனை கேட்டு வரும் வழக்கறிஞர் – நொத்தாரிஸ்மார் – நண்பர்கள் என அனைவருக்கும் இலவசமாகத் தனது ஆலோசனைகளை வழங்கத் தயங்கவில்லை.

ஆசைகளற்ற, அமைதியான, அதிகம் பேசி அலட்டிக் கொள்ளாத சுபாவம், நேர்மை, கடமை, கருணை என்பவைதான் அவருடைய அணிகலன்கள். இதனால்தானோ என்னவோ காலன் அருகில் வந்தபோதும் அவர் தனது கடமையைச் செய்யட்டும் என்று அதிகம் பேசி வாதாடாமல் விட்டு விட்டார். அன்னாரது இன்னுயிர் 2015ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 27ம் நாள் பௌர்ணமி திதியன்று இறைவன் தாழ் சேர்ந்தது. அன்னார் எம்மைவிட்டுப் பிரிந்தாலும் என்றும் எமது உள்ளங்களில் வாழ்ந்து கொண்டேயிருப்பார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



# காலமெல்லாம் அன்பால் அரவணைத்த கணவனைப் பிரிந்த மனைவியின் துயரலை...

தந்தையை இழந்து பின்னர் தாயையும் இழந்து பதினெட்டாவது பராயத்தில் பரிதவித்து நின்றேன். சொத்துக்கள் இருந்தாலும் அதனைச் சீராக்கித்தர யாருமில்லை. தொடர்ந்து கல்வி கற்க எண்ணிய எனது எதிர்காலம் இருண்டது. வருடங்கள் இரண்டு ஓடிய நிலையில் என் தாயாருக்கு அறிமுகமான நீங்கள் என் கரம் பற்றி வாழ்க்கைத் துணையாகினீர்கள். நம்முடைய பந்தம் 1969ம் ஆண்டு செப்ரம்பர் மாதம் 12ம் திகதி ஆரம்பமாகியது. நாற்பத்து ஆறு ஆண்டுகள் என்னுடன் கரம் கோர்த்து வந்த நீங்கள் அதே செப்டம்பர் மாதத்தில் ஏன் என்னைத் தவிக்க விட்டு ஒளிந்து கொண்டீர்கள். கண்டு பிடிக்கக் கூடிய இடம் என்றால் நானும் பிள்ளைகளும் விட்டு விடுவோமா தேடிப் பிடித்துக் கூட்டி வந்து விடுவோமே. ஆனால் நீங்கள் நாங்கள் தேடிக் கண்டுபிடிக்க முடியாத சுவர்க்கத்திற்கல்லவா போய் விட்டீர்கள்.

நீங்கள் எனக்குக் கணவராக மட்டுமல்ல தந்தையாய், சகோதரனாய், நண்பனாய் அனைத்துமாயிருந்தீர்கள். தாய் தந்தையருக்கு ஒரே பிள்ளையாய் செல்லமாய் வளர்ந்ததினால் சமையல் முதல் உலகத்தின் நெழிவு சுழிவுகள் வரை எதுவுமே எனக்கு அப்போது தெரிந்திருக்கவில்லை. அனைத்தையும் நீங்கள்தான் எனக்குப் படிப்படியாகக் கற்றுத் தந்தீர்கள். கருக்கிய சுவையற்ற உணவுப் பதார்த்தங்களை நான் தயாரித்துத் தந்தாலும் முகம் சுளிக்காது சாப்பிட்டுப் பின்னர்அதன் குறை நிறைகளைக் கூறி என்னைச் செப்பனிட்டீர்கள்.

அரச சேவையில் நான் இணைந்து கொள்ள விரும்பிய போது "வேண்டாம் இருவரும் வேலை பார்த்தால் பிள்ளைகளைச் சரியாகக் கவனிக்க முடியாது. இந்த வளவு வருமானம் போதுமானது" என்று கூறினீர்கள். அதனால் தானோ என்னவோ சம்பளம் எடுத்து வந்த அன்றே அது முழுவதையும் என்னிடமே தந்துவிட்டுப் பின்னர் உங்கள் தேவைகளுக்கு என்னிடம் கேட்டுப் பெற்றுக் கொள்வீர்கள். உங்களுடைய இந்தக் குணம் இறுதி நாள் வரை உங்களிடமிருந்தது.

ஆடை, அணிகலன்கள் என்று எனக்கு வாங்கித் தந்து திருப்திப்பட்ட நீங்கள் இறுதி வரை அணிந்திருந்த ஒரே ஒரு ஆபரணம் நமது திருமணத்தின் போது நாம் மாற்றிக் கொண்ட மோதிரம் மட்டும் தான். வசதிகள் வந்த பின்னர் கூட எதையுமே அணிய விரும்பாத எளிமைவாதி நீங்கள். என்றுமே என்னிடம் வரவு செலவுக் கணக்கு கேட்டதில்லை. அத்தனை நம்பிக்கை என்னிடம் உங்களுக்கு வீட்டு நிர்வாகம் முழுவதும் என்னிடமே விட்டு விடுவீர்கள். அதனால்தான் நான் எனது தொழிலை நிறைவாகச் செய்யக் கூடியதாக உள்ளது என்று அடிக்கடி கூறிக் கொள்வீர்கள்.

மண்ணில் பிறந்தவர்க்கு மரணம் இயற்கையென்றாலும் என்னால் அதனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை. எங்கு திரும்பினாலும் உங்கள் தோற்றம் தான் தெரிகிறது. இன்னும் சில வருடங்கள் எங்களுடன் நீங்கள் வாழ்ந்திருக்கக் கூடாதா என்று மனம் ஏங்குகின்றது. என்ன செய்யலாம் இதுதான் இயற்கை இது தான் நியதி. உங்கள் நினைவுகளைச் சுமந்து கொண்டு, நீங்கள் தந்த பிள்ளைச் செல்வங்களுடன் தொடர்கின்றேன் வாழ்க்கையை. தெய்வத்துள் தெய்வமாக நின்று எங்களை இனியும் என்றும் வழிநடத்துவீர்கள் என்ற நம்பிக்கையுடன்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!



# அறிவு தந்த அன்புத் தந்தையின் பிரிவுத் துயரில் - மக்கள்

அப்பா அப்பா என அழைக்கின்றோம் எங்கே சென்று விட்டீர்கள் எங்கள் அப்பா...

எழுத்தறிவு தந்தவன் இறைவன் ஆவான் என்பதற்கமைய எங்களுக்கு எழுத்தறிவு தந்த முதற் குரு நீங்கள் இறைவன் ஆகிவிட்டீரே !

ஓய்வு மனிதனுக்கு தேவையற்ற ஒன்று என்பது போல் உங்களது ஓயாத அசுர வேகம் ஒவ்வொரு வேலையிலும் இருந்தால் தானோ என்னவோ படைத்த இறைவன் உங்களது இதய இயக்கி வேகத்தை குறைத்து உங்களைத் தன் அருகிலிருந்து ஓய்வு எடுக்குமாறு அழைத்து விட்டான் போலும்.

அதிகம் பேசாத அமைதியான உங்கள் சுபாவம் உங்களுக்குரிய தனித்துவமான சொத்து அப்பா. ஆனால் எப்போது உங்கள் குரல் உயர்ந்தொலிக்கின்றதோ, எங்களுக்குத் தெரியும் அப்பாவின் கோபம் நியாயமான கோபம் தான் என்று. எங்களுக்கு, உங்கள் இத்தகைய நற்பண்புகளின் ஊடாக பொறுமையை கடைப்பிடித்தல், நியாயமான ஒன்றை கேட்பதிலோ, கதைப்பதிலோ தயங்க வேண்டாம் என்பதற்கான முன் மாதிரி நீங்கள் தான் அப்பா.

தர்மம் செய்வதில் நீங்கள் ஒரு தர்மராசா என்று உங்களை நாம் கூறுவோம். ஏனெனில் எந்த பொருளை வாங்கும் போதும் விலை கேட்பதோ, பேரம் பேசுவதோ உங்கள் குணமல்ல, கேட்பதை கொடுப்பது உங்களுக்குரிய தனித்துவம். இது தெரிந்து தான் "காலன்" உங்களிடம் வந்த போதும் வாதம் செய்யாமல் உம் உயிரையும் தானம் செய்தீர்களோ என்னவோ...?

உங்களை நாம் நினைத்தழும் ஒவ்வொரு நிமிடமும் எங்கள் முன்னால் உங்கள் நினைவின் அடிச்சுவடுகளாகத் தெரிவன "நேர்மை, கடமை, கண்ணியம்" அப்பா இந்த அற்புத பண்புகள் உங்கள் மூலம் எம் இரத்தத்திலும் ஓடுவதனால் தான் நாங்கள் ஒவ்வொருவரும் சமூகத்திலும், வேலைத்தளங்களிலும் உயர்ந்து நிற்கின்றோம் என்பதை நினைத்துப் பெருமிதம் அடைகின்றோம்.

அப்பா, உங்கள் அடிச்சுவடுகளான "நேர்மை, கடமை, கண்ணியம்" எம் அகல்விளக்காய் ஏந்திக் கொண்டு உங்களை எம் உருவில் மீண்டும் வாழ வைப்போம் இப் பூவுலகில்.

எங்கள் "அப்பா" என்ற மூன்றெழுத்தில் நாம் சுவாசித்த, வாழ்ந்த கற்ற நற்பண்புகளான "அன்பு, கருணை, அறிவு, நேர்மை, கடமை" எனும் மூன்றெழுத்து வாசகத்தையே நாம் எமது வாழ்க்கையில் எடுத்துச் செல்வோம். அப்பா, நாம் இப்போது உங்களிடம் கேட்பதும் கூறுவதும், இம் மூன்று வாசகமே தான் அப்பா.

*"Guide us Appa"*
*"God Bless you Appa" AND*
*"Good Bye Appa"*

என்றும் பாசத்துடன் உங்கள்
**பிள்ளைகள்**



# மூத்த மருமகனின் பேனாவில் இருந்து...

பதினைந்து ஆண்டுகளுக்கு முன் மூத்த மகள் நிரஞ்ஜனியை கரம் பிடித்ததில் இருந்து ஆரம்பமான உறவு.

எனது வீட்டில் நான் செல்லப்பிள்ளை. திருமணத்தின் மறுநாள் மட்டக்களப்பில் இருந்து வவுனியா செல்லும்போது அம்மா கூறிச் சென்ற வார்த்தை இனி உனக்கு பொறுப்புக்கள் உண்டு.

என்னிலும் இளைய மைத்துனர், மைத்துனிமாருக்கு வழிகாட்ட வேண்டிய ஓர் கடமையை என்னுள் உணர்ந்தேன். அன்று முதல் மூத்த மருமகனாக அல்ல மகனாக தங்கள் குடுபத்துடன் செயற்பட்டேன்.

என் அம்மாவிற்கும் உறவினர்களுக்கும் உங்களை மட்டுமல்ல உங்கள் ஊரவர்களையும் நன்கு பிடிக்கும்.

தங்கள் மரணம் நிறைவானது என தங்களை நேசித்தவர்கள் மனதார அனுதாபம் தெரிவித்து சென்ற போது எனக்குள் ஓர் ஆறுதல். திருப்தி தங்கள் வாழ்க்கைக்கு நான் பலமாக இருந்தேன் என்பதில்.

“வயது போனவர் ஓர் சமூகத்தின் சொத்து” என்பது எனது அனுபவம் தந்த உண்மை. தாங்கள் இன்னும் சில காலம் வாழ்ந்து இருப்பீர்கள் என்று நினைத்து இருந்தேன். அது என் தீர்க்க தரிசனத்துக்கு கிடைத்த தோல்வியாக எண்ணுகின்றேன்.

பிறந்த மனிதர் சிரஞ்சீவியாக வாழ்வதில்லை. அதில் ஆறுதலடைகின்றேன். எங்கள் கூட்டுக் குடும்பத்தின் வெற்றிக்கு வழிகாட்டி நீங்கள்.

இனியும் நாம் வெற்றியுடன் வாழ உங்கள் ஆசீர்வாதங்கள் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

தங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டும் என பிரார்த்தித்து விடை பெறும் மருமகன்

**ஜெகதீஸ்வரன்**

# இதயத்தை விட்டு அகலாத மாமா

தங்கள் வாழ்க்கை நெறி பற்றிய தர்மம், தொழில் சார் வாழ்வு என்பன இளையோர்க்கான வழிகாட்டியாக பல வழிகளிலும் திகழ்ந்தன.

தூய்மையே நற்பண்புகளுக்கான அடித்தளம், நல்ல மனப்பாங்கு, ஒருவரின் பண்பிலும் நடத்தையிலும் என்றும் புலப்படும் என்பதற்கு இலக்கணமாய் வாழ்ந்தீர்கள்

இவ்வுலகில் வாழ்ந்திருந்த காலமெல்லாம் – எங்களுடன்
வழிகாட்டியாக நின்று ! என் கடன்
பணி செய்து கிடப்பதே என்பதையே
எல்லோருக்கும் உணர்த்தினீர்கள் – ஆனால்
காலைக்கதிரவன் கண் விழிக்கும் முன் – மாலை
இருள் எமை சூழ வந்தது போல் தங்களது
மறைவுச் செய்தி கேட்டு துயரடைந்தேன்
இனி எங்கு காண்போம் உங்கள் திருமுகத்தை
உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**தங்களது பிரிவால் துயருறும்**

**மருமகள்**

# பாட்டனாரைக் காணவில்லையே என ஏங்கித் தவிக்கும் பேரப்பிள்ளைகள்

## MY GREAT APPAPPA

I like my Appappa and I love he. He was death, so I am sad and my brother Arangan so sad. My appamma was sad sutha mami, Vijay mama, my mother and father. Warmly we very sad Periyamama, Periya mami Anusha mami, Sankar mama, Arunothan, Vicknaa, Arangan, me and Sobira very sad. Why do you go to god Appappa!

Please come in Arangan, Arunothan, Vicknaa me and Sobira's dream please.

From
Lovely grand daughter,
**N. Akshaya**

## MY GREAT AMMAPPA

· I call my Ammappa as "Thatha" When I visited last time me and my thatha went to pick up my thamby from his kinder garden. I always help to thatha to get eggs from the chicken coop. It was a great time I had with my thatha.

When I was baby thatha came to New Zealand and he always carries me.

Thatha I love you but why did you gone? Everybody was sad. My Ammamma is most sad. I am at New Zealand and I am so far away from Sri Lanka. I didn't even get a chance to say bye to you before you gone.

I'll never forget you thatha (Ammappa)

Ever loving grand child
**Vicknaa ViJayarahavan**

## அப்பப்பா நீங்கள்.....

அப்பப்பா நீங்கள் இறந்ததில் எனக்கு மிகவும் கவலை. கவலைப்படாதீர்கள். கடவுள் பார்த்துக் கொள்வார். அவரின் மறுபிறவியில் அவரை காண்பேன் என்று காத்திருக்கின்றேன்.

இப்படிக்கு,
பாசமுள்ள பேரன்,
**நி. அரங்கன்**

## Thatha ( Ammappa) is the best....

When I started my education at kinder garden thatha is the guide to me. Every day he came to my school and pick up me. Not only that thatha guide me to participate in sports meet and he came and watch how I am doing. For me thatha maintain chicken coop in home. Me and thatha always took eggs from the chicken coop.

Thatha loves to go outside, and sitdown out side. Saturday 26th amma, appa and mama took thatha to hospital. Then I felt sleep when I wake up in midnight I asked my ammamma, "thatha came back to home?". Following day morning I asked my mother to bring thatha to home

It was happen. Thatha was came in a box with sleeping. We are crying thatha not gotup. Then only I understand the meaning of death. I will never forget you thàtha.

I had a great time with my thatha.

From,
Lovely grand son,
**S. Arunothan**

## உடன்பிறந்தோர் வாஞ்சை

ஒரு தாயின் வயிற்றினிலே
உருவாகி நாம் வளர்ந்தோம்
அருமையண்ணன், தம்பி, தங்கைகளாய்
அகிலமிதில் நாம் படித்தோம்
பெருமைக்குரிய எங்கள்
பெற்றவரின் சொற்பணிந்து
பெரியவராய் வந்த பின்னே
பிரிந்துநின்று கதறுகின்றோம்
எம் முருவம் மாறினாலும்
எங்கெங்கு வாழ்ந்தாலும்
உம் நினைவை எமது உயிர்
ஒரு போதும் மறந்திடாது
இங்கே பிறந்த அண்ணர்
இறைவனவன் ஆசி பெற்று
எம்மையெல்லாம் விட்டகன்றார்
எப்படி நாம் தாங்கிடுவோம்.

## மைத்துனர், மைத்துனிமார் பிரிவாற்றாமை

எண்ண எண்ண இதயமெல்லாம்
எங்களத்தான் பிரிவையெண்ணி
இன்றும் தான் அழுகிறது !
என்ன செய்வோம் பிரியமுடன்
அன்பு காட்டி ஆதரித்து,
ஆசையோடு அமுதூட்டி
துன்பமொன்றும் அறியாமல்
துயர் போக்கிக் காத்த அத்தான் !
கண் முன்னால் நிற்பது போல்
காட்சியாகத் தெரிகிறதே!
உம்மையெண்ணிக் கலங்குகின்றோம்
உயிர் மீண்டு வாருமத்தான் !

## பெறா மக்களின் நினைவில்...

பெற்றெடுத்த பிள்ளைகள் மேல் வைத்த பாசம்
பெரிதில்லை, பெறா மக்கள் எங்களோடு
அற்புதமாய் அன்பு காட்டி, ஆதரித்து
ஆசையுடன் காத்தீர்கள் ! அப்பா, பெரியப்பா உம்மை
இற்றரையில் இனியென்று நாங்கள் காண்போம்?
இறையடியில் வாழ்வதற்கா சென்றீர் ஐயா
கற்பனையைச் சிதறடித்துச் சென்றது ஐயா
காத்திருக்கும் எங்கள் மனம் குளிர வாரும் !

## மருமக்களின் நினைவலைகள்

மருமக்கள் நாம் எனினும் எம்மைப் பெற்ற
மக்களைப்போல் அரவணைத்துக் காத்து வந்தீர் !
உருவமது மாறினாலும் உங்கள் உள்ளம்
ஒரு நாளும் மாறாது என்றிருந்தோம்
உருமாறி உள்ளமதும் வெந்து போச்சே !
ஓ ! எங்கள் மாமாவே உன்னைக் காண
வருவோம் நாம் ! அதற்கு முன்னே நீங்கள் எங்கள்
வாசல் தேடி வாருங்கள் பார்த்திருப்போம். !

## உற்றார், உறவினர்களின் துயரலைகள்

கண் மணியை இழந்தது போல்
கதறுகிறோம் எம்மையெலாம் தவிக்கவிட்டு
கண்மூடி விழிப்பதற்குள் பிரிந்த எங்கள்
கனகராசா திருமுகத்தை என்று காண்போம்?
உண்மை பேசும் உத்தமனாய் உயர்வுகண்டு
உலகமெலாம் புகழ்வதற்கு வாழ்ந்த எங்கள்
தன்னலமே கருதாத தங்கக் குன்றே
தவிக்குமெம்மைக் கரை சேர்க்க வாருமய்யா !

# MY POEM

Kanakaraja you are my raja
The raja of my life
Why have you gone
All alone
You're my life you're my death
Never leave this world
Never leave yourself
Well we all have a ending
You will be a RAJA !

# ACROSTIC

**K**ing
**A**mazing
**N**obel
**A**stonishing
**K**ind
**A**rcade
**R** apid
**A**wesome
**J**umbo
**A**tma

Thank you for your peaceful time R.I.P !

By
**Madhav Ketheswararajah.**



# விழி நீரிலே நனைகிறது....



கனகராசா இறந்த செய்தி கேட்டு
கலங்கிப் போனேன் - நான்
கனவு கண்டு எழுந்தது போல் இருக்கிறது
கடந்த காலம் உண்மைதானோ?

நயினாதீவினிலே அவதரித்த கனகராசா
நயமாக எல்லோரையும் அரவணைப்பீர்கள்
சினந்து பேச மாட்டீர்கள்
சிரித்து பேசி மகிழ வைப்பீர்

பணிவான மனிதனாக கல்வியிலே உயர்ந்ததனால்
காணிப்பதிவாளராக வடக்கு கிழக்கை ஆண்டீர்கள்
துணிவான மக்களையும் பெற்றதனால்
கனிவான தந்தையாக வழிநடத்தி வைத்தீர்கள்

எழுபத்து நான்கு வயதினிலே எம்மை விட்டு பிரிந்தாலும்
என்றுமே எம்மனதில் அழியாமல் வாழ்வீர்கள்
நீங்கள் பதித்திட்ட கால் தடங்கள்
எங்கள் விழி நீரிலே நனைகிறது

நல்லார் புகழ் அழிவதில்லை
நினைத்து பேச மறப்பதில்லை
எம்மை விட்டு பிரிந்த உங்களை
எண்ணி எண்ணி குமுறுகிறோம்.

அன்னாரின் ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்

**ஏகாம்பரநாதன் குடும்பம்**

**முருகேசு அன்ட் பிறதர்ஸ்**

# வாணி விழா பாடல்கள்..

## துர்க்கைப் பாடல்

யாதுமாகி நின்றாய் - காளி !
எங்கும் நீ நிறைந்தாய்
தீது நம்மை யெல்லாம் - நின்றன்
செயல்க ளன்றி யில்லை
போதும் இங்கு மாந்தர் - வாழும்
பொய்மை வாழ்க்கை யெல்லாம்,
ஆதி சக்திதாயே! என்மீ
தருள் புரிந்து காப்பாய் (யாது)

எந்நாளும் நின்மேல் - தாயே !
இசைகள் பாடி வாழ்வேன் !
கந்த னைப்ப யந்தாய் - தாயே
கருணை வெள்ள மானாய் !
மந்த மாரு தத்தில் - வானில்
மலையினுச்சி மீதில்,
சிந்தை யெங்கு செல்லும் - அங்குன்
செம்மை தோன்று மன்றோ ! (யாது)



**ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் - பராசக்தி**
**ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்**
**ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் - பராசக்தி**
**ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்.**

1. கணபதி ராயன் - அவனிரு
காலைப் பிடித் திடுவோம்
குண முயர்ந் திடவே - விடுதலை
கூடி மகிழ்ந் திடவே
*(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)*

2. சொல்லுக் கடங்காவே - பராசக்தி
சூரத் தனங்க ளெல்லாம்
வல்லமை தந்திடுவாள் - பராசக்தி
வாழி யென்றே துதிப்போம்
*(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)*

3. வெற்றி வடிவேலன் - அவனுடை
வீரத்தினைப் புகழ்வோம்
சுற்றி நில்லாதே போ! - பகையே!
துள்ளி வருகுது வேல்
*(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)*

4. தாமரைப் பூவினிலே - சுருதியைத்
தனியிருந் துரைப்பாள்
பூமணித் தாளினையே - கண்ணி லொற்றிப்
புண்ணிய மெய்திடுவோம்.
*(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)*

5. பாம்புத் தலைமேலே - நடஞ் செயும்
பாதத்தினைப் புகழ் வோம்
மாம்பழ வாயினிலே - குழலிசை
வண்மை புகழ்ந்திடுவோம்

*(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)*

6. செல்வத் திருமகளைத் - திடங்கொண்டு
சிந்தனை செய்திடுவோம்
செல்வமெல்லாந் தருவாள் - நம தொளி
திக்க னைத்தும் பரவும்

*(ஓம் சக்தி ஓம் சக்தி ஓம்)*



## இலக்குமி துதி



கொழுதியிசை அளிமுரலும் தாமரைமென்
பொகுட்டிலுறை கொள்கை போல
மழை உறழுந் திருமேனி மணிவண்ணன்
இதயமலர் வைகும் மானே
முழுதுலகும் இனிதீன்ற அருட்கொம்பே
கரகமலம் முகிழ்த்(து) எந்நாளும்
கழிபெருங்காதலின் தொழுவோர் வினைதீர
அருள் கொழிக்கும் கமலக்கண்ணாய்
கமலை திருமறு மார்பன் மனைக்கிழத்தி
செங்கமலக் கையாய் செய்ய
விமலை பசுங்கழை குழைக்கும் வேனிலான்
தனையீன்ற விந்தை தூய
அமுத கும்ப மலர்க்கரத்தாய் பாற்கடலுள்
அவதரித்தாய் அன்பர் நெஞ்சத்
திமிரம் அகன்றிட ஒளிரும் செழுஞ்சுடரே
எனத் துதிப்போர் சிந்தை சேர்வாய்.

சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம்சிவம்
சுத்த சக்தி சுத்த சக்தி சுத்த சக்தி ஓம்சிவம்

சத்தியஞான தர்ம சக்தி சாந்த சக்தி ஓம்சிவம்
சச்சி தானந் தாத்ம சக்தி சர்வ சக்தி ஓம்சிவம் (சுத்த)

வேதசாஸ்திர சகலகலா வித்யாசக்தி ஓம்சிவம்
வீரதீர தைர்யசக்தி விஜயசக்தி ஓம்சிவம் (சுத்த)

நாதகீத கானகலா நடனசக்தி ஓம்சிவம்
மகாமந்த்ர யந்த்ர தந்த்ர வஸிய சக்தி ஓம்சிவம் (சுத்த)

துஷ்டசத்ரு நாசசக்தி துர்க்காசக்தி ஓம்சிவம்
அஷ்டலட்சுமி ஞானவாணி அமரசக்தி ஓம்சிவம் (சுத்த)

குஞ்சிதபத அபயஹஸ்த வாஞ்சிதபல தாயகம்
குருபரசிவ ஹரஹரநட ராஜசுத்த சக்தி ஓம் (சுத்த)



# சரஸ்வதி பாடல்கள்

## சரஸ்வதி அந்தாதி காப்பு

(கவியரசு கம்பர் அருளியது)

ஆயகலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விற்கும் என்னம்மை - தூய
உருப்பளிங்கு போல்வாளென் உள்ளத்தின் உள்ளே
இருப்பாள் இங்கு வாராதிடர்

படிகநிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரைபோற் கையும் - துடியிடையும்
அல்லும் பகலும் அனவரதமும் துதித்தாற்
கல்லும் சொல்லாதோ கவி

## சரஸ்வதி துதி

வெள்ளைக் கலையுடுத்து வெள்ளைப் பணிபூண்டு
வெள்ளைக் கமலத்தே வீற்றிருப்பாள் - வெள்ளை
அரியா சனத்தி லரசரோ டென்னைச்
சரியா சனம் வைத்த தாய்

தாவறு முலகெலாந் தந்த நான்முகத்
தேவுதன் துணைவியாய்ச் செறிந்த பல்லுயிர்
நாவுதோ றிருந்திடு நலங்கொள் வாணிதன்
பூவடி முடிமிசை புனைந்து போற்றுவாம்.

# அபிராமி அந்தாதி

தனந் தருங் கல்வி தருமொரு நாளுந் தளர்வறியா
மனந் தருந் தெய்வ வடிவுந் தரு நெஞ்சில் வஞ்சமில்லா
வினந் தரு நல்லன வெல்லாந் தருமன்ப ரென்பவர்க்கே
கனம் தரும் பூங்குழ லாளபி ராமி கடைக் கண்களே

**ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்**
**ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம் ஓம் சக்தி ஓம்**

சுந்தர வதனி சுகுண மனோகரி
மந்தகாச முகமதி வதனி
சந்தன குங்கும அலங்கார முடனே
தந்திடுவாய் உந்தன் தரிசனமே (ஓம் சக்தி)

நந்தி தேவருடன் முனிவரும் பணிய
ஆனந்தமுடனே வந்திடுவாய்
வந்தனை செய்து மாயன் அயனுடன்
வகையாய் உன்புகழ் பாடிடவே (ஓம் சக்தி)

தங்கச் சிலம்பு சலசல வென்றிட
தாண்டவ மாடித் தனயன் மகிழ்ந்திட
பொங்கும் ஆனந்தமுடன் புவிமேல் விளங்கும்
மங்கள நாயகி மகிழ்வாய் வருவாய் (ஓம் சக்தி)

வேதங்கள் உன்னை வேண்டிப் பாடிட
விரும்பி சரஸ்வதி வீணை வாசித்திட
சதானந்தமான ஜோதிஸ்வரூபி
ராஜராஜேஸ்வரி சரணம் சரணம் (ஓம் சக்தி)

மாணிக்க வீணையேந்தும் மாதேவி கலைவாணி
தேன் தமிழ் சொல்லெடுத்துப் பாடவந்தோம் - அம்மா
பாடவந்தோம் அம்மா பாடவந்தோம்

அருள்வாய் நீ இசை தருவாய் நீ இங்கு வருவாய் நீ
நலம் தரும்வேணி அம்மா

(மாணிக்க.....)

நாமணக்க பாடி நின்றாய் ஞானம் வளர்ப்பாய்
பூமணக்க பூஜை செய்தால் பூவை நீ மகிழ்வாய்

(மாணிக்க.....)

வெள்ளைத் தாமரையில் வீற்றிருப்பாள் - எங்கள்
உள்ளக் கோயிலிலே உறைந்திருப்பாள்
கள்ளமில்லாமல் தொழும் அன்பருக்கே என்றும்
அள்ளி அறிவைத் தரும் அன்னையும் நீயே

வாணி சரஸ்வதி மாதவி பார்வதி. வாகதீஸ்வரி மாலினி
கானும் பொருளில் தோன்றும் கலைமணி வேண்டும்
வரம் தரும் தேவி நீ
நான்முகன் நாயகி மோகன ரூபினி நான்மறை
போற்றும் தேவி நீ
வானவர் அமுதே தேன்மழை சிந்தும்
கானமனோஹரி கல்யாணி

(மாணிக்க.....)

# சரஸ்வதி தேவியின் புகழ்

வெள்ளைத் தாமரைப் பூவில் இருப்பாள்
வீணை செய்யும் ஒலியில் இருப்பாள்
கொள்ளை இன்பம் குலவு கவிதை
கூறு பாவலர் உள்ளத் திருப்பாள்
உள்ள தாம் பொருள் தேடி யுணர்ந்தே
ஓதும் வேதத்தின் உள்நின் றொளிர்வாள்
கள்ள மற்ற முனிவர்கள் கூறும்
கருணை வாசகத் துட்பொருளாவாள் (வெள்ளை)

மாதர் தீங்குரற் பாட்டில் இருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்
கீதம் பாடும் குயிலின் குரலைக்
கிளியின் நாவையிருப்பிடம் கொண்டாள்
கோத கண்ற தொழிலுடைதாகி
குலவு சித்திரம் கோபுரம் கோயில்
ஈதனத்தின் எழிலிடை யுற்றாள்
இன்பமேவடி வாகிடப் பெற்றாள் (வெள்ளை)

வஞ்சமற்ற தொழில் புரிந் துண்டு
வாழும் மாந்தர் குல தெய்வ மாவாள்
வெஞ்ச மர்க்குயி ராகியி கொல்லர்
வித்தை யெர்ந்திடு சிற்பியர், தச்சர்
மிஞ்ச நற்பொருள் வாணிகஞ் செய்வோர்
வீரமன்னர் பின் வேதியர் யாரும்
தஞ்ச மென்று வணங்கிடும் தெய்வம்
தரணி மீதறி வாகிய தெய்வம் (வெள்ளை)

தெய்வம் யாவும் உணர்ந்திடும் தெய்வம்
தீமை காட்டி விலக்கிடும் தெய்வம்
உய்வமென்ற கருத்துடையோர்கள்
உயிரினுக்குயி ராகிய தெய்வம்
செய்வமென்றொரு செய்கை யெடுப்போர்
செம்மை நாடிப் பணிந்திடு தெய்வம்
கைவருந்தி உழைப்பவர் தெய்வம்
கவிஞர் தெய்வம் கடவுளர் தெய்வம் (வெள்ளை)

செந்தமிழ் மணி நாட்டிடை யுள்ளீர்!
சேர்ந்தித் தேவை வணங்குவம் வாரீர்!
வந்தனம் இவட்கே செய்வ தென்றால்
வாழி ய∴திங் கெளிதன்று கண்டீர்
மந்திரத்தை முனுமுனுத் தேட்டை
வரிசை யாக அடிக்கி அதன்மேல்
சந்தணத்தை மலரை இடுவோர்
சாத்திரம் இவள் பூசை யன்றாம் (வெள்ளை)

வீடு தோறும் கலையின் விளக்கம்
வீதி தோறும் இரண்டொரு பள்ளி
நாடு முற்றிலும் உள்ளன வூர்கள்
நகர்களெங்கும் பல பல பள்ளி
தேடுகல்வி யிலாதொரு ஊரைத்
தீயி னுக்கிரை யாக மடுத்தல்
கேடு தீர்கும் அமுதமென் அன்னை
கேண்மை கொள்ள வழியிவை கண்டீர் (வெள்ளை)

ஊணர் தேசம் யவனவர்தந் தேசம்
உதய ஞாயிர் றொழி பெருநாடு
சேண கன்றதோர் சிற்றடிச் சீனம்
செல்வ பார சிகப்பழந் தேசம்
தோண லத்த துருக்கம் மிசிரம்
சூழ் கடற்கப் புறத்தினில் இன்னும்
காணும் பற்பல நாட்டிடை யெல்லாம்
கல்வித் தேவியின் ஒளி மிகுந் தோங்க (வெள்ளை)

ஞானம் என்பதோர் சொல்லின் பொருளாம்
நல்ல பாரத நாட்டிடை வந்தீர்!
ஊனம் இன்று பெரிதிழைக் கின்றீர்
ஓங்கு கல்வி யுழைப்பை மறந்தீர்
மானமற்ற விலங்குக ளொப்ப
மண்ணில் வாழ்வதை வாழ்வென லாமோ?
போன தற்கு வருந்துதல் வேண்டா
புன்மை தீர்ப்ப முயலுவம் வாரீர் (வெள்ளை)

இன்னறுங் கனிச் சோலைகள் செய்தல்
இனிய நீர்த்தண் சுனைகள் இயற்றல்
அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதி னாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி யொளிர நிறுத்தல்
அன்னை யாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக் கெழுத் தறிவித்தல் (வெள்ளை)

நிதி மிகுந்தவர் பொற் குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவு மற்றவர் வாய் சொல் அருளீர்!
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத் தே மொழி மாதர்க ளெல்லாம்
வாணி பூசைக் குரியன பேசீர்
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப் பெருந் தொழில் நாட்டுவம் வாரீர் (வெள்ளை)



# சகலகலாவல்லி மாலை

குமரகுருபரர் அருளியது

வெண்டா மரைக்கன்றி நின்பதம்
தாங்க என்வெள்ளை யுள்ளத்
தண்டா மாரைக்குத் தகாதுகொலோ?
சகம் ஏழும்மளித்(து)
உண்டான் உறங்க ஒழித்தான் பித்(து)
ஆகஉண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே!
சகல கலாவல்லியே!

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும் பொற்கொடியே
கனதனக் குன்று மைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே!

அளிக்குஞ் செழுந்தமழ்த் தெள்ளமு (து)
ஆர்ந்துன் அருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொலோ?
உளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்திக் கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே!

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்வாய்
வடநூற்கடலும்
தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர் செந்நா வினின்று
காக்கும் கருணைக் கடலே
சகல கலாவல்லியே!

பஞ்சப் (பு) பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்(து) அல ராததென்னே?
நெடுந் தாட் கமலத் (து)
தஞ்சத் துவசம் உயர்த்தோன்செந்
நாவும் அகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் (து) திருந்தாய்
சகல கலாவல்லியே!

பண்ணும் பரதமும் கல்வியும்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழு(து) எளி(து) எய்தநல்
காய், எழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும் வெங் காலும்அன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்!
சகல கலாவல்லியே!

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனும் என்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல்

காய், உளங் கொண்டுதொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதம் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே!
சகல கலாவல்லியே!

சொல்விற் பனமும் அவதானமும்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யும்தந் தடிமைகொள்
வாய், நளி ணாசனம்சேர்
செல்விக்(கு) அரிதென்(று) ஒருகால
மும்சிதை யாமை நல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே!

சொற்கும் பொருட்கும் உயிராம்மெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?
நிலந்தோய் புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ(டு)
அரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாயே!
சகல கலாவல்லியே!

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னரும்என்
பண்கண் டளவிற் பணியச் செய்
வாய், படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பில் உன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ?
சகல கலாவல்லியே!



# அயலவர் அஞ்சலி



அன்பான மனதிலே அருள் பெருக்கி
  அனைவரையும் அரவணைத்துக் காத்த செம்மல்
துன்பங்கள் மற்றவரைச் சூழ்ந்த போது
  துயர் துடைத்த பேராளன் மறைந்த செய்தி
பேரிடியாய் எம் நெஞ்சில் விழுந்ததம்மா
  வெள்ளத்துள் துரும்பு போல் கலங்குகின்றோம்
உள்ளத்துள் தேங்கியுள்ள துன்பந் தன்னை
  உரைத்திங்கு சொல்வதற்கு வார்த்தையில்லை.

ஊர் போற்றும் பண்பாளன் கனகராசா எனும்
  உத்தமன் இறைவனடி சேர்ந்திட்டாரே
கண் இமைக்கும் நேரத்தில் மறைந்த சீவன்
  கதறி அழுதாலும் வரப் போவதில்லை.
வட கிழக்கு மாகாணப் பதிவு ஆணையாளர்
  வித்தகனாம் வேலுப்பிள்ளை கனகராசா
முடிந்திட்டார் என்று நாம் சொல்வது பொய்
  முளைத்திட்டார் என்பதே மெய்.

ஆகாய முழுநிலவும் தேயும்
  அதனொளியும் மங்கும்
அழகாய்ப் பூத்த வாடாத புது மலரும் வாடும்
  அதன் மணமும் தேயும்
தேயாது செந்தமிழும் அதன் சுவையுமென்பார்
  அது போல வாடாது உன் நினைவும்
அன்பும் உயிர் உள்ளவரை
  எம் நெஞ்சத்திலே

காலம் வைத்த கணக்கு முடிந்தது
  காலன் வந்தான் அழைத்துச் சென்றான்
கதறி அழுது கண்டது என்ன?
  நாமும் ஓர் நாள் நாயகன் பாதம்

**சின்னத்துரை சண்முகராஜா (ஜெயா)**
**லக்கி கல்வி நிலையம்**

# கர்மயோகி அமரர் கனகராசா

திருவாளர் வேலுப்பிள்ளை கனகராசா அவர்களின் மறைவுச் செய்தி அறிந்த போது ஆழ்ந்த அதிர்ச்சிக்குள்ளானேன். மனைவியுடன் அவரது இல்லம் சென்று அஞ்சலி செலுத்திய போது கவலையில் கண்ணீர் கசிந்தது.

சில மாதங்களுக்கு முன் அவரைப் பார்க்கவேணுமென்ற விருப்பம் ஏற்பட்டது. மனைவியும் நானும் சென்று பார்த்து சுமார் ஒரு மணித்தியாலமளவில் எங்கள் சுகதுக்கங்களைப் பகிர்ந்து கொண்டமை இன்று போல் நினைவில் பதிந்துள்ளது. எங்கள் உடல் நிலைத்தளர்ச்சி, அடிக்கடி சந்தித்துப் பழக இடமளிக்கவில்லை.

இன்னும் சில வருடங்கள் அவர் வாழ்ந்திருக்கலாம் என நினைத்தேன். என் செய்வது? பிறப்பும் இறப்பும் இவையிரண்டிற்குமிடைப் பட்ட வாழ்வும் இறைவன் கிருத்தியத்துக்குட்பட்டது. இது தான் யாம் கூறும் விதி !

"நெருநல் உளனொருவன் இன்றில்லை எனும்
பெருமையுடைத்திவ்வுலகு"

என்றார் பொய்யாமொழி. நேற்று இருந்தவர் இன்றில்லை. இது உலக நியதி. நாம் நினைத்தாலும் இவ்வுலக நியதியை மாற்ற முடியுமா?

அமரர். வே. கனகராசா அவர்கள் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் மட்டக்களப்புப் பிராந்திய அலுவலகமான காணிப்பதிவகமும் மாவட்டப் பதிவகமுமான பணிமனையில் நான் கடமை புரிந்த வேளை 1970ம் ஆண்டளவில் மாற்றலாகி வந்திருந்தார். முதன் முதலில் அங்குதான் சந்தித்தேன்.

மும்மொழித் தேர்ச்சி எங்களுக்கு இருந்ததால் காணிப் பதிவு நிர்வாக எழுதுநராக அவரும் மாவட்டப் பதிவு நிர்வாக எழுதுநராக நானும் கடமை புரியப் பணிக்கப்பட்டோம்.

பின்னர் பதிவாளர் சேவையில் சேர்ந்து மாவட்டப் பதிவாளராகவும், பின் உதவிப் பதிவாளர் நாயகமாகவும் கடமை புரிந்தோம்.

ஒரே திணைக்களத்தில் நாங்கள் இருவரும் சேவையிலிருந்து ஓய்வு பெறும் வரை பணிபுரிந்ததால் எங்கள் உறவு வளர்ந்தது. பாசமுள்ள குடும்ப உறவினர் பிணைப்புடன் பழகி வந்தோம். அவர் தம்பிக்குத் தம்பியாகவும், நண்பனுக்கு நண்பனாகவும் பழகிய உயரிய பண்பாளர். எனது குடும்பத்தில் நிகழ்ந்த இன்ப துன்பங்களிலெல்லாம், அவரது குடும்பத்துடன் சொந்தக்காரன் போல் கலந்து சிறப்பித்து வந்தார். நானும் அவ்வாறே!

அமரர் கனகராசா ஆளுமை மிக்க செயல் ஊக்கம் கொண்டவராக இருந்த தோடல்லாது தலைமைத்துவத்துக்குக் கௌரவமளித்து பணி புரிந்த கர்மவீரர். சகலருடனும் கலகலப்பாகப் பேசிப் பழகும் ஒழுக்க சீலர். சோர்வு அவரிடம் இருந்ததில்லை. தன்னை அணுகும் பொது மக்களுக்கு எவ்வாறு உதவலாம் என்றே சிந்தித்து செயல்பட்டவர்.

அமரர் யாழ்ப்பாணம் நயினா தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவர். மட்டக்களப்பு செங்கலடியையும், பூம்புகாரையும் வதிவிடமாகக் கொண்டு வாழ்ந்தவர். "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற புறநானூறு கூற்றுக்கு இணங்க பிரதேச வித்தியாசமின்றி சகலருடனும் இணைந்து சகோதரத்துவத்துடன் செயலாற்றிய சீராளர். இதனை தனது மக்களுக்கு யாழ்ப்பாணம், மட்டக்களப்பு போன்ற பகுதிகளிலிருந்து வாழ்க்கைத் துணைவர்களைத் தேர்ந்தெடுத்ததன் மூலம் நிரூபித்துக் காட்டியுள்ள செயல்வாதி.

அமரர் கனகராசா தன் மனைவிக்கு அன்பான கணவராகவும் பிள்ளைகளுக்கு பாசமிக்க தந்தையாகவும் வாழ்ந்து பொறுப்புள்ள நல்ல குடும்பத் தலைவனாக விளங்கியவர். நிரஞ்சன் எனும் ஆணையும், நிரஞ்சனி, சுதர்சினி, அனுஷா எனும் மூன்று பெண்களையும் நன் மக்களாக இறைவன் அளித்திருந்தான். இவர்களைக் கல்வியில் முன்னிற்க அயராது பாடுபட்டு வெற்றியும் கண்டு மகிழ்ந்த பெருமகன்.

அவரது அனைத்துப் பணிகளுக்கும் மனைவியான பராசக்தி அம்மையார், கனக சக்தியாகவிருந்து உதவியும் ஒத்துழைப்பும் நல்கி வந்தார். பிள்ளைகளையும் அவரையும் அன்போடு நன்கு பேணி தகைசான்ற சொற்காத்து சோர்விலாத மனையாளாக செயலாற்றினார்.

"மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்
நன்மங்கலம் நன் மக்கட் பேறு"

இவை அமரர் பெற்றபேறு. இவரது குடும்பத்தை ஒரு சகலகலை பட்டறை எனலாம். ஆசிரியர்கள், கணனிவள முகாமையாளர், பொறியியலாளர், வைத்தியக் கலாநிதிகள் மற்றும் கணக்காளர் போன்றோர் அலங்கரித்துள்ளமை அவரது அயராத உழைப்புக்கு கிடைத்த வெகுமதியாகும்.

அமரர் ஓர் ஆன்மீகவாதி. ஏனைய இந்து ஆலயங்களை வழிபட்டு வந்தாலும், செங்கலடியில் எழுந்தருளி அருள் பாலிக்கும் விநாயகர் மற்றும் பூம்புகாரில் அருளாட்சிபுரியும் கண்ணகை அம்மன் ஆகிய ஆலயங்களின் மீது ஆழமான பக்தி கொண்டவராவர். இந்த ஆலயங்களின் நிர்வாகப் பணிகளிலும் பங்கு கொண்டு தன்பங்களிப்பை நல்கிவந்ததாக அறிகின்றேன்.

அவர் அமரத்துவம் எய்தியது நம் அனைவருக்கும் பேரிழப்பாகும். இறைவன் திருவுளப்படி நடந்து விட்ட இதனை எண்ணி அழுது புலம்பி கவலைப்படுவது எங்கள் மனதுக்கு சற்று ஆறுதலாக இருப்பினும்

"ஆண்டாண்டு தோறுமழுது புரண்டாலும்
மாண்டவர் வருவரோ மாநிலத்தில் – வேண்டா
நமக்கு மதுவழியே...... "

என்ற ஔவையார் வாக்குப்படி நமக்கும் அவர் சென்ற வழியே உளது என எண்ணி ஆறுதல் அடைவது தான் ஏற்புடையதாகும்.

அவரது பிரிவுத்துயரால் கவலைப்படும் மனைவி, மக்கள், உற்றார் உறவினர் துயரத்தில் யானும் பங்கு கொள்கின்றேன். அவரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

"வெற்றி வேலாயுதப் பெருமாளே
முத்தியே சேர்வதற் கருள்வாயே"
சாந்தி

**கலாபூஷணம். சா. முத்துக்குமாரன்**
உதவிப் பதிவாளர் நாயகம் ( ஓய்வு நிலை )

கல்லடி,
மட்டக்களப்பு

# எண்ண ஓட்டத்தில்......

வள்ளுவப் பெருந்தகையின் பொய்யாமொழி "எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய் நன்றி கொன்ற மகற்கு" என்பதற்கமைய இவ்விடத்தில் அமரர் வேலுப்பிள்ளை கனகராசா ஐயா அவர்களுக்கு நான் ஒரு காணிப்பதிவாளர் என்ற வகையில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன் காரணம் என்னை காணிப்பதிவாளராக உருவாக்கியவர்களில் அமரர் வேலுப்பிள்ளை கனகராசா ஐயா அவர்களும் ஒருத்தர். 2004ம் ஆண்டு பதிவாளர் சேவை II இற்கு ஆட்சேர்ப்பிற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது நானும் இன்னும் சிலரும் ஐயா அவர்களை அணுகி பதிவாளர் நாயகம் திணைக்கள பாடவிதானங்களை பரீட்சைக்கு தயார்ப்படுத்த உதவுமாறு கேட்டுக் கொண்டோம். இதற்கு இன்முகத்துடன் வரவேற்று "தனக்கு பின்னர் இங்கு எவரும் பதிவாளர் சேவை II இற்கு தெரிவாகவில்லை என்றும்" எங்களது முயற்சிக்கு தனது பூரண ஒத்துழைப்பினை வழங்க தயாராக உள்ளதாகவும், அத்துடன் ஏனைய பாடவிதானங்களை பரீட்சைக்கு ஏற்றவாறு தயார்செய்யவும் அறிவுரையையும் கூறினார். அத்துடன் தனது கருத்தை செயலிலும் காட்டினார். இதனடிப்படையில் இறையருளினால் தமிழ்மொழி மூல பரீட்சாத்திகளில் நான் இரண்டாம் இடத்தினை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது.

அமரர் வேலுப்பிள்ளை கனகராசா ஐயா அவர்கள் ஒரு செயல்வீரன். பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் பிரதான கடமைகளில் ஒன்றான அசையும், அசையா சொத்துக்களின் ஆவணங்களை பதிவு செய்தலில் ஐயா அவர்கள் தன்னிகரற்றவர். கடந்த 1990ம் ஆண்டு ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையில் ஆவணங்களை பதிவு செய்தலில் தேக்கநிலை காணப்பட்டது. ஐயா அவர்கள் மட்டக்களப்பு காணிப்பதிவகத்திற்கு இடமாற்றம் பெற்று வந்து கடமையினை பொறுப்பேற்ற பின்னர் நேரம் காலம் பாராது, வார இறுதி நாள் பாராது கடமை புரிந்தமையினால் அவை சில மாதங்களில் சீராக்கப்பட்டன. இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக அதிகளவான காணிப்பதிவுப் புத்தகங்களில் ஐயா அவர்களது ஒப்பத்தினைக் காணலாம். தனக்குரித்தான பதவி உயர்வுகள்

அனைத்தையும் பெற்றாலும் தனது உடல் நலக் குறைவு, குடும்ப பொறுப்பு என்பவற்றால் அவற்றை முழுமையாக அனுபவிக்கமுடியாத துர்ப்பாக்கியசாலியானார். பதிவாளர் நாயகம் திணைக்களத்திலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் தேர்தல்கள் திணைக்களத்தில் தடம்பதித்து தனது திறமைகளை மேலும் பறைசாற்றியுள்ளார்.

அமரர் வேலுப்பிள்ளை கனகராசா ஐயா அவர்களது குடும்பம் எனது மூத்த சகோதரனினால் கடந்த 1987ம் ஆண்டு தொடக்கம் எனக்கு அறிமுகமானது. எனினும் 1993ம் ஆண்டு தொடக்கம் அலுவலக ரீதியாக மேலும் ஐயாவுடன் நெருக்கம் உண்டானது. அநேகமாக ஐயா அவர்களது கடமை உணர்வு, பொறுப்புக் கூறும் தன்மை, பொதுச் சொத்துக்களை பாதுகாத்தல், எடுத்துக்காட்டான செயற்பாடு என்பன உயர்வானது. இதனை தனது பொது வாழ்விலும், தனிப்பட்ட வாழ்விலும் கடைப்பிடித்தமை வெளிப்படையானது. பொதுவாக காணிப்பதிவாளர்களுக்கு வேலைப்பழு அதிகம். அப்படியிருந்தும் தனது எச்சங்களான பிள்ளைகளை நற்பிரஜைகளாக உருவாக்குவதில் ஐயா அவர்கள் ஒருபோதும் பின்னிற்கவில்லை. இப்படியாக ஐயா அவர்களது திறமைகளை ஒவ்வொன்றாக அடுக்கிக் கொண்டே போகலாம்.

அமரர் வேலுப்பிள்ளை கனகராசா ஐயா அவர்களது பிரிவால் தலைவனை இழந்து தவிக்கும் குடும்பத்தாருக்கும், உறவுகளுக்கும் பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் சார்பில் எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆத்மா சாந்திடைய எல்லோருக்கும் பொதுவான இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**க. திருவருள்**
காணி ப்பதிவாளரும்
மேலதிக மாவட்ட பதிவாளரும்
மட்டக்களப்பு.

# மானிடம் மறைவதில்லை.....

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"

என்ற பொய்யாமொழிப் புலவரது கூற்றுக்கிணங்க இவ்வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து மறைந்த அமரர் வேலுப்பிள்ளை கனகராசா அவர்களை நான் சந்தித்தது மட்டக்களப்பு கச்சேரியில் அவர் மாவட்ட காணிப்பதிவாளராக கடமையாற்றிய போதாகும்.

எப்போதும் மலர்ந்த முகத்துடன் அகமகிழ்ந்து உரையாடுவதும், ஏனையோருக்கு உதவுகின்ற நல்ல மனநிலையும், மானிடமும் குடி கொண்டிருந்த ஒரு நல்ல மனிதராக அவரைக் கண்டேன். அரச உத்தியோகத்தருக்கு ஒரு நல்ல உதாரண புருசராக அனைத்து பண்புகளையும் அவர் கொண்டிருந்தார் எனின் மிகையாகா.

"பதவி பலரை அலங்கரிக்கின்றது
சிலரே பதவியை அலங்கரிக்கின்றனர்"

அந்த வகையில் இரண்டாம் திறத்தவராக திருவாளர் கனகராசா அவர்களைக் கண்டேன். எந்த வேளையும் கடமையில் கருத்தும், கண்ணியமும், கட்டுப்பாடும் மிக்கவராக திகழ்ந்த ஒருவர்.

"தேவைப்பட்டோருக்கு சேவை செய்வோர் பேறு பெற்றார்"

என்பதற்கமைய தேவை கருதிய, மக்களுக்கு மனங்கோணாது அப்பளுக்கற்ற சேவை செய்தார்.

"காலத்தால் செய்த சேவை ஞாலத்தில் மாளப் பெரிது"

என்பதற்கமைய காலமறிந்து, உடன் சேவை செய்ததால், மக்கள் மனங்களில் இன்றும் நிலைத்திருக்கும் ஒரு நல்ல சேவகனாக அவர் திகழ்கிறார்.

இவ்வாறான நல்ல பண்புகளால் தான் அன்னாருக்கு பெயர் சொல்லக்கூடிய, மக்கட் செல்வங்கள் வாய்த்ததெனலாம்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

என்பதற்கமைய தக்காராக சமூகத்திற்கு நல்ல நான்கு பிள்ளைகளை எச்சங்களாக விட்டுச் சென்றிருக்கின்றார்.

"பிறந்தார் இறப்பார் என்பதுறுதி, இறந்தும் பெயர் நிலைக்க செய்வார் அரிது"

அரிதாக பெயர் நிலைக்க வாழ்ந்து, விதைத்தும் விருட்சமான அமரர் கனகராசா அவர்களின் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திக்கின்றேன்.

அன்னாரின் ஈடில்லா இழப்பில் துயருறும் மனைவி, பிள்ளைகள், மருமக்கள், உற்றார் உறவினர்களுக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"இறையடியில் இன்புற்றிருக்க இறைஞ்சுவதன்றி ஏதறிவோம்
பராபரமே"

**மா. உதயகுமார்**
மாநகர ஆணையாளர்
மட்டக்களப்பு

## நான் அறிந்த மனிதர்களுள்

அமரராகிவிட்ட திரு. வே. கனகராசா அவர்கள் கடமை, கண்ணியம், நேர்மை மிக்க ஒருவர் ஏறக்குறைய நாற்பது நாற்பத்தைந்து வருடகாலம் அவருடன் பழகி இருக்கின்றேன். ஆரம்பகாலத்தில் மட் / காணிப் பதிவகத்தில் காணிப்பதிவாளராக கடமைக்கு வந்தபோது எனது கடமையின் நிமித்தம் அவருடன் பழகும் சந்தர்ப்பம் கிடைத்தது. சிலகாலம் அங்கு கடமையாற்றிய அன்னார் அம்பாறை காணிப்பதிவகத்திற்கு என்று நினைக்கின்றேன் மேலதிக காணிப்பதிவாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்றார்.

அவர் மாற்றலாகிச் சென்றபோதும் கூட அவரின் குடும்பத்தினர் என் குடும்பத்தினருடன் அன்னியோன்னியமாக இருந்த காரணத்தால் எங்களது நட்பு மேலும் வளர்ந்தது. எனது குடும்பத்தின் நன்மை தீமைகளில் அவர்களும் கலந்து கொள்வார்கள். சில காலம் அம்பாறையில் கடமையாற்றிய அன்னார் கல்முனை காணிப்பதிவகத்திற்கு மேலதிக காணிப் பதிவாளராக சிலகாலம் கடமையாற்றினார். பின் 1993ம் ஆண்டு மட் / காணிப் பதிவகத்திற்கு மேலதிக காணிப் பதிவாளராக நியமனம் பெற்று வந்தார். இவ்வாறு படிப்படியாக உயர்வு பெற்று மட்டக்களப்பில் கடமையாற்றிய போது வட கிழக்கு வலயத்திற்கு பொறுப்பாக உதவிப்பதிவாளர் நாயகமாகவும் 1998ல் நியமிக்கப்பட்டார்.

அன்னாரின் பதவிக் காலங்களில் ஆரம்பம் முதல் அவர் உதவிப் பதிவாளர் நாயகமாக இருந்து ஓய்வு பெறும்வரை எனது கடமையின் நிமித்தம் அவருடன் நன்கு பழகியவன் கடமையில் நேர்மை மிக்க ஒரு மனிதர் தவறுகள் விடும்போதெல்லாம் அதைச் சுட்டிக்காட்டும் விதம் அவரை பண்பான அன்பான ஒரு அதிகாரியாக நான் கண்டேன். தனக்குக் கீழ் வேலை செய்யும் அனைத்து உத்தியோகத்தர்களையும் தன்னைப் போலும் கடமையில் கண்ணியம், கட்டுப்பாடு நேர்மை உள்ள மனிதர்களாக ஆக்க வேண்டும் என்னும் மனப்பாங்கில் அவர்களுடன் கண்டிப்பாக நடந்து கொள்வார். அதே நேரம் அவர்கள் விடும் தவறுகளையும் சுட்டிக்காட்டும் விதம் ஒரு தனிவிதம். கடமை நேரம் தவிர்ந்த மற்றைய நேரங்களில் ஒவ்வொருவர் மேசைக்கு அருகிலும் போய் நலம் விசாரிப்பார். குடும்பத்தினரைப் பற்றி கேட்பார் வேண்டிய புத்திமதிகளைச் சொல்வதை நான் பாத்திருக்கின்றேன்.

அதேபோல் கடமையின் நிமித்தம் அங்குவரும் பதிவாளர்கள் நொத்தாரிஸ்மார் அனைவருடனும் கடமையில் கண்டிப்பானவராகவும் தவறுகளைச் சுட்டிக் காட்டுபவராகவும் வேண்டிய ஆலோசனைகளை வழங்குபவராகவும் இருப்பார். சிறிது நேரத்தின் பின்னர் அவர்களுடன் சிரித்து கதைத்து நலம் விசாரிப்பார். இந்த நிருவாகத் திறமையாலும் அவரது ஆற்றலாலும் முன்னுக்கு வந்த ஒரு மனிதர் என்றால் அது மறைந்த திரு. V. கனகராசா அவர்களையே சாரும்.

என்னுடன் கதைக்கும்போது சொல்வார் குடும்பப் பொறுப்புகளை கவனிக்க தனக்கு நேரம் கிடைப்பதில்லை என்று ஆனால் அவரது குடும்பம் எந்தக் குறைகளும் இன்றி வாழ்ந்து கொண்டிருப்பது தெரியும். இத்தனைக்கும் காரணம் அவருக்குக் கிடைத்த மனையாளின் திறமை. தனி ஒருவரின் ஊதியத்தில் அவர் மிகச் சிறப்பாக வாழ்ந்தார் என்றால் அப்பெருமை அவரின் மனைவியையே சாரும். உறவினர் நண்பர்களின் நன்மை தீமைகளில் கலந்து கொள்ளத் தவறுவதே இல்லை. அன்னாரும் அவரின் மனைவியும் நல்ல நற்பண்புகளைக் கொண்ட நல்ல துணைவி கிடைத்ததால் தான் அவர் சொந்த வாழ்வில் கடமையிலும் சரி, பொருளாதாரத்திலும் சரி நல்ல நான்கு பிள்ளைகளையும் பெற்று சீராட்டி பாராட்டி வளர்த்து அவர்களுக்கு வேண்டிய போதெல்லாம் வேண்டியவைகளைச் செய்து கல்வி புகட்டி இன்று அத்தனை பிள்ளைகளையும் பட்டம் பதவி பெறச் செய்த பெருமை குடும்ப நிருவாகத் திறமை மிக்க ஒரு தாய் என்ற வகையில் அவரின் மனைவியையே சாரும் இவ்வாறு மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம் என்றுதான் கூறவேண்டும்.

அதேபோல் பிள்ளைகளும் நன்கு படித்து பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று இன்று நற்பிரஜைகளாக, பண்பானவர்களாக, அன்பானவர்களாக மற்றவர்களுடன் பழகும் பக்குவம் மிக்க பிள்ளைகளாக நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமை சேர்ப்பவர்களாக இருப்பது மாத்திரமல்ல நல்ல மருமக்களையும் குடும்பத்தில் சேர்த்துக் கொண்டு வாழ்ந்த பெருமைக்குரிய மாமனிதர் அவர்.

அவர் பதவியில் இருந்து ஓய்வு பெற்ற போதும் தான் சுகவீனம் உறும்வரை தான் கடமையாற்றிய இடத்தையும் அங்கு தன்னுடன் கடமையாற்றிய சக

உத்தியோகத்தர்களையும் வந்து சந்தித்து நலம் விசாரித்துச் செல்வதாக எனது மகள் அடிக்கடி சொல்வாள்.

அன்னார் இடையிடையே சுகவீனம் உற்றபோதும் தனது கடமை உணர்வுகளை என்றுமே மதித்தவர் பிறருக்கு உதவி செய்யும் மனப்பக்குவம் படைத்தவர் ஒருவரை வாழ்வில் உயர்த்த வேண்டும் என்று நினைப்பாரே தவிர அவரை தாழ்த்த வேண்டும் என்று என்றுமே நினைக்காத செய்யாத ஒரு மனிதர் திரு. கனகராசா அவர்கள்.

அன்னார் நாட்டிற்கு ஒரு நல்ல அதிகாரியாக சமூகத்திற்கு தனது கடமையைச் செய்திருக்கின்றார். அதேபோல் வீட்டிற்கும் ஒரு நல்ல கணவராக, தந்தையாக, மாமனாராக, தாத்தாவாக அவரவருக்கு வேண்டிய கடமைகளை வேண்டிய போது செய்து தனது இறுதிக் காலத்தில் குடும்பத்தாருடன் சந்தோஷமாக, நிம்மதியாக வாழ்ந்த ஒருவர் அவர் வாழ்வில் ஓய்வு பெற்று சந்தோஷமாக வாழ்ந்தாலும் மனிதர் ஒவ்வொருவரும் "பிறந்தார் இறப்பது திண்ணம்" என்ற கோட்பாட்டிற்கேற்ப வாழ்பவர்கள் தான். இவர் இவ்வுலகை விட்டுச் சென்றது பேரிழப்பாகும். இன்னும் சில காலம் வாழவேண்டியவர்கள், காலன் அழைத்தால் முன்பின் செல்ல வேண்டியவர்கள் நாங்கள்.

அன்னாரின் பிரிவு பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

**திரு. வை. க. விநாயகமூர்த்தி**
பிரசித்த நொத்தாரிசும்,
சித்த வைத்தியரும்
நொச்சிமுனை - மட்டக்களப்பு.

# அமரர் கனகராசா
# மனிதருள் மாணிக்கம்

காரணமதாக வந்து புவிமீது.... என்ற திருப்புகழ் வாசகத்திற்கு அமைய இப் புவி மீது வந்து பிறக்கும் ஒவ்வோர் உயிர்க்கும் ஒவ்வொரு நோக்கம் உண்டு.

மானிடப் பிறப்பு இவற்றுள் விசேடமானது. அரிது அரிது மானிடராதல் அரிது என்பது ஔவை வாய்மொழி. மனித உருவத்துடன் பிறந்தாலும் அவரிடத்தில் மானிடம் – மனிதத் தன்மை இல்லாவிட்டால் முழுமையான மனிதனாகக் கொள்ள முடியாது. இதனால் தான் "மானிடராதல் அரிது என்றார் ஔவை மூதாட்டி.

அமரர் திரு. கனகராசா அவர்கள் நம் ஊரவர் உறவினர் என்பதற்கப்பால் நல்லதோர் மானிடராய் வாழ்ந்தவர். 1996ம் ஆண்டு நான் தேர்தல் உதவி ஆணையாளராக மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வந்தபொழுது அன்னார் மேலதிக மாவட்டப் பதிவாளராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அடுத்தடுத்த வருடங்களில் உதவிப் பதிவாளர் நாயகமாகப் பதவியுயர்வு பெற்று அருஞ்சேவையாற்றியவர்.

அன்னாருடன் பழகிய காலங்கள் பல்வேறு படிப்பினைகளைக் கற்றுக் கொடுத்தது என்றால் மிகையாகாது. மிக நெருக்கடியான அந்தக் காலங்களில் ஒரு தந்தையைப் போன்று எனக்குப் பக்கத் துணையாக நின்று பக்குவம் சொல்லித் தந்தவர். நண்பனைப் போல இரவு பகல் பாராது தனது வயதையும் கடந்து தோளோடு தோள் நின்று உதவியவர். ஒரு ஆசானைப் போன்று எனக்குப் பல்வேறு ஆலோசனைகளை வழங்கி பொறுமை காக்கும் பக்குவத்தை வளர்த்தவர்.

தனது மும்மொழிப் புலமையாலும் அரச நிருவாகம் பற்றியதும் சிவில் சட்டம் பற்றியதுமான அறிவாற்றலினாலும் மாவட்ட நிருவாகத்திற்கும் தேர்தல் அலுவலகத்திற்கும் அருந்துணையாய் திகழ்ந்தவர்.

ஒரு சிறந்த மேலதிகாரியாக மட்டுமன்றி சிறந்த குடும்ப தலைவராகவும் அமரர் கனகராசா அவர்களின் வாழ்வு சிறந்திருந்தது.

நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் தனது பிள்ளைகளை கண்போல் காத்து ஊர்போற்றப் பேர் வாங்கும் உயர் பதவிகளில் அமரச் செய்தவர். தான் நோயுற்றுத் தளர்ந்த காலத்திலும் தன் தாய்மீது குறைவில்லாப் பாசம் வைத்தவர்.

இத்தகைய சிறந்த மானிடப் பண்புகள் நிறைந்த மனிதரோடு நாமும் சிலகாலம் வாழக் கிடைத்தமை பெரும்பேறே.

ஆரும் பிறந்து நூறும் கடந்து
வேர் கொண்டிங்கு விளைவாரோ
நீரும் பிறந்து நிலமும் கடந்து
சேரும் கடனென்றறிவோமே.

எனவே அமரர் கனகராசா அவர்கள் எமை விட்டுச் சென்றாலும் அன்னாரின் நற்பண்புகள் அமரரின் சந்ததியையும், அவர் சார்ந்த அனைவரையும் வழிநடத்தும் என்று நம்புவோமாக.

அன்னாரின் ஆன்மா நயினை அன்னையின் நிழலில் அமைதி கொள்ள இறைஞ்சுகின்றேன்.

ஓம் சாந்தி !!!

**அ. சிவபாலசுந்தரன்**
பிரதிப் பிரதம செயலாளர் - ஆளணியும் பயிற்சியும்
வடக்கு மாகாணம்

# மனிதருள் மாணிக்கமாய் எம் உள்ளத்துள் உறைந்துவிட்ட உத்தமர் !

நாம் எம் வாழ்வில் புதிது புதிதாக எத்தனையோ மனிதர்களை சந்திக்கின்றோம் - பேசுகின்றோம் - பழகுகின்றோம். ஆயின், அவ் எல்லோருமே எம் மனங்களில் இடம் பிடித்து விடுவதில்லை. ஒரு சிலர் மட்டுமே ஒவ்வோர் இதயங்களிலும் இடம் பிடித்து விடுகிறார்கள். அவ்வாறாக என் இதயத்தில் குடிகொண்ட மறக்க முடியா மனிதர்களில் ஒருவர் தான் அமரரான திருவாளர் கனகராசா ஐயா அவர்கள்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வமாகி விட்ட கனகராசா ஐயா அவர்கள், கடந்த 2004ம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளராக எனக்கு பணியாற்ற நியமனம் கிடைத்த நாட்களில் என்னுடன் அறிமுகமானார். அந்நாளில் மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளராக கடமையாற்றிக் கொண்டிருந்த திருவாளர் சிவபாதசுந்தரன் அவர்கள் அன்னாரை எனக்கு அறிமுகம் செய்து வைத்திருந்தார். அந்த முதல் சந்திப்பிலேயே அவர் என்னை தன்வயப்படுத்தி இருந்தார். "First impression is the best impression" என்றொரு பொன்மொழி ஆங்கில இலக்கியத்தில் வழக்கத்தில் உள்ளது. அதற்கேற்ப அந்த முதல் சந்திப்பிலேயே அவர் பற்றிய நல்லபிப்பிராயமொன்று என் மனதில் துளிர் விட்டிருந்தது.

அமைதியான - சாந்தமான நடை, உடை, பாவனை, ஆழ்ந்த சிந்தனையாற்றல், அன்பான வார்த்தைகள், ஆறுதல் தரும் பேச்சு, அகன்ற உள்ளம், இளகிய மனம், எவருடனும் இயல்பாகவே இனிமையாக எளிமையாக பழகும் பாங்கு போன்ற இன்னோரன்ன மானிடப் பண்புகளை நான் அவருடன் பழகிய நாட்களில் கண்டு வியந்து நின்றேன். இவை உண்மை - வெறும் புகழ்ச்சியல்ல.

மட்டக்களப்பு மாநகரில் எனக்கு பணியாற்ற கிடைத்த, ஏழாண்டு காலத்தில் ஏழுக்கும் அதிகமான தேர்தல்களை எவ்வித சிரமங்களுமின்றி முன் கொண்டு செல்வதற்கு எனக்கோர் நல்ல ஆலோசகராக, உற்ற நண்பராக,

உடன்பிறவா சோதரனாக, இன்னும் சில வேளைகளில் வேலைப் பழுக்களால் மன அழுத்தத்திற்கு (Stress) அல்லது பதட்டத்திற்கு (Tention) உள்ளாகும் சமயங்களில் எனக்கோர் நல்ல ஆற்றுப்படுத்துனராகவும் (Counsellor) செயற்பட்டு உண்மையான அரச அலுவலரொருவராக எனக்கு வழி காட்டினார் என்பதை பெருமையுடன் கூற முடியும். தேர்தல் சம்பந்தமான சட்ட நுட்பங்களிலும், தேர்தல் பணிகளிலும் மிகுந்த அறிவும், ஆற்றலும் அனுபவமும் மிக்கவராக விளங்கினார் என்றால் அது மிகையாகாது. மேலும் அவர் மும்மொழிப் புலமை பெற்ற அரச பணியாளராக விளங்கினார். அவரது சிங்களப் புலமை கண்டு வியந்தோர் பலருண்டு. எமது நாட்டின் தற்போதைய தேர்தல் ஆணையாளர் நாயகமாக விளங்குகின்ற திருவாளர் மகிந்த தேசப்பிரிய அவர்களும் கூட அவரிடத்தில் மிகுந்த அன்பும் மரியாதையும் கொண்டிருந்தார். உண்மையில் கூறப்போனால், அன்னார் ஓய்வு பெற்றபின் முற்று முழுதாக தேர்தல் திணைக்களத்தில் ஓர் மதிப்புக்கும், மரியாதைக்குமுரிய அலுவலராகவே பணியாற்றி வந்தார். அன்னாரது இழப்பு அவரது குடும்பத்திற்கு மட்டுமல்ல தேர்தல் திணைக்களத்திற்கும் கூட ஒரு ஈடு செய்ய முடியாத இழப்பென்றே கூறமுடியும்.

எனது அலுவலக விடயங்களுக்கு மேலதிகமாக, ஓய்வான தருணங்களில் எமது குடும்பத்தினருடன் அவர் மிகவும் நெருக்கமாக பழகி குடும்ப உறுப்பினர் ஒருவராகவே செயற்பட்டு வந்தார். எனது மகளின் பூப்படைந்த நிகழ்வின் போது, அதிகாலையிலேயே சமூகம் தந்து சமய சடங்குகளை முறைப்படி நடாத்தி முடிக்க முன்னின்று உழைத்தமை இன்றும் எம் கண்முன் நிழலாடுகிறது. எமது குடும்ப இன்ப துன்பங்களிலும் அவரது வீட்டு விசேடங்களிலும் அவர்களும் நாமும் குடும்ப சகிதம் பங்குபற்றுவதுண்டு. அந்நாட்களில் அவரினதும், அவரது மனைவி, பிள்ளைகள் அனைவரதும் அன்பான - பண்பான உபசரிப்பையும் விருந்தோம்பல் பண்பாட்டையும் நேரில் தரிசனம் செய்து மகிழ்வுற்ற சம்பவங்கள் மறக்க முடியாதவை. அவரைப் போலவே அவரது குடும்ப உறுப்பினர்களும் நற்பண்புகளில் ஒத்திசைவாயிருப்பது உண்மையில் போற்றுதற்குரியது. அவரது மனம் போலவே அவரது பிள்ளைகள், மருமக்களும் கல்வியில் உயர்ந்து நிறைவான வாழ்க்கை வாழ்ந்து வருவது கண்கூடு.

அரச அலுவலர்களுக்கு உரித்தான சேவை மனப்பாங்கு, அர்ப்பணிப்பு, கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்கின்ற ஒழுக்க நெறிகளையும் அன்பு, கருணை, பொறுமை, நேர்மை, புரிந்துணர்வு, விட்டுக் கொடுப்பு, கருத்தொருமைப்பாடு, சகிப்புத்தன்மை போன்ற இன்னோரன்ன மானிடப்பண்புகளையும் நிரம்பவே அவரிடம் கண்டு வியந்திருந்தேன்.

உண்மையில் அரச அலுவலர்களுக்கோர் உண்மையான சான்றாளனாக மானிட வாழ்க்கைக்கோர் உதாரண புருஷராக நிறைவாக வாழ்ந்து,

"தோன்றிற் புகழோடு தோன்றுக – அஃதிலார்

தோன்றலின் தோன்றாமை நன்று என்ற தெய்வப் புலவராம் திருவள்ளுவரின் வாக்கிற்கிணங்க இப்புவியில் புகழோடு தோன்றி வாழ்வாங்கு வாழ்ந்து இன்று வானுறையும் தெய்வத்தோடு ஒன்றித்துள்ளார்.

இத்தகைய இனிய பண்புகளுள்ள ஒரு மாண்பு மிக்க உத்தம மனிதரோடு பழகுவதற்கு வாய்ப்பளித்த இறைவனுக்கு நன்றி கூறி அத்தகையோரை இழந்து ஆற்றொணாத் துயரத்தில் துவண்டிருக்கும் அன்னாரின் அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள், பாசம் மிக்க மருமக்கள், பேரப்பிள்ளைகள், மற்றும் உற்றார் உறவினர்க்கு துன்பம் நீக்கி ஆறுதலளிக்கவும் அவ் உத்தமரின் ஆத்மா இறைவன் திருவடியில் நித்திய பேரானந்தம் பெற்று சாந்தியடையவும் இறையருளை வேண்டுகின்றேன்.

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

உங்கள் நினைவுடன்...

**நு. கிருஷ்ணானந்தலிங்கம்**

ஓய்வு நிலை இலங்கை நிருவாக சேவை அலுவலரும்,

முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளரும்

14 / 9, பொலிஸ் நிலைய வீதி,

சாவகச்சேரி.

## கனகராசா எனும் கனவு கலைந்தது....

நீர்க்குமிழி போன்றது வாழ்வு. அது நிலையில்லாதது. நயினாதீவில் பிறந்து, இராமநாதபுரத்தில் இடைபுகுந்து பின் செங்கலடியிலும், மட்டக்களப்பிலும் வாழ்ந்தவர் இவர். நான் வட்டக்கச்சியில் இருந்தமையால் அவரது குடும்பத்தை நன்கு அறிவேன்.

1952ல் 5ம் ஆண்டுப் புலமைப்பரிசில் பெற்று, நெடுந்தீவிலிருந்து, நானும் நயினாதீவிலிருந்து வேறு ஐவருடன் திரு. கனகராசாவும் யா / வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரிக்கு 18.05.1953ல் வந்து சேர்ந்தோம். அன்று தொடங்கியது பரிச்சயம். இளமை மிகவும் கஷ்டமான காலம். இது எங்கள் எல்லோருக்கும் பொதுவானது. அதனால் அவருக்குப் பிறர் கஷ்டம் தெளிவாகத் தெரியும் - புரியும் - விளங்கிக் கொள்ள முடிந்தது. இதனை Empathy என்பர்.

படிக்கும் போது மிகுந்த பொறுப்புணர்ச்சியுடன் படித்தார்.அந்தப் பொறுப்புணர்ச்சி கடைசிவரை நின்று நிலவியது. இவர் தனது பூரண சேவைக் காலத்தை மிகுந்த பொறுப்புணர்ச்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் வகித்தவர். தேவை அறிந்து, இன்னார், இனியார் என்று பாராமல் எல்லோருக்கும் உதவியவர். தன் விடாமுயற்சியாலும், கடும் உழைப்பாலும், அதீத அக்கறையாலும், ஆர்வமிகுதியாலும் புகழ் எனும் ஏணியில், அதில் உச்சப்படியான, வடக்கு, கிழக்கு உதவிப்பதிவாளர் நாயகம் ஆனார். அப்துல் கலாம் கூறினார் கனவு காணும் படி ஆனால் இவரோ ஒருபடி மேலே சென்று, கண்ட கனவை நனவாக்கி விட்டார். ஷேக்ஸ்பியர் கூறுவது போல, சிலர் பிறக்கும் போதே மகாமனிதர்களாகப் பிறக்கிறார்கள். சிலர், பெருந்தன்மையைப் பெற்றுக் கொள்கிறார்கள். ஒரு சிலர் மேல் பெருந்தன்மை திணிக்கப்படுகிறது. இவர் மேல் பெருந்தன்மை திணிக்கப்பட்டது. (Some are born great. Some achieve greatness; greatness is thrusted upon some one) இதற்கு முக்கிய உந்துசக்தியாக விளங்குவது அவரது குண இயல்புகளே. விடாமுயற்சி, கடும் உழைப்பு, நியாய உணர்வு, நேர்மை, பாராபட்சமின்மை, பொறுமை, இரக்கம், துணிவு ஆகியவை அவரிடம் அபரிமிதமாகக் காணப்பட்டன. இக்குணங்களில் பெரும்பாலானவை, வேந்தனது பண்புகள் (Kingly Virtues) அந்த வகையில் அவரும் ஒரு இராசாவே.

இவரை சமூகத்திற்கு நற்பணி ஆற்ற, உருவாக்கிய பெருமை 1953 - 1969 வரையான காலப்பகுதியில் யா / வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரி நல்லாசிரியர்களைச் சாரும். அன்றைய ஆசிரியப் பெருந்தகைகள் எவ்வளவு கவனமாக எங்களை

உருவாக்கினர் என்பது சொல்லில் அடங்காது, சொன்னாலும் இன்று நம்ப மாட்டார்கள். நாங்கள் அவர்களைச் சந்தித்திருக்காவிட்டால், நாம் எவ்வளவை இழந்திருப்போம் என்பது தெரியாமலே போயிருக்கும் (Had we not met out most respected Teachers we would never know, what we had lost)

இவர் உரும்பராயைச் சேர்ந்த பராசக்தி அவர்களை மணஞ் செய்து மூன்று பெண் மக்களையும், ஒரு மகனையும் பெற்று இசைபட வாழ்ந்தார். சாட்டுக்கு Sudden "Pace maker" Failure இவருக்கு யமனாக வந்தது. இது ஒரு முடிவின் ஆரம்பமாயிற்று. (Begining of an end). மனிதனின் கடைசி எழுச்சிதான் மரணம் என்பர். இவரைப் போன்ற குணாம்சமுடைய ஒருவரை நாங்கள் காணமாட்டோம் (Very difficult to find a preson of his calibre) இவரது குடும்பத்திற்கு இது ஈடு செய்ய முடியாத பேரிழப்பு. பிறரது வாழ்க்கையில் ஒளியூட்டுவதற்காக, ஓர் எரியும் மெழுகுதிரியாக இவர் வாழ்க்கை அமைந்து விட்டது. (Life is like a burning candle) வாழ்க்கை என்பது ஒரு வெறுங்கனவு (Life is but an empty dream) என்பார் H.W. Longfellow என்ற கவிஞர்.

இவர் எடுத்த காரியங்கள் எல்லாவற்றிலும் வெற்றி கண்டார். ஏனெனில் அவரது சிந்தனையிலும், செயலிலும், உண்மையும், புனிதமும் இருந்தன. (Sincerety of thought and purity of action).

அகநானூறில் "செம்புலப் பெயல் நீர் போல்" என ஒரு வரி வருகிறது. செம்மண்ணுள் பெய்த மழை போல என்பது பொருள். மழையும் மண்ணும் அது, இது என வித்தியாசம் தெரியாமல், தம்முள் இரண்டறக் கலந்து விடுவன. அதுபோல், இவரும் மட்டக்களப்பு மண்ணுள் இரண்டறக் கலந்து விட்டார். மண்ணுக்கும் மனிதனுக்கும் நடக்கும் போராட்டத்தில் இறுதி வெற்றி மண்ணுக்கே.

நாம் எல்லோரும், அவரை இழந்து விட்டோம் என எண்ணுகிறோம் ஆனால் Our loss is heaven's gain எங்களின் இழப்பு சுவர்க்கத்திற்கு நல்வரவு ஆகிவிட்டது. கிரேக்க புராணத்தில் Elysium என ஒரு சொர்க்காபுரி வருகிறது. இது சுவர்க்கத்தில் உள்ளது. அங்குள்ள 330 தேவ தூதர்கள் மிகுந்த ஆவலோடு, இவரை எதிர்பார்த்திருக்கின்றனர்.

இறைவன் யாரை அதிகமாக நேசிக்கின்றானோ, அவர்களை தன்னிடம் சீக்கிரமாக அழைத்து விடுவான் என்பர். அந்த வகையில் மனதைத் தேற்றுவோமாக. இவரிழப்பால்

ஆறாத கவலை அனைவருக்கும். என்றோ ஒரு நாள், இப் பொய்யான ஊனுடம்பு அழிவது மெய். இங்கு காலந்தான் முன் பின் ஆகும். அவ்வளவு தான் வித்தியாசம்.

யா / வயாவிளான் அரசினர் மத்திய கல்லூரியில் எங்களுக்கு, நயினாதீவைச் சேர்ந்த நல்லாசான் திரு. செல்லத்துரை அவர்களை சமஸ்கிருத மொழி படிப்பித்தார். அவர் சொல்லிய சுலோகத்துடன் இதனை நிறைவு செய்வோம்.

ஷைலே ஷைலே ந மாணிக்யம்,
மௌத்திகம் ந கஜே கஜே,
சாதவோ நஹி சர்வத்ர,
சந்தணம் ந வனே வனே!!

மலையில் இரத்தினக்கல் கிடைக்கும். ஆனால் எல்லா மலைகளிலும் கிடையாது. முத்து யானைத்தந்தத்துள் இருக்கிறது. ஆனால் எல்லா யானைத் தந்தங்களிலும் இல்லை. நல்லவர்கள் எம் மத்தியில் தான் இருக்கிறார்கள். ஆனால் எல்லோரும் அப்படி இல்லையே. காட்டு மரங்களுக்கிடையில் சந்தன மரம் காணப்படுகிறது. ஆயினும் நாம் காணும் மரங்களெல்லாம் சந்தன மரங்கள் ஆகிவிடா. அன்னார், இரத்தினக்கல் போலவும், கஜமுத்து போலவும், சந்தன மரத்தைப் போலவும், அருமையானவராகவும், நல்லவராகவும், வல்லவராகவும் வாழ்ந்து போயினர். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்போமாக,

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

**க. நாகலிங்கம் B.A (Eng.Lit) Reading for M.A (Eng.Lit)**

சிங்கள மொழி போதனாசிரியரும், பரீட்சகரும்,
உத்தியோக மொழிகள் திணைக்களம் கொழும்பு,
வருகைப் போதனாசிரியர் - மொழி பெயர்ப்புக் கற்கைகள் கலாபீடம், யாழ் பல்கலைக்கழகம்,
இணைப்புச் செயலாளர், தலைமைச் செயலாளர் செயலகம்,
வடமாகாண சபை, நல்லூர், யாழ்ப்பாணம்,
(ஓய்வு நிலை, நிருவாக அலுவலர்)

**N.Sathasiva Iyer J.P**
*Rtd.Additional Registrar General*
*Notary Public*

112, V.E.Scheme,
Thirunelvely,
Kopay.

Tel. 0718293766 E-mail : sathasivaiyer@yahoo.com

# திருமதி கனகராசா குடும்பத்தினர்க்கு

தங்கள் குடும்பத்தலைவர் அமரரான செய்தி அறிந்தேன் எனது ஆழ்ந்த அனுதாபங்கள். அன்னார் நான் யாழ்ப்பாண காணிப்பதிவாளராக கடமையாற்றிய காலத்தில் மட்டக்களப்பு காணிப்பதிவாளராகவும் பின்னர் கிழக்கு வலய உதவிப்பதிவாளர் நாயகமாகவும் கடமையாற்றினார். அவரின் ஓய்வுக்குப்பின் கிழக்கு மாகாண உதவிப்பதிவாளர் நாயகமாக கடமையாற்றும் வாய்ப்புக்கிடைத்தது. அப்போது கிழக்கைப் பற்றி போதிய அனுபவமில்லாத எனக்கு சிறந்த வழிகாட்டியாக செயற்பட்டவர். அன்னார் தனது கடமைக் காலத்தில் எழுதிய அலுவலகக் குறிப்புகள் எமக்கு பேருதவியாக இருந்தன.

தமிழனாகிய நான் பதிவாளர் நாயகம் திணைக்களத்தில் மேலதிக பதிவாளர் நாயகமாக உயர்ந்த பதவிக்கு செல்ல வழிகாட்டியாக இருந்தவர்களில் திரு. கனகராசா ஐயாவும் ஒருவராவார்.

அன்னார் ஓய்வு பெற்ற பின்பும் சிவனே என்று இருந்துவிடாது அலுவலகம் வந்து தனது அனுபவத்தின் மூலம் எங்கள் சந்தேகங்களை தீர்த்துச் செல்வார்.

அன்னாரின் சேவை நட்பு நற்பண்பு என்றும் எம்மனதில் நிலைத்து நிற்கும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றேன்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

ந. சதாசிவ ஐயர்

# இதயம் நிறைந்த இனிய நண்பன் திருவாளர் வேலுப்பிள்ளை கனகராசா அவர்கள்

நான் மாவட்ட விவசாயப் பணிப்பாளராகக் கடமையாற்றிய காலத்தில் ஐயாவை அடிக்கடி சந்தித்தேன். அதன் காரணமாக எங்களிடையே நட்பு ஏற்பட்டது. பின்பு நான் கச்சேரி செல்லும்பொழுது நேரமிருக்கும் பொழுதெல்லாம் அவரையும் சந்திக்க வேண்டுமென்ற எண்ணம் எனக்கு ஏற்பட்டது. இதனால் சந்திப்புக்கள் கூடி நெருக்கமான சிநேகிதம் எங்களிடையே ஏற்பட்டது.

ஐயா அவர்கள் ஒரு சிறந்த பண்பாளன். எப்பொழுதும் அமைதியாகவும் எளிமையாகவுமே காணப்படுவார். எவருடனும் அன்பாகவே கதைப்பார். அவருடைய ஆணவமற்ற நடைமுறைகளால் அனைவரையும் கவர்ந்து கொண்டார். நாங்கள் மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களில் கலந்து கொள்ளுவோம். நான் மாவட்டம் முழுவதற்கும் கடமை நிமித்தம் செல்வதால் எனக்கு விவசாயம் மட்டுமல்ல பல பிரச்சினைகளையும் அறியக் கூடிய வாய்ப்பிருந்தது.

கச்சேரி கூட்டங்கள் ஆரம்பிப்பதற்கு முன்பும் அதன் பின்பும் ஐயா அவர்களின் அறையில் சந்திப்பேன். இருவரும் பல விடயங்கள் பற்றிப் பேசுவோம். அவர் எனக்குப் பெறுமதியான அறிவுரைகளை வழங்கி என்னை ஊக்கப்படுத்தியும் விடுவார். அவருடைய எண்ணங்கள் சிந்தனைகள் உண்மையானதாகவும், நீதி நேர்மையானதாகவும் பயனுள்ளவைகளாகவும் எனக்குப் பட்டது.

இக்காலத்தில் எனது மகளின் திருமணம் கல்லடியில் நடைபெற்றது. ஐயாவையே வருகை தந்து திருமணப் பதிவு செய்து தர வேண்டுமென்று கேட்டேன். அவர் மிக அமைதியாகச் சொன்னார் நான் அதைப் பார்க்கின்றேன் பின்னேரம் வேலை முடிந்து வரும் பொழுது உரிய

புத்தகங்களைக் கொண்டு வந்து அங்கே செய்வோம் என்று சொன்னார். அதே போல் நடைபெற்றது. அவரோ என்னிடமிருந்து எதுவித சன்மானத்தையும் பெற்றுக் கொள்ளவில்லை. நான் வலியுறுத்தியும் அவர் ஏற்கவில்லை. நான் எதிர்பார்த்தது அவரைஅழைத்து வர வாகனம் ஒன்றை ஒழுங்கு செய்ய வேண்டுமென்று தான். ஆனால் அவர் தன்னுடைய மோட்டார் சைக்கிளில் தான் வந்திருந்தார். அவருடைய எளிமையான இயல்புக்கு இது ஒரு சிறிய உதாரணம். இப்படிப்பட்ட நல்லவர்களை எப்படி எம்மால் மறக்க முடியும்.

நல்லவர்களை வல்லவர்களை உண்மையானவர்களை இழப்பது மிகவும் துக்ககரமான விடயமே. இருந்தாலும் பிறந்தவர் இறந்தேயாக வேண்டும் இது நியதி.

அன்னாரின் பிரிவால் துயருறும் துணைவியார் பிள்ளைகள் மற்றும் உறவினர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாநதி அடையப் பிரார்த்திக்கின்றேன்.

த. கனகசபை
முன்னாள் மாவட்ட விவசாயப் பணிப்பாளரும்,
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்
மட்டக்களப்பு.



# அமரர் வேலுப்பிள்ளை கனகராசா அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலிக்காக....

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்."

துயர் கரைய துதிக்கிறேன் சுந்தரா அருள்கொடு

ஓய்வுநிலைப் பதிவாளர் உத்தமனார் கனகராசா
மெய்வருத்தம் பாராது மேலான மக்களுக்காய்
செய்தொழிலை சிவபணியாய் செய்து வாழ்ந்தார்
மெய்ப்பணி செய்தவர்க்கு மேலானபேறு நிட்சயமே

பேருக்கு ஏற்ற பெரும்பொறுமை கனகராசா
தேருக்குச் சக்கரம்போல் சிறப்பாக இல்லறத்தில்
நார்சுமந்த பூப்போல நற்பண்பு பிள்ளைகளும்
ஊர்மெச்ச வாழ்வது உவக்கலையோ காலனுக்கு

மக்கள் தேவையெலாம் மகிழ்வோடு நிறைவேற்றி
மருமகன் மருமகள் மகிழ்விக்க பேரன் பேத்தி
சிக்கலின்றி வாழ்ந்து சிரித்துக் குதூகலித்தல்
விக்கினமாய்ப் போனதோ விரும்பலையோ காலன்

செங்கல் அடியூரில் சேர்ந்திருந்தோம் எதிர் வீட்டில்
அடக்கம் அறிவுடைமை அன்பான அரவணைப்பால்
எங்கள் மனமெல்லாம் ஏங்கவைத்த உனதன்பை
நீரில் மூழ்கி நினைப்பிழக்க முடியாதையா

அன்பு மனையாளும் அருமைக் குழந்தைகளும்
மண்ணின் உடன்பிறப்பும் மற்றவுன் சுற்றமும்
பண்பின் பிறப்பிடத்தை பறிகொடுத்த சோகத்தை
துயர்கரைய சுந்தரரை துதிக்கிறேன் அருள்கொடப்பா

ஓம் சாந்தி

என்றும் அன்பு நண்பர்

**நடேசமூர்த்தி**

# நயினையின் மைந்தன்

"ஒரு கால் இருக்க ஒளியேன் எரிக்க உதவது நிற்க வருணன் மறுகால் நிறுத்தி ஒரு நாளிகைக்குள்" அமுதசுரபி அன்னதானத்தை வளர்த்த பெருந்தகை ஸ்ரீமான் சி. க. தம்பையா அவர்களின் வழிகாட்டலில் சிறு வயது முதல் நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி "அமுதசுரபி" அன்னதானப் பணியுடன் தன்னை இணைத்துக் கொண்ட தொண்டர் தான் அமரர் வேலுப்பிள்ளை கனகராசா அவர்கள். திரு. தம்பையா அவர்களை மாமனாராகக் கொண்ட அமரர் அவர்கள் நயினாதீவில் வாழ்ந்து மக்களின் தொண்டனாக இளமைக் காலத்தில் திகழ்ந்தவர். "அமுத சுரபி" அன்னதானப் பணியுடன் இளமை முதல் இற்றை வரை தன்னை ஈடுபடுத்தி சுயவிளம்பரமற்றவராய்த் தொண்டாற்றிய நற்சேவையாளர்.

தங்கம்மாவின் வயிற்றில் பிறந்தவன் தங்கமாகவே வாழ்ந்தான். வேலுப்பிள்ளையை தந்தையாகப் பெற்றவன் கோழையாகவா வாழ்வான்? இல்லை மீன்பாடும் மட்டு நகரைத் தன் புகுந்த வீடாய் ஏற்ற பொழுதிலும் பெற்ற தாயையும் பிறந்த பொன் நாட்டையும் நேசித்தவர். தன் உற்ற சுற்றமெல்லோரையும் உறவு சொல்லி அன்புடன் வாழ்ந்தவர். ஸ்ரீ நாகபூசணி அம்மனின் பாதார விந்தத்தில் வீற்றிருக்கும் அமரர் அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கி சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம்.

**செயலாளர்**

**மதியாபரணம் அம்பிகைபாகன்**

ஸ்ரீ நாகபூசணி அமுதசுரபி
அன்னதான சபை
நயினாதீவு.

# செங்கலடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையினரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை

மதித்திடும் மன்மத வருடந்தன்னில்
உதித்திட்ட புரட்டாதி மாதமதில்
கதியெனவே கடவுளின் பாதம் சேர்ந்த
கனகராசா ஆத்மா சாந்தி உறவே.

வங்க மாக்கடல் வந்து முத்தமிடும்
தங்க மாமணி ஈழத் திருநாட்டில்
பொங்கு நுரை தள்ளும் புனித பூமியில்
எங்கள் நாயகி நயினை நாகபூசணி
தங்கி எழுந்தருள் புரியும் தலமதிலே
தங்கம்மா வேலுப்பிள்ளை தம்பதிக்கு
மாங்கா மணியென உதித்தவர் தாம் கனகராசா

தாயின் அரவணைப்பிலும் நயினை
நாயகியின் அருட் பார்வையிலும்
பாங்குடனே பயின்று பரீட்சைகளில் தேறி
பதிவாளர் பதவியில் அமர்ந்தவரே

செந்நெல்லும் கன்னலும் செழிப்புற்றோங்கும்
செங்கலடி ஊர்தன்னில் வந்துறைந்து
பண்பு நிறை பராசக்தியை வதுவைசெய்து
இன்பமாய் நிரஞ்சினி, நிரஞ்சன், சுதர்சினி, அனுஷா
அன்பான பிள்ளைகள் நான்கினைப் பெற்று
இல்லறத்தை நல்லறமாய் நடத்தியவரே!

மக்களுக்கு வாழ்க்கைத் துணைகளைத் தேடி வைத்து – மரு
மக்களுக்கு மதிப்புநிறை மாமாவுமாகிப் – பேரப்
பிள்ளைகளுக்கு பிரியமான தாத்தாவுமாகி
எல்லார் மனத்திலும் நல்லவராய் வாழ்ந்த கனகராசா ஐயா

சீரும் சிறப்பும் பெற்றவரே!
சிறந்த நற் பணிகள் செய்தவரே!
சின்னவனாய் ஓடி விளையாடுகையிலே
அன்னையாம் நயினை நாயகியின்
சித்திரத் தேர் இருந்த சிங்காரம் போன்று
செங்கலடி ஸ்ரீ சித்தி விநாயகரின்
தேரோட்டம் அன்று வந்து
வடம் பிடித்து வாகாய் இழுத்து பெரியவரே
வணக்கம் செய்த கனகராசா ஐயா

போகுங்கால் வந்தால் போவது திண்ணம்
நாமெதற்கு அஞ்சவேண்டும் நானிலத்தீர்
சித்தத்தில் நித்தம் சிவனை நினைமின்
பக்திமையோடு பாடிப் பணிமின்
ஆண்டவன் அடியினை வேண்டிக் கொண்டு
நாமும் பிரார்த்திக்கின்றோம் நற்பதம் பெறவே !

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

இங்ஙனம்,
மு. மகேந்திரராஜா
தலைவர்,
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்
செங்கலடி.

Lion Wickumpriya Weerakkody MJF
District Governor 2015/2016
0777 574332 (M)
E-mail: lion.wickum@gmail.com

Dignity. Harmony. Humanity.

We Serve



THE INTERNATIONAL ASSOCIATION OF
**LIONS CLUBS**
DISTRICT 306 - C 2
Lion Dr. A. Selvendiran MJF/JP
*Cabinet Secretary - 2015/2016*
*Residence* : 23/1, Dias Lane, Batticaloa, Sri Lanka.
*Office Address* : 22, Stubbs Place, Colombo 05, Sri Lanka
+94 065 2222457 (R) +94 773 618402 (M) +94 777 267328 (M)
E-mail: selva2351@yahoo.com

## நயினாதீவு நவின்ற நற்றமிழாளன் அமரர் வேலுப்பிள்ளை கனகராசா

எல்லாம் வல்ல இறைவன் திருவாக்கின் வழிநின்று பண்ணொமுகும் பைந்தமிழால் வழிபாடியற்றும் சிவநெறிநின்று சைவநல்லுலகில் வாழ்ந்தவர் அமரர் வேலுப்பிள்ளை கனகராசா அவர்கள்.

நாற்றிசையும் ஆழிசூழ் புனிதநிலமது அன்னையவள் நாகபூசணி அம்மன் அருள்பாலிக்கும் யாழ்ப்பாணம் நயினாதீவில் உயர்திரு. வேலுப்பிள்ளை தங்கம்மா தம்பதியினரின் முதல் வாரிசாக 01.10.1941ல் இவ்வுலகு சிறப்புற இறைவனின் எண்ணங்கொண்டு பிறந்தவர் இவர். அன்னையின்பதியிலே பிறந்ததனாலோ என்னவோ இவருக்கு அன்னையவள் திருநாமம் கொண்டிலங்கும் மாதொருவள் பராசக்தி என்பாள் இவருக்கு மனைவியாய் அமைந்தாள். இதுவும் இவர் பெற்ற பெரும் பேறே எனலாம். இல்லறத்தை நல்லறமாக்கி நிரஞ்சகமான நிறைவாழ்வு வாழ்ந்ததன் பயனாய் முதல் பிறந்த பெண் குழந்தைக்கு நிரஞ்சனி எனவும் பின்பிறந்த தனயனுக்கு நிரஞ்சன் எனவும் சுகவாழ்வுடன் சுதந்திரவேட்கை கொண்டதால் சுதாகரித்துப்பிறந்த மகவுக்கு சுதர்சினி எனவும் அனுபவம் முற்றிய வாழ்வதனில் அள்ளியருளும் அரும்பெரும் நட்சத்திரமாக பிறந்த பெண்ணுக்கு அனுஷா எனப்பெயரிட்டு வாழ்ந்து மகிழ்ந்தார். நாற்றிசையும் கட்டியாள நால்வர் பிறந்ததால் நமக்கினி போதும் என்றெண்ணி சீரும் சிறப்புமாக வாழ்க்கையை அனுபவித்து வாழ்ந்தாரிவர் தம்வாரிசுகள் துலாம்பரமாக இருக்கவேண்டுமென்றெண்ணி விருட்சம் பெருக நறுமணம் செய்வித்து மகிழ்ந்ததுடன் பேரர்கள் ஐவரை ஆரத்தழுவி வாழும் பாக்கியமும் கிடைத்தது.

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தில் உதவிப் பதிவாளராக பணிபுரிந்த இவரை

தேவை நிமித்தம் சென்றவேளை முதல் மட்டக்களப்பு ஏரன்ஸ் லேன் குருந்தையடி சிறி சித்தி வினாயகர் ஆலயத்தில் நான் தலைவராக இருந்தபோது என்னுடன் செயலாளராக ஆன்மீகப் பணியாற்றிய காலத்தின் போதும் எமது நட்பு மேலும் நெருக்கமடைந்தது. இக்காலவேளையிலே இவரது குணாதிசயங்களை அறிந்து புரிந்து தெளிந்து கொள்ளும் வாய்ப்பு கிடைத்தது. ஆலயத்தின் கும்பாபிசேகம் விரைவில் நிறைவேற ஆற்றிய பங்களிப்பு எத்தனை. அத்துணை ஆற்றல் மிகுந்தவரை அருகிலே கொண்டதால் யானும் பேறுபெற்றவனானேன். இவரது இவ்விரண்டு சேவைகளையும் ஒப்பிட்டு பார்ப்போமானால் இவரது ஞானம் உறைந்திடும் பணிந்த நாவும் இறைவன் உறைந்திருக்கின்ற இனிய இதயமும் யாவரும் விரும்பும் இனிய மனத்தினனாய் காணக்கூடியதாகவிருப்பதைக் காணலாம்.

சிந்தையிலே சீரிய சிவச் செம்மலாக சேவையிலே வீரம் பொதிந்த மறந்தமிழ் உணர்வாளனான எல்லோரையும் கவர்ந்து வாழ்ந்த வாழ்க்கை உள்ளதே அதை எவ்வாறு இன்பத்தமிழால் இத்தமிழனை விளிக்கமுடியும். நீதி, நேர்மை, கடமை கண்ணியம் அதே வேளை பணிவு, பரிவு, பாசம் பாங்குடன் அனைவரது உள்ளத்திலும் நிறைந்தவராய் தனது அரச பணியதனில் அனைத்தையும் பதிவு செய்தமையால் நடுநாயகமாய் வீற்றிருந்து உதவிப்பதிவாளராகப் பணிமுடித்து ஓய்வுநிலை பெற்றும் அரசாங்கமோ இவரை விட மனமின்றி சேவையாளனை சேர்த்தணைத்துக் கொண்டது. காலம் நேரம் கருதாது கடமைகளை செவ்வனே நிறைவு செய்து சகலரது மனங்களிலும் பரிபூரணனானார்.

இவர் அரச பணிதனையும் ஆன்மீகப் பணிதனையும் ஒருமுகத்தின் இருகண்களாக போற்றியதால் காலமெல்லாம் வாழ்ந்ததனால் வையத்துள் வாழ்வாங்கு வாழும் நேரிய முறையினை வரிக்கு வரி வள்ளுவர் கூறியதுபோல்.

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான் உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" எனப்போற்றுதலுக்கும் இடமுண்டு.

ஆன்மீகப் பணியதனில் இவர் ஆற்றிய சீரிய சேவைதனை சுவாமி சுந்தரமூர்த்தி நாயனார் அருளியவண்ணம் எண்ணுகையில்,

புத்தராய் பணிவார்களெள்ளார்க்கும் மடியேன்
பரமனையே பாடுவாரடியார்க்கு மடியேன்
சித்தத்தை சிவன்பாலே வைத்தார்க்கு மடியேன்
திருவாரூர் பிறந்தார்கள் எல்லார்க்கு மடியேன்
முப்போதும் திருமேனி தீண்டுவார்க்கு மடியேன்
முழுநீறுபூசிய முனிவர்க்கு மடியேன்
அப்பாலு மடிசரிந்த அடியார்க்கு மடியேன்
ஆரூரன் ஆரூரிலம்மாமனுக்காளே.

என்னும் பதிகத்திற்கேற்ப சிவநெறி பிறளாது வாழ்ந்து இப்புனித பூமியாம் பூம்புகார்தனிலே கடந்த 27.09.2015 அன்று இறையடிசேர்ந்த உத்தமர் இவரது வாழ்வும் வளமும் சேவையும் செருக்கில்லாப் பணியும் மற்றவர்கட்கு கலங்கரை வெளிச்சமாகும் என்பது வெள்ளிடைமலை.

மனைவி மக்கள் மருமக்கள் பேரச்செல்வங்கள் உறவுகள் நண்பர்கள் அன்பர்கள் அனைவரும் ஆறுதலடைவதற்கு இவர் வாழ்ந்த வாழ்க்கை நமக்கெல்லாம் வழிகாட்டட்டும். இவரது ஆன்மா ஆறுதலடைவதாக.

**Dr. A. Selvendiran**
Justice of the Peace
23 / 1, Dias Lane,
Batticaloa.

# ஆரவாரமின்றி அன்னமிட்டவர்

மரணத்தினால் மக்கள் மறக்கப்படுகின்றனர். அவர்களுள் சிலர் மரணத்தினால் நினைக்கப்படுகின்றனர்.

அரச பணியுடன் சமூகப்பணியையும் ஆரவாரமின்றி மேற்கொண்டவர் தான் அமரர். வேலுப்பிள்ளை கனகராஜா அவர்கள்.

ஒவ்வொரு வருடமும் புரட்டாதி மாதம் 12ம் திகதி தனது திருமண நன்நாளை முன்னிட்டு எமது முதியோர் இல்லத்திலுள்ள முதியோர்களுக்கு உணவு வழங்குவதற்கு உரிய உதவியை வழங்கி வந்தார். இல்லம் ஆரம்பித்த காலம் தொட்டு திருமண நாளிலே இல்ல முதியோருக்கு உதவி மேற்கொண்டு வந்தவர்தான் அமரர் வேலுப்பிள்ளை கனகராஜா அவர்கள்.

ஆதரவற்ற சமூகம்மீது அக்கறை கொண்டவர். அரச பதவியில் உயர் நிலை அடைந்தும் கூட அதன்பின் ஓய்வு பெற்றும் கூட சுயநலமான வாழ்க்கை வாழாது அனைவருடைய நலனிலும் அக்கறை கொண்டவர். அதனால் அனைவரது இதயத்திலும் நிறைந்திருந்தவர்தான் அமரர் வேலுப்பிள்ளை கனகராஜா அவர்கள்.

இல்லற வாழ்வில் பராசக்தி அம்மையாரை துணையாக்கி அது நலமாக வாழ்ந்து காட்டியவர். பெற்ற மக்கள் மூலம் தன்பெருமையை நிலை நாட்டியவர். இத்தகைய வேலுப்பிள்ளை கனகராஜா பெரியாரின் இழப்பு பேரிழப்பாகும்.

இயற்கையின் நியதியை எம்மால் எக்காலத்திலும் வெல்ல முடியாதே. அன்னாரின் பிரிவால் வாடும் அன்பு மனைவி, அருமைப் பிள்ளைகள், அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு எமது சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லத்தின் ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய அனைவரும் பிரார்த்திப்போம்.

**நிருவாகத்தினரும் முதியோர்களும்**
**சுவாமி விபுலானந்தர் முதியோர் இல்லம்.**

82, அரச விடுதி வீதி,
கல்லடி, மட்டக்களப்பு.
065 - 2224322

ஓம் சக்தி! உ பராசக்தி துணை!
திருவருள்மிகு
Regd. HA/5/BT/132
ஸ்ரீபத்திரகாளியம்பாள் ஆலய அறங்காவலர் சபை
TRUSTY BOAD OF SRIPATHIRAKALI TEMPLE
புகையிரத நிலைய வீதி, ஏறாவூர்-4. Railway Station Road, Eravur-4.

# நயனநீர் அஞ்சலிகள்...

அமரர். வேலுப்பிள்ளை கனகராசா அவர்கள்
(ஓய்வு பெற்ற உதவிப் பதிவாளர் நாயகம் (வடக்கு கிழக்கு)

யாழ் மண்ணில் கருவாகித் திருவான அண்ணல் கனகராஜா அவர்கள் பண்பிற்கும் பாசத்திற்கும் இலக்கணமான அக்கா பராசக்தியை கைத்தலம் பற்றி மணிமணியான மழலைகள் பல ஈன்று மகிழ்ந்திருந்தமை உள்ளங்கை நெல்லிக்கனி.

அன்னாருக்கு வாய்த்த அரசபணியும் இவரால் பெருமை கண்டதும் யாவரும் அறிந்த விடயம். மட்டு மாவட்ட செயலகத்தில் பதிவாளராகப் பணிபுரிந்த வேளை பலன் பெற்றோர் ஏராளம்..... ஏராளம். இவரின் சமூகப் பணியும் சளைத்ததல்ல. எமது ஏறாவூர் நான்கு ஸ்ரீ பத்திரகாளி அம்பாளின் ஆலயத் திருப்பணிகளுக்கும், அம்பாள் மணிமண்டபக் கட்டுமாணப் பணிகளுக்கும் வாரி நல்கிய பதுமநிதிகளை நாம் எண்ணி எண்ணிப் பார்க்கிறோம். சேவைகள் நவிலும் நல்லோனின் இழப்பு அவர்தம் குடும்பத்தவர்க்கு மட்டுமன்றி எமக்கும் பேரிழப்பு. அன்னாரின் உறவுகளுக்கு எமது அறங்காவலர்கள் சார்பாகவும், திருப்பணிச் சபையினரின் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபங்களைக் காணிக்கையாக்குகிறோம். அவர் ஆத்மா அன்னை மாகாளி அடியிணையிற் துயில் கொள்ள அனைவரும் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி.. சாந்தி... சாந்தி...

பூம்புகார் இந்து கலாசார மன்றம்
மட்டக்களப்பு.
Poompukar Hindu Cultural Society
Batticaloa.
பதிவு இல. Regd No. HA/04/BT/290
தொடர்பு தொ.பே.இல. Contact Phone No:
செயலாளர் / Secretary
திகதி ........ 201

## அமரர் வேலுப்பிள்ளை கனகராசா அவர்களின் மறைவையொட்டிய இரங்கற் செய்தி

மானிடப் பிறப்பெடுக்கும் மாந்தர்களில் வாழ்வாங்கு வாழ இறையருள் கிட்டுவது சிலருக்கே. அதாவது எமது இந்து தர்மப்படி முன்னைய பிறப்பின் கர்ம வினைகளுக்கு ஏற்பவே இப்பிறப்பு எமக்கு அருளப்படுவதோடு மனம், புத்தி, காயம் என்பன வழங்கப்பட்டு இப்பிறப்பில் வாழ்வாங்கு வாழ்கின்றோமா என எம் ஆத்மா பரீட்சிக்கப்படுகிறது. அந்த வகையில் தனது ஆத்மீக வாழ்க்கையிலும் லௌகீக வாழ்க்கையிலும் வாழ்வாங்கு வாழ்ந்த உதாரண புருஷராக அமரர் வேலுப்பிள்ளை கனகராசா அவர்கள் காணப்படுகிறார்.

பூம்புகாரில் குடிவந்த 2005ம் ஆண்டு முதல் எனக்கு அவருடன் மரியாதையுடன் கூடிய பழக்கம் ஏற்பட்டது. அதிலும் 2008ம் ஆண்டு பூம்புகார் குளக்கட்டு கண்ணகி அம்மாள் ஆலயத்திற்குரிய 2ம் நாள் சடங்கின் பொறுப்பாளர் நால்வருள் நானும் அவருடன் எம் பெருமாளின் அருளால் இணைக்கப்பட்ட பின்னர் இன்னும் நெருக்கம் ஏற்பட்டது. அத்துடன் பூம்புகார் இந்துகலாசார மன்றத்தின் போசகர்களில் நாமிருவரும் ஒன்றாக செயற்பட்டமையும் எனக்கு மேலும் அவரின் அனுபவங்களைப் பகிர அரிய வாய்ப்பு கிட்டிற்று. அவருடைய பொறுமை, அமைதி, நிதானம், ஆலோசனை, தீர்க்கமான முடிவு என்பன அவர் இறைவனை அனுபவித்த பாங்கிலிருந்து பெற்ற முதிர்ச்சியாகவே நான் கருதுகிறேன்.

குடும்ப வாழ்க்கையிலும் இல்லறத்தை நல்லறமாகக் கொண்டு வாழ்ந்தார் என்பதற்கு அவரது பிள்ளைகளும் குடும்பத்தாரும் சாட்சியாக உள்ளனர். வைத்தியராக, ஆசிரியர்களாக, கணக்காளராக அவரது பிள்ளைகள் சமூக சேவை புரிந்த வண்ணமே உள்ளனர். அன்னாரின் பண்புக்கேற்ற நல்ல பண்புள்ள குடும்பத்திற்கேற்ற மருமக்களையும் பேரப் பிள்ளைகளையும் அவரது கௌரவத்தை பேணும் பொருட்டு பெற்றமை மேலும் சிறப்படைகிறது. அத்துடன் அவர்கள் அனைவரும் மற்றவர்களுடன் பழகும் பண்பு தாய் தந்தையரிடமிருந்து ஊட்டப்பட்டமையை நன்கு உணரக் கூடியதாக உள்ளது.

இப்பேறுகளெல்லாம் பெற்று வாழ்ந்து அமரராகி விட்ட அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

"சரண கமலாலயத்தை அரை நிமிட
நேரமட்டிலாவது தவமுறை தியானிப்போம்
"மேன்மை கொள் சைவநீதி விளங்குக
உலகமெலாம்"

வ. பஞ்சலிங்கம்
போசகர்,
பூம்புகார் இந்து கலாசார மன்றம்.



## நாகபூசணி அம்பிகையைத் தரிசித்து ஆனந்தமடைந்த புலவர்கள் பாடிய பாடல்களுள் சில :-

"கற்பகக் கன்றைக் கடம்பனைத் தந்த கனகவரை
அற்புத மோன வருணாகந் தாங்கு மமிர்தவல்லி
தற்பரன் வாமந் தழைத்தே சகல உயிர்களுக்கும்
நற்பதி யேயெனப் பெற்ற சதானந்த நாகம்மையே"

**நயினாதீவு சுவாமியார் முத்துக்குமார சுவாமிகள் அவர்கள்**

"பெற்றதாலன்னை பெறுமுயிரனைத்தும்
பேணலால் அன்னை பெற்றிடுவோர்
உற்றதாலன்னை விரும்பிய அனைத்தும்
உதவலால் அன்னை எக்கலையும்
சொற்றதாலன்னை உலகொடு வானும்
தொழுதலால் அன்னை யென்றென்றும்
பற்றதாங்கருணை பொழிதலாலன்னை
பராபரை நாகபூஷணியாள்"

**நயினை நாகமணி புலவர் அவர்கள்**

"மன்னுசீயர் இலங்காபுரியிலம்பிகை நின்
மாபெரும் புகழுக்கு இலக்காய்
இன்னல் மேவிய நல்வரவு சுற்றியகல்
இருஞ்சிறைக் கருடன் மேனியகல்
இன்ன பாஷையதென் றறிவுறா எழுந்தால்
இலங்கு கற்சாதனம் இரண்டு
துன்னை நேரிலா நின் வருவெனும் ஐந்தும்
சாட்சியாம் நாகபூஷணியே"

**தி. இராமச்சந்திரன் (குட்டிப்பிள்ளையார்)**

"அற்புதமான அருளுடையாள் அருள் நோன்பினார்க்கே
சற்குணமான நற்புத்திர பாக்கியம் தானளிப்பாள்
முற்றிய நோய் நனிதீர்த்திடுவாள் மூலை மூர்த்தியருட்
பொற்பதம் போற்றிடுவார் பெறுவார் பல போகமுமே"

**நயினை வித்துவான் காமாட்சி சுந்தரம்**

அலையாழி சூழ் நயினை நிலையாது உறைதேவி
அகிலாண்ட புவனேஸ்வரி
அன்பருளம் மகிழவே இன்பநிலை தந்திடும்
அன்னையே நாகேஸ்வரி
நிலையாத உலகினில் கலையாத பொருளும் நீ
நினைப்பவர்க் கருள் செய்வாய் நீ
நித்தமும் வழிபடும் அடியவர் இடர் எல்லாம்
நீறு படவே அருளுவாய்
குறையாத அன்பினொடு தொண்டு புரிமெய்யன்பர்
குறையெல்லாம் நீக்கியருள்வாய்
குற்றேவல் புரியன்பர் தொண்டினுக் கேயன்புத்
தொண்டனாய் நின்று காப்பாய்

**நயினை சைவப்புலவர் நா. விசுவலிங்கம்**

கற்பகத் தருவென்றும்மைக் கண்டவர் வியந்து ஏற்றும்
அற்புத வருளாலே அன்னையே நாமமன்றுன்
சொற்பதம் போற்ற நாகபூசணி நாகமன்று
பெற்றனை தாயே உந்தன் பிள்ளையான் - இரங்குவாயே

**நயினை இராகுலன்**

# இளமைக்காலத்தில்



அகவை 16இல்



அகவை 17இல்



அகவை 31இல்



அகவை 37இல்



அன்பு மனைவியுடன்



25th ஆண்டு திருமண நிகழ்வின்போது



நியூசிலாந்து சுற்றுப்பயணத்தின்போது



நியூசிலாந்து பயணத்தில்



நியூசிலாந்து பயணத்தில்



70ஆவது அகவையின்போது



45ஆவது திருமண நிறைவு நாளின்போது



பேரக் குழந்தைகளுடன்



மேலதிக மாவட்ட காணிப்பதிவாளராக திருகோணமலையில் சேவையாற்றிய பிரியாவிடையின்போது



மேலதிக மாவட்ட காணிப்பதிவாளராக கல்முனையில் சேவையாற்றிய பிரியாவிடையின்போது



வடக்கு - கிழக்கு மாகாண உதவிப்பதிவாளர் நாயகமாக கடமையில்



நிகழ்வில் சிறப்பு அதிதியாக



பிரியாவிடை நிகழ்வொன்றில் உரையாற்றும்போது



வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயக சேவை பாராட்டில்



மட்டக்களப்பு மேலதிக காணிப்பதிவாளர், வடக்கு - கிழக்கு மாகாண உதவிப் பதிவாளர் நாயகம் அலுவலக உத்தியோகஸ்தர்களுடன், சேவை நலன் பாராட்டில்



தனது இனிய குடும்பத்தாருடன்

## நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தி சுகமாக வாழ்வோம்.

### நீரிழிவு நோய்

நீரிழிவு நோய் என்பது இரத்தத்திலுள்ள சீனி (குளுக்கோஸ்) அதிகரிப்பதேயாகும். சீனியைக் கட்டுப்படுத்துவது சதையினால் சுரக்கப்படும் இன்சுலின் என்னும் ஓமோன் ஆகும். இன்சுலின் என்னும் ஓமோன் குறைபாடு காரணமாகவோ அல்லது இன்சுலின் செயற்பாட்டில் ஏற்படும் குறைபாடு காரணமாகவோ நீரிழிவு நோய் ஏற்படலாம்.

### நீரிழிவு நோய்க்கான காரணிகள்

01. பரம்பரை மூலமாக
02. மன அழுத்தம் / மனநிலை
03. அளவுக்கு அதிகமான பருமன்
04. அளவுக்கு அதிகமான உணவு உண்ணுதலும் அதற்கேற்ப உடற் பயிற்சியில் ஈடுபடாமலிருத்தலும்.
05. கர்ப்பகாலத்தில் இந்த நோய் ஏற்படலாம்.
06. நிறை குறைந்து பிறக்கும் பிள்ளைகளிலும் இந்த நோய் ஏற்படலாம்.

### நீரிழிவு நோய்க்கான அறிகுறிகள்

01. அதிகளவு தண்ணீர்த் தாகம்
02. அதிகளவு பசி
03. வாய் உதடு காய்தல்
04. அடிக்கடி சிறுநீர் கழித்தல்
05. உடலின் நிறை திடீரென குறைதல்
06. பலவீனம்
07. புண்கள் ஆறும் தன்மை குறைதல்
08. கண்பார்வை மங்குதல்
09. அவயவங்களில் விறைப்புத் தன்மை ஏற்படல்

### நீரிழிவு நோயை அறிவதற்கான பரிசோதனைகள்

01. FBS (Fasting Blood Sugar) 8 மணித்தியாலங்கள் ஒன்றும்

குடிக்காமல் சாப்பிடாமல் இருந்து, அதாவது இரவு 10 மணிக்கு உணவு அருந்தியபின் ஒன்றும் குடிக்காமல் சாப்பிடாமல் இருந்து காலையில் இந்த இரத்தப் பரிசோதனையைச் செய்தல்.

02. PPBS - உணவருந்திய 2 மணித்தியாலங்களில் இரத்த பரிசோதனை செய்தல்.

03. GTT (Glucose Tolerance Test) குளுக்கோஸ் ஏற்கும் தகுதியை பரீட்சித்துப் பார்த்தல்.

**நீரிழிவு நோயை நிர்ணயிக்கும் இரத்தத்தில் சீனியின் அளவு**

| | உணவின்றி இரத்த சீனி அளவு (FBS) | சாப்பாட்டிற்கு 02 மணித்தியாலத்துக்கு பின் (PPBS) |
|---|---|---|
| பொதுவாக | 110 mg Idl இற்கு குறைவு | 126 mg Idl இற்கு குறைவு |
| நீரிழிவு நோயின் முன் அறிகுறி | 110 - 126 mg Idl | 140 mg Idl இற்கு அதிகம் |
| நீரிழிவு | 126 mg Idl க்கு மேல் | 200 mg Idl க்கு மேல் |

**நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தல்**

நீரிழிவு நோய் என்பது இரத்தத்தில் உள்ள சீனி அதிகரிப்பதே ஆகும். இதனால் இரத்தத்தில் உள்ள சீனியின் அதிகரிப்பினை கட்டுப்படுத்த வேண்டும். அதற்கான 3 வழிமுறைகள் உள்ளது. அவற்றில் உணவை கட்டுப்படுத்தல் மிக மிக முக்கியமானது.

1. உணவை கட்டுப்படுத்தல் மூலமாக
2. மருந்து மூலமாக

3. இன்சுலின் மூலமாக

**1. உணவு முலமாக நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தல்.**

- இனிப்பான தின்பண்டங்கள்
- சீனி
- கருப்பட்டி / சர்க்கரை
- பேரீச்சம்பழம்
- இனிப்பு பிஸ்கட்கள்
- ஜாம்
- கேக்
- சொக்கிலட்
- தேன்
- குளிர்பானம்
- குளுக்கோஸ்
- பழரசம்

**நீரிழிவு நோயாளியின் உணவு**

**காலை :-** தேநீர் → சீனி / கருப்பட்டி இல்லாத தேனீர் அல்லது கோப்பி ஒரு கோப்பை அல்லது பழச்சாறு சீனியில்லாமல்.

காலை உணவு → சிவப்பு அரிசியினால் தயாரிக்கப்பட்ட சோறு / பாற்சோறு ஒரு பீரிஸ் கோப்பையளவு. தோல் உள்ள தானிய வகைகள், குரக்கன் மாவினால் தயாரிக்கப்பட்ட உண்வு, பிட்டு, ஆப்பம் போன்றவை தேங்காய்ச் சம்பலுடன்.

காலை 10 மணியளவில் → சீனி / கருப்பட்டி இல்லாத தேனீர், அல்லது கோப்பி ஒரு கோப்பை, அல்லது பழச்சாறு, கடினமான உழைப்பாளியானால் ஒன்று அல்லது இரண்டு சீனி இல்லாத பிஸ்கட்.

மதிய போசனம் :- சிவப்பரிசிச் சோறு ஒரு கோப்பை உடன் கீழ்வரும் காய்கறிவகை, கீரைவகை, மீன், கருவாடு, நெத்தலி போன்றவை.

மாலை தேநீர் :- காலை தேநீர் போன்றது

இரவு போசனம் :- ½ கோப்பை சிவப்பு அரிசிச் சோறுடன் கீழ் குறிப்பிட்ட காய்கறி வகைகள், அல்லது குரக்கன் மாவினால் தயாரித்த உணவு வகைகள்.

**காய்கறி வகைகள்**

- ✣ எல்லா விதமான கீரை வகைகள்
- ✣ பூகோவா
- ✣ சோயா அவரை
- ✣ பூசணி
- ✣ புடலங்காய்
- ✣ பயிற்றங்காய்
- ✣ பப்பாசிக்காய்
- ✣ கோவா
- ✣ வாழைப்பூ
- ✣ போஞ்சி
- ✣ அகத்திக் கீரை
- ✣ நோகோல்
- ✣ முருங்கக்காய்
- ✣ பீக்கங்காய்
- ✣ லீக்ஸ்
- ✣ பாகற்காய்
- ✣ கத்தரி
- ✣ சுண்டை

✧ வெள்ளை அரிசிச் சோறு, மாவினால் சமைத்த உணவு, கிழங்கு, மரவெள்ளி, சாம்பல் வாழைக்காய், பலாக்கொட்டை, ஈரப்பலா போன்றவற்றைக் குறைத்துக் கொள்ளவேண்டும்.

✧ மாட்டிறைச்சி, பன்றி இறைச்சி, ஆட்டிறைச்சி தவிர்த்துக்கொள்ளவும்.

✧ இதற்குப் பதிலாக நெத்தலி, தோல் உரித்த கோழி இறைச்சி சிறிதளவு உட்கொள்ளலாம்.

✧ கறிவேப்பிலை மற்றும் உருசிக்காக சேர்க்கும் பலசரக்கும் உகந்ததே.

**உணவு அட்டவணை**



**விஷேட அறிவுரைகள்**

- ✧ பிரதானமாக உணவு உண்ணும்போது காய்கறி வகைகளைச் சேர்த்துக் கொள்ளவும்.
- ✧ சோறு, மா உணவு வகைகளை குறைத்துக் கொள்ளவும்.
- ✧ ஈரப்பலா, பலா, சாம்பல் வாழைக்காய், கிழங்குவகை போன்றவற்றை அளவோடு உட்கொள்ளவும். இவற்றை உண்ணும்போது சோற்றின் அளவைக் குறைக்கவும்.
- ✧ உணவருந்திய பின் பழவகை ஏதாவது ஒன்றை சிறிதளவில் எடுக்கவும்.
- ✧ முட்டை வாரத்திற்கு இரண்டிற்கு மேல் உண்ணக்கூடாது.
- ✧ எண்ணெய் பாவிப்பதை குறைக்கவும். நன்றாக எண்ணெயில் பொரித்த உணவுவகைகளைத் தவிர்க்கவும்.

**2. மருந்து மூலம் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தல்.**

மேற்கூறியவாறு உணவுக் கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதுடன் பின்வரும் மருந்துகளையும் பாவிக்க வேண்டி ஏற்படலாம்.

**மருந்து வகைகள்**

1. Metformin (மெட்டோமின்)
2. Tolbutamide (டொல்பியுடாமட்)
3. Glibenclamide (கிளிபன்கிளமட்)
4. Gliclazide (கிஜிக்கிலசட்)
5. Glipizide (கிளிபிசட்)
6. Pioglitazone (பயோகிலிசடோன்)

மேற்கூறிய மருந்து வகைகளை எவ்வளவு உட்கொள்ள வேண்டும் என்பதை வைத்தியரிடமிருந்து அறிந்து கொள்ளவும்.

**3. இன்சுலின் மூலமாக நீரிழிவு நோயை கட்டுப்படுத்தல்.**

மேற்கூறிய இருமுறைகளிலும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்த

முடியாதவிடத்தில் இன்சுலின் என்னும் ஓமோன் பாவிக்க வேண்டி ஏற்படலாம். இன்சுலின் எந்த முறையில் கொடுக்க வேண்டுமென்பதும் எவ்வாறு அதைக் கொண்டு செல்ல வேண்டுமென்பதையும் எவ்வாறு அதை வைத்திருக்க வேண்டுமென்பதையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

அதிக வெப்பம், அதிக குளிர், அதிகமாக குலுக்குதல் இன்சுலின் தொழிற்பாட்டைப் பாதிக்கும். எனவே மருந்தை கவனமாகவும் பாதுகாப்பாகவும் கொண்டு சென்று வைத்திருக்க வேண்டும்.

**இன்சுலின் கொடுக்கும் முறை :**

- ✧ இன்சுலின் ஊசி மூலமாகவே ஏற்றப்படல் வேண்டும்.
- ✧ இதை பயிற்றப்பட்ட ஒருவர் மூலம் போட்டுக்கொள்ளலாம்.
- ✧ அல்லது நீங்களாகவே போடும் முறையை அறிந்து கொள்ளலாம்.

**இன்சுலின் கொண்டு செல்லுதல்.**




**இன்சுலின் வைத்திருக்கும் முறை.**

சாதாரணமாக இன்சுலினை குளிர்சாதன பெட்டியில் வைத்துக்கொள்ளலாம். எப்படி வைத்துக்கொள்ள வேண்டும் என்பதை தெரிந்து கொள்ள வேண்டும். குளிர்சாதனப் பெட்டியில் வைக்க முடியாதவிடத்து கீழ் காட்டப்பட்டவாறு மண்பானையில் வைத்துக்கொள்ளலாம்.

⇨ மண்பானையில் அரைவாசி நீர் நிரப்பி பெரிய கிளாஸ் ஒன்றில் இன்சுலினை வைத்து மூடி வைக்கலாம்.

⇨ இப் பானையை சற்று இருட்டான அறையில் வைக்கவும்.

⇨ இவ்வாறு வைக்கப்படும் இன்சுலீனை ஒரு மாதத்திற்கு மேல் பாவிக்கக்கூடாது.




**இன்சுலினை பாவிப்பது எப்படி**

1. காலம் கடந்த இன்சுலினை பாவிக்கக்கூடாது.
2. ஊசிக்குள் எடுக்கும் போதே இன்சுலின் குப்பியின் மூடியை திறக்க வேண்டும்.
3. இன்சுலின் ஊசி போட்ட 15 - 20 நிமிடத்திற்குள் உணவு உண்ண வேண்டும்.
4. வீட்டிலிருந்தே ஊசி போடுவதாக இருந்தால் இன்சுலின் குப்பியின் மூடியை சுத்தமாக்கி மருந்தை எடுக்கவும்.
5. இன்சுலின் குப்பியிலிருந்து இன்சுலினை எடுக்குமுன் இன்சுலின் குப்பியை உள்ளங்கைகளுக்கு இடையில் வைத்து 3 முறை உருட்ட வேண்டும்.

**இன்சுலின் ஏற்றும் இடங்கள்.**



**இன்சுலின் பேனை** (Insulin Pen)

✧ இன்சுலின் ஊசியுடன் கூடிய இன்சுலின் பேனை எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.
✧ இதை குளிர்சாதன பெட்டியில் வைக்கத் தேவையில்லை. சாதாரண சூழ்நிலையில் வைக்கலாம்.
✧ அதில் உள்ள ஊசியை 12 நாட்களுக்கு ஒருமுறை மாற்ற வேண்டும்.
✧ சிறிய அளவிலான ஊசி வேதனையை உண்டாக்காது.
✧ போகும் இடங்களுக்கும் எடுத்துச் செல்லலாம்.

**உடற்பயிற்சி மூலமாகவும் நீரிழிவு நோயினைக் கட்டுப்படுத்த முடியும்.**

**உடற்பயிற்சி செய்வதால்.**

✧ இரத்தத்திலுள்ள சீனி குறையும்.
✧ உடலின் எடை சமநிலையில் பேணப்படும்
✧ தேக ஆரோக்கியம் நன்றாக இருப்பதாக உணர்வீர்கள்
✧ உடலின் இன்சுலினின் செயற்பாடு அதிகரிக்கும்
✧ உடற்பயிற்சியை செய்யும் முன் வைத்திய ஆலோசனையை பெற்றுக் கொள்ளவும்.

**இரத்தத்தில் சீனி குறைதல்** (Hypoglycemic Attack)

இரத்தத்தில் சீனி அதிகரிப்பது போலவே சீனி குறைதலும் ஆபத்தானது.

**சீனி குறைவதினால் ஏற்படும் அறிகுறிகள் :-**

1. தலையிடி
2. சோம்பல்
3. கைகால் நடுக்கம்
4. வியர்வை
5. நெஞ்சு நடுக்கம்
6. களைப்பு
7. பார்வை மங்கல்
8. புத்தி சுவாதீனம்

**சீனி குறைதல் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள்**

1. நீரிழிவு நோய்க்கான மருந்துகளை தேவைக்கு அதிகமாக உட்கொள்ளுதல்

2. நீரிழிவுக்கான மருந்து பாவிப்பவர்கள் உரிய நேரத்தில் சாப்பாடு உண்ணாமை
3. அதிக தேகப்பயிற்சி அல்லது கடின உழைப்பு
4. உண்ட உணவு குறைவாக இருத்தல்.

**இரத்தத்தில் சீனியின் அளவு குறையும்போது எடுக்கவேண்டிய நடவடிக்கைகள்**

1. முடியுமானால் இரத்தத்தில் குளுக்கோசின் அளவை சோதியுங்கள்.
2. சீனி கலந்த பானமோ அல்லது சிற்றுண்டி (பிஸ்கட்) போன்றவற்றை உண்ணவும். (நோயாளி வாயால் விழுங்கக் கூடிய நிலையில் இருப்பின் மட்டுமே)
3. நோய் அறிகுறி குறையாதுபோனால் நோயாளியை உடனே வைத்தியசாலைக்கு கொண்டு செல்லவும்
4. இன்சுலின் பாவிக்கும் நோயாளிகள் இன்சுலின் எடுத்தவுடன் உணவு உட்கொள்வதினால் இரத்தத்தில் சீனி குறைவதை தடுக்க முடியும்.

**இரத்தத்தில் சீனி அதிகரித்தல்** (Hyperglycemia)

இன்சுலின் ஊசியை அல்லது மாத்திரையை ஒழுங்காக எடுக்காததால் குருதியில் சீனியின் அளவு அதிகரிக்கும்.

✧ இரத்தத்தில் சீனி மிக அதிகளவில் அதிகரித்தால் விபரீதங்கள் ஏற்படக்கூடும்.

1. வயிற்றுவலி
2. வாந்தி
3. தலைசுற்று
4. மயக்கம்

இன் நோயாளிகள் வைத்தியசாலையில் பராமரிக்கப்படல் வேண்டும். இரத்தத்தில் சீனி மிக அதிகளவில் அதிகரிக்கும்போது உணர்வற்ற நிலை (கோமா) ஏற்படலாம். இந் நிலை ஏற்பட்டால் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பராமரிக்கப்படல் வேண்டும்.

**நீரிழிவு நோயினால் ஏற்படக்கூடிய பாதிப்புக்கள்.**

1. கண் :- ✧ பார்வை குறையும்
✧ வெள்ளை காணப்படுதல் (Cataract)
✧ கண்ணுக்குள் குருதிப்பெருக்கு - பார்வை இழத்தல்

2. நரம்புத் தொகுதி :- ✧ கை, கால் மரத்துப்போதல்
✧ தசைகள் பலவீனமடைதல்
✧ கால் எரிவு ஏற்படுதல்
✧ காலில் விறைப்புத் தன்மை

3. சிறு நீரகம் :- ✧ சிறு நீரகச் செயற்பாடு பாதிக்கப்படுதல்
4. குருதிக்குழாய்கள் :- ✧ இரத்தக் குழாய்களில் அடைப்பு ஏற்படுவதால் இருதய நோய்கள் (Heart Attack), கால்களில் புண் அழுகுதல் ஏற்படலாம்.

✧ சீனியைக் கட்டுப்படுத்தல், குருதி அமுக்கத்தை (பிரசர்) கட்டுப்படுத்தல், கொலஸ்ரோலை கட்டுப்படுத்தல், புகைத்தலைத் தவிர்த்தல் மூலமாக இருதய நோய்களைக் கட்டுப்படுத்த முடியும்.

5. தோல் :-
✧ நீரிழிவு நோயாளிகளுக்கு சரும நோய்கள் பரவக்கூடும்
✧ கட்டுப்படுத்தப்படாத நீரிழிவு நோயினால் மேற்குறிப்பிட்ட பாதிப்புக்கள் அதிகளவில் ஏற்படுகின்றது.

✧ **நீரிழிவு நோயாளிகள் இரண்டு கால்களையும் கண்களைப் போல் பாதுகாக்க வேண்டும்.**

**பாதங்களை பாதுகாத்தல்**

01. தினந்தோறும் கால்களை இளஞ்சுடுநீர், சவர்க்காரத்தினால் நன்றாக கழுவி சுத்தமான மென்மையான துணியால் துடைக்கவும்.

02. ஒவ்வொரு நாளும் பாதங்களில் புண்களோ காயங்களோ ஏதாவது இருக்கிறதா என்று கவனமாகப் பார்க்க வேண்டும். புண்கள் ஏற்பட்டால் உரிய மருத்துவரிடம் காண்பித்து ஆலோசனை பெற வேண்டும்.

03. நீங்கள் தொடர்ந்து சப்பாத்து அணிபவர்களாக இருந்தால் ஒரு நாளைக்கு 2 தடவையாவது கழற்றி சிறிது நேரத்தின் பின் மீண்டும் அணிய வேண்டும். அத்துடன் கால்களைச் சுத்தமாக வைத்திருக்க வேண்டும். இறுக்கமான அல்லது தளர்வான சப்பாத்துக்களைப் பாவிக்க வேண்டாம்.

04. நீங்கள் அமர்ந்திருக்கும்போது காலுக்கு மேல் கால் போட்டு இருக்க வேண்டாம். அவ்வாறு இருந்தால் கால்களுக்கான இரத்தோட்டம் பாதிக்கப்படலாம்.

05. பாதங்களில் ஆணிகள், தழும்பு (Calosity) ஆகியவை தென்படின் வைத்தியரின் ஆலோசனையைப் பெற வேண்டும். இரசாயன திரவியங்களைப் பாவிக்க வேண்டாம்.

06. காலணியில்லாமல் நடக்க வேண்டாம்.

07. கால்கள் மரத்துப் போயிருப்பின் மற்றவர்களின் உதவியுடன் நகங்களை வெட்டவும். நகம் வெட்டும் உபகரணத்தை பாவித்து நகத்தை குறுக்காக வெட்டவும்.

08. சுடுநீர் மூலமாக கால்கழுவும் போது இளஞ்சூட்டு நீரைப் பாவிக்கவும். கால்கள் மரத்துப் போயிருப்பின் சுடுநீரினால் எரிகாயம் ஏற்பட முடியும்.

09. கால்களில் ஏதாவது சிறிய புண் ஏற்பட்டால் கூடிய சீக்கிரம் வைத்தியரை நாட வேண்டும். இல்லாது போனால் கால்கள் துண்டிக்கப்படவேண்டிய நிலை ஏற்படலாம்.

10. கால்களுக்கு உகந்த பாதணிகளை அணியவும்.

11. புகைப்பிடித்தல் கூடாது.

**நீரிழிவு நோயாளிகளுக்கு பொதுவான அறிவுரைகள்**

01. நீங்கள் தற்போது உட்கொள்ளும் உணவின் அளவினை ¼ பங்கினால் குறைத்து அதற்குப் பதிலாக அதிகமாக நாருள்ள உணவுப் பொருட்களையும், கீரை வகைகளையும் உண்ணவும். உயரத்திற்கு ஏற்ற எடையை வைத்துக் கொள்ளவும். எடை அதிகமாயிருப்பின் உணவில் கொழுப்பு, எண்ணெயின் அளவைக் குறைக்கவும்.

02. 5′ உயரமான ஆணின் சராசரி எடை 106 இறாத்தலாகும். கூடும் ஒவ்வொரு அங்குலத்திற்கும் 5 இறாத்தல் என்ற அளவில் அதிகரிக்கும் 5′உயரமான பெண்ணின் சராசரி எடை 100 இறாத்தலாகும். அதிகரிக்கும் ஒவ்வொரு அங்குலத்திற்கும் 4 இறாத்தல் என்று அதிகரிக்க வேண்டும்.

03. புகைப்பிடித்தல், மதுபானம், போதைப் பொருட்களை பாவிக்க வேண்டாம்.

04. ஒரு நாளைக்கு ½ மணித்தியாலம் கடினமாக வேலை / உடற்பயிற்சி செய்ய வேண்டும்.

05. மன அழுத்தமில்லாமல் சந்தோஷமாய் வாழ வேண்டும்.

06. திடீர் உணவு வகைகளை (Fast food) தவிர்க்கவும்.

07. விரல்களையும், கக்கங்களையும் ஈரமில்லாமல் வைத்திருக்கவும்.

08. பருத்தி உள்ளாடைகளை பாவிக்கவும்.

09. உடலில் காயங்கள் ஏற்படாது பாதுகாத்துக் கொள்ளவும்.

10. நீரிழிவு நோய் கட்டுப்பாட்டில் இருந்தாலும் தவறாது கிளினிக்கிற்கு சமூகமளிக்க வேண்டும்.

11. ஒருபோதும் உணவு உண்ணாமல் இருக்க வேண்டாம்.

12. ஒவ்வொரு நாளும் குறிப்பிட்டளவு உணவு மாத்திரம் உட்கொள்ளவும்.

13. நீரிழிவு நோயாளி என்றால் உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள நோய் அறிக்கை அட்டை (Diagnosis Card) உங்களுடன் எப்பொழுதும் வைத்திருக்க வேண்டும்.

14. இரத்தத்தில் சீனியின் அளவு குறைந்தால் சீனி கலந்த பானமோ இனிப்பான உணவுகளையோ உண்ணுங்கள்.

15. 2 வருடத்திற்கொருமுறை கண்களை பரிசோதித்துக் கொள்ளவும்.

16. சிகிச்சை ஆரம்பித்த பிறகு உங்கள் நோய்க்கான அறிகுறிகள் அற்றுப்போகும்.

17. நீரிழிவு நோயானது குடும்ப உறவை பாதிக்காது.

**நீரிழிவு நோயாளி பின்வரும் சந்தர்ப்பங்களில் வைத்தியரின் உதவியை நாடவேண்டும்.**

1. இரத்தத்தில் சீனியின் அளவு 300 mg ldl க்கு மேல் அதிகரித்தல்
2. வாந்தி ஒரு நாளைக்கு மேல் நீடித்தல்
3. ஏதாவது நோய் இரண்டு நாளைக்கு மேல் நீடித்தல்.
4. ஒரு நாளைக்கு மேல் உணவு உண்ண முடியாமலிருத்தல்.

✧ நீங்கள் நீரிழிவு நோயாளி என்று எடுக்கும் மருந்து வகைகளையும், உட்கொள்ளும் அளவினையும் கொண்ட ஒரு மருத்துவ அறிக்கை அட்டையை கைவசம் வைத்துக்கொள்ள வேண்டும்.

# உயர் குருதி அமுக்கம் (Hypertension)

**1. உயர் குருதி அமுக்கம் என்றால் என்ன?**

இரத்தம் இரத்தக் குழாய்களினூடாக இதயத்திலிருந்து சரீரத்திற்கு பாய்ச்சப்படும்போது ஏற்படும் அதிர்வு குருதி அமுக்கம் எனப்படும்.

குருதி அமுக்கத்தில் சரீரத்தின் செயற்பாடுகள், பழக்கவழக்கங்கள் காரணமாக உயர்வு தாழ்வு ஏற்படும்.

எனினும் இவ் இரத்த அமுக்கம் சாதாரண மட்டத்தை விட மிகவும் கூடுதலாக தொடர்ச்சியாக இருப்பின் ஆபத்தானது. இவ்வாறு இருக்கும் நிலை உயர்குருதி அமுக்கம் எனப்படும்.

இவ் உயர் குருதி அமுக்கத்தினால்

a) இதயத்திற்கு பாதிப்பு ஏற்படலாம்
b) சிறுநீரகங்களை பாதிக்கலாம்
c) கண்பார்வையில் பாதிப்பு ஏற்படலாம்
d) பக்க வாதநோய் (Paralysis) ஏற்படலாம்.

எனவே உயர்குருதி அமுக்கத்தை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம் மேற்கூறிய பாதிப்புக்களை தவிர்க்கலாம்

உயர் குருதி அமுக்கம் இருப்பின் ஒரு வைத்தியரை நாடி அவரின் ஆலோசனைகளின் படி உயர்குருதி அமுக்கத்தை கட்டுப்படுத்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

**2. உயர்குருதி அமுக்கத்தின் அறிகுறிகள் என்ன?**

1. தலையிடி
2. தலைச்சுற்று
3. நித்திரையின்மை

4. சுவாசிப்பதில் கஷ்டம்
5. அசதி
6. நெஞ்சு படபடப்பு (Palpitation)
7. மூக்கிலிருந்து இரத்தம் வருதல்
8. அதிகளவு வியர்வை உருவாகுதல்

❖ உயர்குருதி அமுக்கம் உடையவர்களுக்கு மேற்கூறிய அறிகுறிகளில் ஒன்றோ அல்லது பலதோ இருக்கலாம்.

❖ ஆனால் சில நோயாளிகளுக்கு இவற்றில் ஒரு அறிகுறியும் தென்படாமலும் இருக்கலாம்.

❖ சாதாரணமான ஒருவர் வைத்தியரினால் பரிசோதனை செய்யுமிடத்து உயர்குருதி அமுக்கம் இனம் காணப்பட்டால், மீண்டும் இரண்டு மூன்று நாள்கள் பரிசோதனை செய்து தொடர்ச்சியாக குருதி அமுக்கம் உயர்வாக காணப்படுமிடத்து அவர் உயர் குருதி அமுக்க நோயாளி என இனம் காணப்படுவார்.

**3. உயர் குருதி அமுக்கம் ஏற்படுவதற்கு ஏதுவான காரணிகள் எவை?**

1. வயது - வயதுகூட உயர்குருதி அமுக்கம் ஏற்பட வாய்ப்பு அதிகம்.
2. சூழல் காரணிகள்
3. பரம்பரையாக

   பரம்பரையாக உயர்குருதி அமுக்கம் ஏற்படுவதனை தவிர்க்க முடியாது.

4. மன உளைச்சல்
5. அதிக உடற்பருமன்
6. அதிகளவு கொழுப்புணவு

7. மதுபானம் அருந்துதல்
8. புகைப்பிடித்தல்
9. சலரோகம்
10. இருதய நோய்கள்

❖ இளம் வயதினருக்கு உயர்குருதி அமுக்கம் இனம் காணப்படுமிடத்து அதற்குரிய காரணிகளை கண்டறிவதற்கான பரிசோதனைகளை செய்ய வேண்டும்.

இளம் வயதினருக்கு பின்வரும் காரணிகளால் உயர்குருதி அமுக்கம் ஏற்படலாம்.

1. சிறுநீரக நோய்கள்
2. கானில்லாத சுரப்பிகள் சம்பந்தமான நோய்கள் (Endocrine dis ease)
3. பெருநாடியில் ஏற்படும் நோய்கள்

இவ் காரணிகளில் குணப்படுத்த முடியுமானவற்றை, குணப்படுத்தும்போது அவர்கள் சாதாரண குருதி அமுக்கத்தினை கொண்டிருப்பார்கள்.

❖ பெண்களுக்கு கர்ப்ப காலத்தில் உயர்குருதி அமுக்கம் ஏற்படலாம். பெரும்பாலானவர்களுக்கு குழந்தை பிறந்த பின்னர் குருதி அமுக்கம் சாதாரண நிலைக்கு வரும். எனினும் இவர்கள் வயது கூடும்போது உயர் குருதி அமுக்கத்திற்கு உள்ளாகும் சந்தர்ப்பம் அதிகம்.

**4. குருதி அமுக்கத்தை எவ்வாறு அறிந்து கொள்வது?**

குருதி அமுக்கம் கட்டாயமாக வைத்தியர் ஒருவரினால் அமைதியான இடத்தில், ஓய்வாக இருக்கும் ஒருவருக்கு Sphimomanometer (குருதி அமுக்கத்தை அளக்கும் கருவி) யினால் அளந்து கொள்ள வேண்டும். இதனை mmHg அலகில் குறிப்பிட வேண்டும்.

உயர் குருதி அமுக்கம் இரண்டு எல்லைகளை கொண்டுள்ளன.

அவையாவது - குருதிக்குழாய்கள் சுருங்கும்போது ஏற்படும் குருதி அமுக்கம் (Systolic blood pressure - SBP)

- குருதிக் குழாய்கள் விரியும்போது ஏற்படும் குருதி அமுக்கம் (Diastolic blood pressure - DBP)

ஒருவரின் SBP 140 mmHg ஆகவும் DBP 90 mmHg ஆகவும் காணப்படுமாயின், வைத்தியர்களை அதனை இவ்வாறு குறிப்பிடுவார்கள்.

BP - 140 / 90 mmHg

**5. குருதி அமுக்கத்தின் (Blood pressure) எல்லைகள் என்ன?**

❖ சாதாரண ஒருவரின் குருதி அமுக்கம் 120 / 80 mmHg. குருதி அமுக்கம் இவ் எல்லையினை விட அதிகரிக்கும்போது மாரடைப்பு, பக்கவாதம் போன்ற நோய்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பம் அதிகமாகும்.

❖ உயர் குருதி அமுக்கம் என்பது 150 / 90 mmHg. விட குருதி அமுக்க எல்லைகள் அதிகரிக்கும் போதாகும்.

**குருதி அமுக்க எல்லைகள்**

| | |
|---|---|
| உத்தேசமான குருதி அமுக்கம் | 120 / 80 mmHg |
| சாதாரண குருதி அமுக்கம் | 120 - 129 / 80 - 84 mmHg |
| மட்டுமட்டான உயர் குருதி அமுக்கம் | (Marginal BP) 130 - 139 / 85 - 89 mmHg |
| சிறு உயர் குருதி அமுக்கம் | (Mildly BP) 140 - 159 / 90 - 99 mmHg |
| கூடிய உயர் குருதி அமுக்கம் | (Elevated BP) 160 - 179 / 100 - 110 mmHg |
| மிகவும் கூடிய உயர் குருதி அமுக்கம் | (Very High BP) 180 / 110 mmHg |

மேற்கூறிய குருதி அமுக்க எல்லைகள் உயர்குருதி அமுக்கத்திற்கான மருந்துகள் பாவிப்பவர்களுக்கு பிரயோகப்படுத்த முடியாது. அதாவது சாதாரண மனிதனுக்கே பொருந்தும்.

**6. உயர் குருதி அமுக்கத்தினை எவ்வாறு கட்டுப்படுத்தலாம்?**

1. உடல் குண்டாவதை தவிர்த்தல் - உடல் நிறையை குறைப்பதன் மூலம்
2. அதிகமான உப்பு உணவில் சேர்க்காதிருத்தல்
3. நல்ல பழக்கவழக்கங்களும் உடற்பயிற்சியும்
4. உடலின் கொலஸ்ரோல் அளவினை குறைப்பதன் மூலம்.
5. மருந்துகள் மூலம்
6. புகைத்தலை தவிர்ப்பதன் மூலம்
7. மதுபானம் அருந்துவதை நிறுத்துவதன் மூலம்
8. ஓய்வும், நல்ல மனநிலையில் இருப்பதன் மூலமாகவும்
9. நீரிழிவு நோயை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம்.

**7. உயர்குருதி அமுக்க நோயாளியின் உணவு பழக்கவழக்கங்கள் எவ்வாறு இருக்க வேண்டும்?**

❖ அதிகமான உப்பு உட்கொள்வது, உயர் குருதி அமுக்க நோயாளிகளுக்கு உகந்ததல்ல. அவர்கள் உப்பு குறைவாக உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

❖ குறைவான எண்ணெயினை உணவில் பாவிப்பது சிறந்தது.

❖ குறைவான சீனி பாவிப்பது சிறந்தது

❖ அதிகமான மரக்கறி, பழவகைகள் உணவில் சேர்ப்பது நல்லது.

எடுக்கக்கூடிய உணவு வகைகள் : மரக்கறி வகைகள்

: பழ வகைகள்

: பச்சை இலை வகைகள்

: தானியங்கள்

: மீன்

: கொழுப்பகற்றிய பால்

தவிர்க்கப்படவேண்டிய உணவு வகைகள்

| | |
|---|---|
| : மாமயிட் | : கருவாடு |
| : சீஸ் | : பொரித்த உணவு |
| : அச்சாறு / ஊறுகாய் | : ரின்மீன் |
| : சீனி | : முட்டை மஞ்சற்கரு |
| : பட்டர் / மாஜரின் | : இறைச்சி |
| : கொழுப்பகற்றப்படாத பால் | : பப்படம் |

**8. உயர் குருதி அமுக்க நோயாளி உடற்பயிற்சி எவ்வாறு செய்ய வேண்டும்**

- மெதுவாக ஓடுதல்
- விரைவாக நடத்தல்
- நீந்துதல்

❖ மேற்கூறிய உடற்பயிற்சிகளை 30 நிமிடம் / நாள் என கிழமையில் ஐந்து நாட்கள் செய்தல் போதுமானது.

❖ ஆனால் இருதய நோய் உள்ளவர்கள் நிச்சயமாக வைத்திய ஆலோசனையின் பின்பே உடற்பயிற்சியில் ஈடுபடவேண்டும்.

❖ இவர்கள் பாரம் தூக்குதல் போன்ற உடற்பயிற்சியில் ஈடுபடும்போது கவனமாக இருத்தல் வேண்டும்.

**9. உயர் குருதி அமுக்கத்தினை குறைப்பதற்கு மருந்துகளை எவ்வாறு பாவிக்க வேண்டும்?**

○ உயர் குருதி அமுக்க நோயாளிகள் வைத்திய ஆலோசனைக்கு ஏற்ப நீண்ட காலத்திற்கு மருந்துகள் பாவிக்க வேண்டும்.

○ ஒவ்வொரு மருந்து வகைகளையும் கட்டாயமாக ஒரு நாளில் சரியான நேரங்களில் எடுக்க வேண்டும். இவ்வாறு உட்கொள்ளாதுவிட்டால், கட்டுப்படுத்தப்பட்ட உயர்குருதி அமுக்கம் மீண்டும் கூடுவதற்கு ஏதுவாகி ஆபத்துக்களை உண்டாக்கலாம்.

○ இவ்வாறு மருந்துகள் பாவிப்பதுடன் வாழ்க்கை முறை, உப்பினை குறைத்தல், உடல் நிறையை குறைத்தல், புகைபிடித்தலை தவிர்த்தல் போன்றவற்றையும் கவனத்தில் எடுத்து நடைமுறைப்படுத்த வேண்டும்.

○ உயர் குருதி அமுக்க மருந்துகள் பாவிப்பவர்கள் மாதம் ஒரு முறை அவர்களின் வைத்தியரை சந்தித்து இரத்த அமுக்கத்தினை அளந்து அறிந்து கொள்வதுடன், மருந்துப் பட்டியலையும், அவ் மருந்துகளின் பக்க விளைவுகளையும் அறிந்து கொள்ள வேண்டும்.

**10. உயர் குருதி அமுக்கத்தினை கட்டுப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவம் என்ன?**

உயர் குருதி அமுக்கத்தினை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதன் மூலம்

a) இருதயம் சம்பந்தமான நோய்களை குறைக்கலாம்.
   Eg :- மாரடைப்பு
b) பக்கவாதம் ஏற்படுவதை தவிர்க்கலாம் / குறைக்கலாம்
c) சிறுநீரக செயல் இழப்பினை குறைக்கலாம்
d) கண்களில் உயர்குருதி அமுக்கத்தினால் ஏற்படும் பாதிப்புக்களை குறைக்கலாம்.
e) ஏனைய உடல் அங்கங்களின் குறைதொழிற்பாட்டினை குறைக்கலாம்.

விழித்திருங்கள்....... புற்றுநோய்

ஆரம்ப அவதானம் ஆபத்தைக் குறைக்கும்....



**புற்றுநோய் என்றால் என்ன?**

உடற்கலங்களில் ஏற்படும் கட்டுப்பாடற்ற அசாதாரண கலப்பரிவு, இதன் விளைவாக.

- மாறுபட்ட வடிவம்
- மாறுபட்ட பருமன்
- ஊடுருவும் இயல்பு
- பரவும் இயல்பு

கலங்களில் ஏற்படும்




**புற்று நோய் பற்றி ஏன் அறிய வேண்டும்?**

- புற்று நோய் ஏற்படின், அது அவரின் மரண சான்றிதழாக அமையக் கூடும்.
- எல்லா வயதினரையும் பாதிக்கக் கூடியது

  100, 000 ஆண்களில் 9.6 வீதத்தினரும்

  100, 000 பெண்களில் 11.6 வீதத்தினரும் இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

**புற்று நோயை ஏற்படுத்தும் காரணிகள் எவை?**

○ பொதுவான காரணிகள்
- ❄ பரம்பரைக் காரணிகள்
- ❄ வைரசுகள்
- ❄ ஓமோன்கள் / சுரப்புகள்
- ❄ மன அழுத்தம்
- ❄ இரசாயனப் பொருட்கள்
- ❄ கதிர் வீச்சுக்கள்
- ❄ நீண்ட கால வியாதிகள்
  - ❄ ஆறாத குடல் - தோல் புண்கள்
  - ❄ சிறுநீர்க்கற்கள்
  - ❄ உணவுக் குறைபாட்டு வியாதிகள்

○ சிறப்பான காரணிகள்
- ❄ உணவுப் பழக்கம்
- ❄ புகைத்தல்
- ❄ மதுபானம்
- ❄ வெற்றிலை போடுதல்

○ உணவுப் பழக்கம்
- ❄ அதிக கொழுப்பு, புரத உணவுகள்
- ❄ அதிக சூடான உணவுகள்
- ❄ மிதமிஞ்சிய உப்புள்ள உணவுகள்
- ❄ நார்த்தன்மை குறைவான உணவுகள்
- ❄ செயற்கை உணவுகள்
- ❄ பூஞ்சணம் பிடித்த ஒடியல், ஒடியல்மா
- ❄ விற்றமின் A, இரும்புச் சத்து குறைவான உணவுகள், புற்று நோயை ஏற்படுத்தும்

**புற்றுநோயின் பரம்பல்**

புற்று நோய் பரந்த மனப்பாங்குள்ளது. உடலின் எல்லாப் பாகங்களையும் தாக்கும்.



**உடல் உறுப்புக்களைப் பாதிக்கும் முக்கிய காரணிகள்**

○ வாய்க்குழி, களம்



- ❄ வெற்றிலை போடுதல்
- ❄ மதுபானம் அருந்துதல்
- ❄ விற்றமின் A குறைபாடு
- ❄ செயற்கை உணவுண்ணல்
- ❄ சூடான உணவுண்ணல்

○ சுவாசப்பை



- ❄ புகைப்பிடித்தல்
- ❄ தொடர்ச்சியான அசுத்த வாயுக்களை சுவாசித்தல்
  - ○ தொழிற்சாலைக் கழிவுகள்
  - ○ கிருமி நாசினிகள்

○ இரைப்பை



- ❄ வெறுமையாக இரைப்பை இருத்தல்
- ❄ விற்றமின் A, இரும்புச் சத்து குறைபாடு
- ❄ செயற்கை உணவுண்ணல்

○ மார்பகம்



❋ பாலூட்டாமை
❋ புரோஜெஸ்ரரோன், ஈஸ்ரஜன் சிகிச்சை
❋ இறுக்கமான ஆடைகள் அணிதல்

○ ஈரல்



❋ மதுபானம் அருந்துதல்
❋ பூஞ்சணம் பிடித்த உணவு உண்ணல்

○ குடல்



❋ உணவில் அதிக விலங்குக் கொழுப்பு சேர்த்தல்
❋ நார்த்தன்மை குறைவான உணவு உட்கொள்ளல்

○ சிறுநீரகம்



❋ உணவில் அதிக விலங்குக் கொழுப்புச் சேர்த்தல்
❋ புகைப்பிடித்தல்

○ கருப்பைக் கழுத்து



❋ சுகாதாரமின்மை
❋ அதிக குழந்தைகளைப் பெறுதல்
❋ குறைந்த வயதில் பலருடன் உடலுறவு கொள்ளல்
❋ பாலுறவு தொற்று நோய்கள்

**புற்று நோய்த்தடுப்பு முறைகள்**

❄ உணவுப் பழக்கத்தை மாற்றியமைத்தல்

○ விற்றமின் A, இரும்புச் சத்துள்ள உணவுண்ணல்

○ சூடான, அதிக உப்புள்ள, சுவையூட்டிகள் சேர்ந்த செயற்கை உணவுகளைத் தவிர்த்தல்

❄ வெற்றிலை, மதுபானம், புகைத்தல் என்பவற்றைத் தவிர்த்தல்

❄ தொழிற்சாலைகளில் இருந்து தூர இருத்தல்.

❄ தொழிற்சாலைக் கழிவுகளை சுகாதாரமான முறையில் அகற்றல்.

❄ தொழிற்சாலைகளில் பாதுகாப்பான ஆடை அணிதல்

❄ வைத்தியரின் ஆலோசனையின்றி மருந்துட்கொள்ளலை தவிர்த்தல்.

❄ ஆரம்ப நிலையில் சிகிச்சை பெறல்

**புற்று நோயின் ஆரம்ப நிலையை அறிவது எப்படி**

❄ புற்று நோய்க்கான ஆரம்ப அறிகுறிகளைக் கண்டு தீர்வு காணல்

○ பிரத்தியோகமான அறிகுறிகள்



❄ பொதுவான அறிகுறிகள்

- ○ உடல் மெலிதல்
- ○ பசியின்மை
- ○ சுறுசுறுப்பின்மை
- ○ களைப்பு
- ○ காரணமற்ற நீண்ட நாள் காய்ச்சல்
- ○ மாறாத மஞ்சட்காமாலை

❄ தொடர்ச்சியான பரிசோதனை மூலம் தீர்வு காணல்

- ○ 50 வயதிற்கு மேற்பட்ட ஆண்களும், பெண்களும் குறைந்தது வருடமொரு முறையேனும் மருத்துவப் பரிசோதனை செய்தல்.
- ○ முன்னர் குறிப்பிட்ட புற்றுநோய் அறிகுறிகளில் எவையேனும் காணப்படின் உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறல்
- ○ 20 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் சுயமார்புப் பரிசோதனை செய்தல்.

**புற்று நோய்க்கான சிகிச்சை முறைகள்**

○ பல்வேறு சிகிச்சை முறைகள் உண்டு

- ❄ கதிர்வீச்சு முறைச் சிகிச்சை
- ❄ மருத்துவ மூலம் சிகிச்சை
- ❄ சத்திர சிகிச்சை
- ❄ ஓமோன்கள் மூலமான சிகிச்சை
- ❄ நிர்ப்பீடன முறைச் சிகிச்சை

புற்றுநோய் ஏற்பட்டுள்ள உறுப்பு, காலம், பருமன் என்பவற்றைப் பொறுத்து சிகிச்சைகள் மாறுபடும்.

சிகிச்சைகள் தனி ஒன்றாகவோ அல்லது ஒன்றிற்கு மேற்பட்டதாகவோ அமையலாம்.

ஆரம்ப நிலையில் வைத்தியரை அணுகி சிகிச்சை பெற்றால் பூரண குணமடையக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம்.

**பெண்கள் நீண்ட காலம் தாய்ப்பாலூட்டுவதன் மூலம்**

- ❄ மார்பகப் புற்று நோய்
- ❄ கருப்பைக் கழுத்துப் புற்றுநோய்

போன்றவற்றை தடுத்துக் கொள்ளலாம்.

# 04) டெங்கு காய்ச்சல்



இது வைரசினால் ஏற்படும் ஒரு நோயாகும்.

ஈடிஸ் எயிப்டிஜ, எல்போபிக்டஸ் என்னும் இருவகை நுளம்புகள் மனிதனை கடிப்பதனால் இந்நோய் உண்டாகின்றது.

சாதாரண அறிகுறிகள்

- ❄ கடும் காய்ச்சல்
- ❄ தலைவலி
- ❄ வாந்தி
- ❄ உடல்வலி
- ❄ வயிற்றுளைச்சல்

மூன்று, நான்கு தினங்களில் இந்நோயின் அடையாளங்கள் குறைந்து நோய் குணமாகும். எனினும் சிலருக்கு டெங்கு குருதிப் பெருக்கு நோயின் நிலை தோன்றும்.

## டெங்கு குருதிப் பெருக்கு காய்ச்சலின் அடையாளங்கள்
## Dengue hemorrhagic fever



- ❊ டெங்கு காய்ச்சலுக்குள்ளது போன்றனவும்
- ❊ தோலின் அடியில் சிறிய சிவப்பு அடையாளம்
- ❊ கண்கள் சிவப்பு நிறமாதல்
- ❊ மூக்கினால் இரத்தம் கசிதல்
- ❊ மலம், சலத்துடன் இரத்தம் வெளியேறுதல்
- ❊ முரசினால் இரத்தம் வெளியேறுதல்
- ❊ மலம் கறுப்பு அல்லது செம்பட்டை நிறமாதல்
- ❊ வயிற்று நோவு.

## டெங்கு அதிர்ச்சி நிலை Dengue shock syndrome

டெங்குக் காய்ச்சலினால் பாதிக்கப்பட்டிருக்கும் ஒருவரின் காய்ச்சல் திடீரென குறைந்து விடக் கூடும் என்றாலும் நோயாளி சுகயீனமாகக் காணப்பட்டால் அது பாரதூரமான ஒரு சம்பவமாகும்.

அப்படிப்பட்ட ஒரு நோயாளிக்கு

- ❊ உடம்பு குளிர்ந்து போதல்
- ❊ உடல் வெளிறல்
- ❊ கலக்கமான தூக்கமான நிலை
- ❊ மூச்செடுத்தல், நாடி ஓட்டம் வேகமாதல் போன்ற பாரதூரமான அடையாளங்கள் ஏற்படும்.

## டெங்கு காய்ச்சலை தடுத்துக் கொள்வோம்.

டெங்குக் காய்ச்சலைத் தடுத்துக் கொள்ள அதைப் பரப்பும் நுளம்புகள் உண்டாவதைத் தடுத்தல் வேண்டும். தண்ணீர் தேங்கி நிற்கும் பாத்திரங்களில் டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் உற்பத்தியாகும். நோயை தடுப்பதற்கு பின்வரும் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

01) வெற்றுத் தகரடப்பா, சிரட்டைகள், சட்டி பானைத்துண்டுகள் வெற்றுத் தயிர்ச் சட்டிகள் என்பவற்றை உடைத் நொருக்கி விடுங்கள்.

02) பூச்சாடிகள், எறும்புப் பொறிகள் என்பவற்றில் உப்புக் கட்டிகள் கொஞ்சம் போடுங்கள்

03) அவற்றின் தண்ணீரை எப்போதும் மாற்றி விடுங்கள்

04) பொலித்தீன் பைகளை சுற்றாடலில் எறிவதைத் தடுப்பதுடன் சூழலையும் சுத்தமாக வைத்திருக்கவும்.

05) நீருள்ள பாத்திரங்களை மூடி வீடுங்கள், பறவை, நாய் போன்றன அருந்த பாத்திரங்களில் வைக்கும் நீரை அடிக்கடி மாற்றுங்கள்.

06) கூரைகளில் தகரப்பீலிக்குள் தண்ணீர் தேங்கி நிற்காதவாறு அதற்குள் இருக்கும் குப்பை கூழங்களை அகற்றி விடுங்கள்.

07) வீட்டுக் கூரைகளிலும் சுற்றுப்புறங்களிலும் இருக்கும் பழைய டயர்களில் மண் நிறையுங்கள். இல்லையென்றால் தண்ணீர் நிற்காமல் ஓட்டைகள் போட்டு விடுங்கள்.

**ஞாபகத்தில் வைத்திருக்க.....**

❄ காய்ச்சல் ஏற்பட்டால் முடியுமான அளவு படுத்து ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள். விஷேடமாக பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்ப வேண்டாம்.

❄ அதிகமாக நீராகாரம் அருந்தச் செய்யுங்கள்.

❄ அஸ்பிரின், அஸ்பிரின் கலந்த மருந்து வகைகளை கொடுக்க வேண்டாம்.

❄ டெங்குக் காய்ச்சல் பற்றி சந்தேகம் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை பெற்றுக் கொள்ளுங்கள்.

## செயற்கை இதயமுடுக்கி பற்றிய சில குறிப்புகள்.....

O1. செயற்கை இதயமுடுக்கி (Artificid Pace maker) என்றால் என்ன?



இதயத் தசைகளை மின் முனைகள் தொடர்பு கொள்ளும் போது வெளிவரும் மின்துடிப்புக்களைப் பயன்படுத்தி இதயத்துடிப்பைக் கட்டுப்படுத்தும் ஒரு செயற்கையான மருத்துவக் கருவி ஆகும்.

O2. இக்கருவியின் முக்கிய செயல்பாடு என்ன?



இக்கருவி மின் கணத்தாக்கங்களைப் பயன்படுத்தி இதயத்தைச் செயற்படச் செய்து, இதயத்தின் தாறுமாறான நாடித் துடிப்பானது சரியான சந்தத்திற்கு (Rhythm) கொண்டுவரப்பட முடியும்.

O3. எவ்வாறான சந்தர்ப்பத்தில் இக் கருவி பொருத்துவது அவசியமாகிறது?

இக்கருவியானது இதயத்தின் வலது சோணையறையிலுள்ள இயற்கையான இதயமுடுக்கியானது செயலாற்றத் தவறும் போது அல்லது பிழையாக செயலாற்றும் போது சரியான இதயத்துடிப்பை ஏற்படுத்துவதற்கு பயன்படுகின்றது.

O4. இயற்கை இதய முடுக்கி செயலாற்ற தவறும் / பிழையாக செயலாற்றும் நோய் நிலைகள் / காரணிகள் எவை?

- ❄ Sinus node dysfanction
- ❄ Acquired AV block
- ❄ Post myocardial infarction
- ❄ Neurally mediated syncope.
- ❄ Congenital complete heart block
- ❄ Neuro muscular disease.
- ❄ Hypertrophic Cardiomyopathy
- ❄ Long "QT" Syndrome.
- ❄ Heart failure.

05. செயற்கை இதயமுடுக்கி எப்போது யாரால் உருவாக்கப்பட்டது?

1942 ஆம் ஆண்டு ஆல்பர்ட் ஹைமன் என்ற உடற்செயலியல் மருத்துவர் உருவாக்கினார்.

06. நவீன இதயமுடுக்கி எப்போது யாரால் கண்டுபிடிக்கப்பட்டது?

1990 ஆம் ஆண்டு வில்சன் கிரேட் பாட்ச் உருவாக்கிய லித்தியம் அயொடைட் மின்கலங்கள் இணைத்து இதயமுடுக்கி வடிவங்களின் நியையான உறுப்பாகும்.

07. இதயமுடுக்கியுடன் வாழ்கின்றவரின் கண்காணிப்பு (Follow up) எவ்வாறு இருக்க வேண்டும்?

இதயமுடுக்கி ஒருமுறை உட்பொருத்திய பின்னர் கருவியானது வேலை செய்கிறதாவென்றும் ஒழுங்காக வேலை செய்கிறதாவென்றும் முறையாக மருத்துவர் நியமிக்கின்ற கால இடைவெளிகளில் சோதிக்கப்பட வேண்டும். தேவைக்கேற்ப கருவியானது எத்தனை முறை வேண்டுமானாலும் சோதிக்கப்படலாம் (Reprogramming)

08. இதயமுடுக்கி உட்செலுத்தியவரின் வாழ்க்கை முறை மாற்றங்கள் எவை?

இதயமுடுக்கியை உட்செலுத்தி சிகிச்சை பெறுபவருடைய வாழ்க்கை முறை வெகுவாக மாறுவதில்லை. அவர் சாதாரண வாழ்க்கை, தனது செயற்பாடுகள், குடும்ப உறவுகளை மேற்கொள்ள முடியும். எனினும் அவர் காந்தப்புலத்துடன் தொடர்புடைய செயல்களை தவிர்க்க வேண்டும்.

09. இதயமுடுக்கி பொருத்தப்பட்டுள்ளவர்கள் வாழ்க்கை முறையில் கடைப்பிடிக்க வேண்டிய கட்டுப்பாடுகள் எவை?

காந்தப்புலத்துடன் தொடர்புடைய செயல்களை தவிர்ப்பது கட்டாயம்

உதாரணமாக MRI ஸ்கேன் போன்ற பரிசோதனை செய்ய முடியாது.

வில் பற்றவைப்பு (welding) கருவி தவிர்க்கப்பட வேண்டும்.

10. Reference :

* up to date. com
* wikipedia
* pub med

# சர்வதேச முக்கிய தினங்கள்

| | |
|---|---|
| ஜனவரி 12 | இளைஞர் தினம் |
| ஜனவரி 26 | உலக சுங்கத்துறை நாள் |
| பெப்ரவரி 14 | உலக காதலர் தினம் |
| பெப்ரவரி 25 | உலக காசநோய் தடுப்பு தினம் |
| பெப்ரவரி 28 | தேசிய அறிவியல் தினம் |
| மார்ச் 08 | உலக மகளிர் தினம் |
| மார்ச் 11 | பொதுநலவாய தினம் |
| மார்ச் 13 | உலக சிக்கன தினம் |
| மார்ச் 15 | உலக ஊனமுற்றோர் தினம் |
| மார்ச் 21 | உலக வன தினம், உலக இனபேத ஒழிப்பு தினம் |
| மார்ச் 22 | சர்வதேச குடிநீர் தினம் |
| மார்ச் 23 | உலக வானிலை நாள் |
| மார்ச் 27 | சர்வதேச நாடக தினம் |
| ஏப்ரல் 01 | உலக முட்டாள் தினம் |
| ஏப்ரல் 07 | சர்வதேச சுகாதார தினம் |
| ஏப்ரல் 12 | சர்வதேச தாதிகள் தினம், உலக விண்வெளி தினம் |
| ஏப்ரல் 18 | உலக மரபுரிமை தினம் |
| ஏப்ரல் 22 | சர்வதேச பூமிப் பாதுகாப்பு தினம் |
| ஏப்ரல் 23 | சர்வதேச புத்தக தினம் |
| மே 01 | சர்வதேச தொழிலாளர் தினம் |
| மே 02 | உலக தாய்மார் தினம் |
| மே 03 | சர்வதேச பத்திரிகை சுதந்திர தினம் |

| | |
|---|---|
| மே 08 | சர்வதேச செஞ்சிலுவை, செம்பிறை தினம், சர்வதேச நூதனசாலை தினம் |
| மே 14 | சர்வதேச அன்னையர் தினம் |
| மே 15 | சர்வதேச குடும்ப நலன் தினம் |
| மே 17 | உலக தகவல் தொடர்பு தினம் |
| மே 21 | சர்வதேச கலாசார பண்பாட்டு தினம் |
| மே 24 | கொமன்வெல்த் தினம் |
| மே 31 | சர்வதேச புகைத்தல் மறுப்பு தினம் |
| யூன் 04 | தாக்குதலுக்கு பலியான உலக பச்சிளஞ்சிறார் தினம் |
| யூன் 05 | சர்வதேச சுற்றுச் சூழல் தினம் |
| யூன் 07 | உலக தொல்பொருளியலாளர் தினம் |
| யூன் 26 | சர்வதேச போதைப் பொருள் ஒழிப்பு தினம் |
| யூன் 27 | உலக நீரிழிவாளர் தினம் |
| யூன் 06 | விலங்குகளிலிருந்து மனிதனுக்குப் பரவக்கூடிய நோய்கள் தினம் |
| யூலை 11 | சர்வதேச சனத்தொகை தினம் |
| யூலை 28 | சர்வதேச அகதிகள் தினம் |
| ஆகஸ்ட் 03 | உலக நட்பு தினம் |
| ஆகஸ்ட் 06 | உலக சமாதான தினம், ஹிரோசிமா தினம் |
| ஆகஸ்ட் 29 | சர்வதேச விளையாட்டு தினம் |
| செப்டெம்பர் 08 | சர்வதேச எழுத்தறிவு தினம் |
| செப்டெம்பர் 16 | உலக ஓசோன் தினம், உலக அமைதி தினம் |
| செப்டெம்பர் 25 | உலக செவிப் புலனற்றோர் தினம் |
| செப்டெம்பர் 27 | உலக சுற்றுலா தினம் |
| ஒக்டோபர் 01 | உலக சிறுவர் தினம் |

| | |
|---|---|
| ஒக்டோபர் 03 | சர்வதேச மது ஒழிப்பு, உயிரினங்கள் தினம் |
| ஒக்டோபர் 05 | உலக சிறுமியர் தினம் |
| ஒக்டோபர் 06 | சர்வதேச ஆசிரியர் தினம் |
| ஒக்டோபர் 09 | சர்வதேச அஞ்சல் தினம் |
| ஒக்டோபர் 10 | உலக உளச் சுகாதார தினம் |
| ஒக்டோபர் 13 | உலக இயற்கை அழிப்பு குறைப்பு நாள் |
| ஒக்டோபர் 14 | உலக தர நிர்ணய தினம் |
| ஒக்டோபர் 15 | சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம் |
| ஒக்டோபர் 16 | சர்வதேச உணவு தினம் |
| ஒக்டோபர் 17 | சர்வதேச வறுமை ஒழிப்பு தினம் |
| ஒக்டோபர் 21 | சர்வதேச விவசாய தினம் |
| ஒக்டோபர் 24 | உலக சிக்கன நாள் மற்றும் ஐ.நா தினம் |
| ஒக்டோபர் 30 | உலக சேமிப்பு, வளர்ச்சி தகவல் தினம் |
| நவம்பர் 20 | சர்வதேச சிறுவர் உரிமைகள் தினம் |
| நவம்பர் 21 | சர்வதேச கடற்றொழில் தினம் |
| நவம்பர் 29 | உலக பலஸ்தீனியா ஒற்றுமை தினம் |
| டிசம்பர் 01 | சர்வதேச எயிட்ஸ் தினம் |
| டிசம்பர் 02 | உலக வலது குறைந்தோர் தினம் |
| டிசம்பர் 10 | சர்வதேச மனித உரிமைகள் தினம் |
| டிசம்பர் 13 | சர்வதேச சிறுவர் ஒலிபரப்பு தினம் |

## வாழும் வீட்டின் நீள அகல பலாபலன்

06 அடி - நன்மை
07 அடி - மத்திமம்
08 அடி - இராச்சியம்
09 அடி - கேடு
10 அடி - பாக்கியம்
11 அடி - புத்திரலாபம்
12 அடி - பிள்ளையின்மை
13 அடி - மரணம்
14 அடி - பகை
15 அடி - துன்பம்
16 அடி - செல்வம்
17 அடி - நாளுக்கு நாள் ஆக்கம்
18 அடி - நஷ்டம்
19 அடி - புத்திரர் கவலை
20 அடி - இனம் சேரும்
21 அடி - ஆடு மாடு இறக்கும்
22 அடி - சோபனம் உண்டு
23 அடி - பிணி
24 அடி - மனைவி மரணம்
25 அடி - செல்வப் பேறு
26 அடி - மத்திமம்
27 அடி - அரசாளும்
28 அடி - ஆயுள் விருத்தி
29 அடி - சுற்றப்பெருக்கு
30 அடி - நோய்
31 அடி - தரித்திரம்
32 அடி - இழந்த பொருள் சேரும்
33 அடி - லட்சுமிகரம்
34 அடி - இரு தாரங்கள்
35 அடி - குடி கேடு
36 அடி - ஜீவன விருத்தி
37 அடி - பசு விருத்தி
38 அடி - நினைத்தது கெடுதி
39 அடி - அரச சன்மானம்
40 அடி - மனைவி நாசம்
41 அடி - பாக்கியம்
42 அடி - கீர்த்தி
43 அடி - அரச தண்டனை
44 அடி - அங்கவீனம்
45 அடி - சற்புத்திரர்
46 அடி - பிசாசு வாசம்
47 அடி - சூனியப் பீடை
48 அடி - தீயினால் கேடு
49 அடி - மலடாவாள்
50 அடி - சர்வதிகாரி

அறைகளின் நீள அகலங்கள் உள்ளுக்குள் கணக்கிட வேண்டும்.

## மனைப் பொருத்தம்

வாழும் மனை கண்டிப்பாக மனையாளுக்குப் பொருந்த வேண்டும். கணவனுடைய இராசிக்கும் பொருந்தினால் இன்னும் விசேடம். வீட்டுத் தலைவன், தலைவி என்னும் இவர்களுடைய இராசிக்கு 3ம், 10ம், 11ம் இராசிகளில் வீடு அமையின் உத்தமம். 2ம், 4ம், 5ம், 7ம் இராசியில் அமையின் மத்திபம் 1ம், 6ம், 8ம், 12ம் இராசியில் வீடு அமையின் பொருந்தாது.

01. மேட ராசிக்கு தெற்கு, வடக்கு வாசல் வீடுகள் பொருந்தும்.
02. இடப ராசிக்காரருக்கு தெற்கு, வடக்கு வாசல் வீடுகள் பொருந்தும்
03. மிதுன ராசிக் காரருக்கு வடக்கு வாசல் வீடு பொருந்தும்.
04. கடக ராசிக்காரருக்கு மேற்கு, தெற்கு வாசல் வீடுகள் பொருந்தும்
05. சிங்க ராசிக்காரருக்கு மேற்கு, தெற்கு வாசல் வீடுகள் பொருந்தும்
06. கன்னி ராசிக்காரருக்கு மேற்கு, கிழக்கு வாசல் வீடுகள் பொருந்தும்.
07. துலாம் ராசிக்காரருக்கு தெற்கு, வடக்கு வாசல் வீடுகள் பொருந்தும்
08. விருச்சிக ராசிக்காரருக்கு மேற்கு, வடக்கு வாசல் வீடுகள் பொருந்தும்.
09. தனுசு ராசிக்காரருக்கு மேற்கு, வடக்கு வாசல் வீடுகள் பொருந்தும்.
10. மகர ராசிக்காரருக்கு மேற்கு, கிழக்கு வாசல் வீடுகள் பொருந்தும்.
11. கும்ப ராசிக்காரருக்கு மேற்கு, வடக்கு வாசல் வீடுகள் பொருந்தும்
12. மீன ராசிக்காரருக்கு மேற்கு, தெற்கு வாசல் வீடுகள் பொருந்தும்.

## எண் சோதிடம்

## ஆங்கில எழுத்துக்களின் எண்கள்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 8 | 3 | 5 |
| A | B | C | D | E | F | G | H |
| 1 | 1 | 2 | 3 | 4 | 5 | 7 | 8 |
| I | J | K | L | M | N | O | P |
| 1 | 2 | 3 | 4 | 6 | 6 | 6 | 5 |
| Q | R | S | T | U | V | W | X |
| 1 | 7 | | | | | | |
| Y | Z | | | | | | |

நாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு எண்ணின் ஆதிக்கத்திற்கு உட்படுகிறோம். ஒருவருடைய பிறந்த திகதியே அவருடைய எண் ஆகும். அது அவரின் தோற்றம், குணம், செயல் காட்டும். திகதி, மாதம், ஆண்டு கூட்டவரும் கூட்டெண்தான் அவரின் விதி. எனவே கூட்டு எண் முக்கியம். பிறந்த எண் பாதகமாய் அமைந்தாலும் கூட்டெண் 1, 5, 6, 9 இவைகளில் அமைந்துவிட்டால் பிற்கால வாழ்வு சிறக்கும். பிறந்த எண் நான்கு, அமைந்தாலும் கூட்டெண் 2, 7, 8 அமைந்தால் பிற்கால வாழ்வு சிக்கல் நிறைந்ததாகிவிடும். பிறந்த எண் 1, 5, 6, 9 இவைகளில் அமைந்திருந்தால் அதில் பெயர் அமைக்கலாம். சிலருக்கு பிறந்த எண் கூட்டு எண் இவைகளில் ஒரே எண்ணில் அமைந்து விடுவதும் உண்டு. அப்படி அமைந்தவர்கள் கீழ்காட்டியபடி பெயர் அமைக்கலாம்.

01. எண் 1-1 எண் 5ல் மட்டும் அமைக்கவும்
02. எண் 2-2 எண் 1ல், 5ல், 6ல் அமைக்கவும்
03. எண் 3-3 எண் 1ல், 5ல், 9ல் அமைக்கவும்
04. எண் 4-4 எண் 1ல், 6ல் அமைக்கவும்
05. எண் 5-5 எண் 9ல் மட்டும் அமைக்கவும்
06. எண் 6-6 எண் 9ல் மட்டும் அமைக்கவும்
07. எண் 7-7 எண் 5ல் மட்டும் அமைக்கவும்
08. எண் 8-8 எண் 5ல் மட்டும் அமைக்கவும்
09. எண் 9-9 எண் 5ல், 6ல் அமைக்கவும்

பிறந்த எண், கூட்டெண், பெயரெண் இவை மூன்றும் ஒரே எண்ணில் அமையக்கூடாது. அமைந்தால் அது நீசம் அதாவது நற்பலன் செய்யாது.

## பெயர் அமைக்கும் முறை

ஒருவருடைய பெயர் எப்போதும் ஒன்று, ஐந்து, ஆறு, ஒன்பது இவைகளில் அமைவதே நன்மையாகும். எண் 2, 4, 7, 8 இவைகளில் அமையக் கூடாது. இவைகளுள் (1+ 1 = 2) 11 இல் வந்த இரண்டும்,

22 இல் வந்த நான்கும் (2 + 2 = 4)

17 இல் வந்த எட்டும் (1 + 7 = 8) நன்மையானவை.

## விவாகப் பதிவு செய்தல்.

கூட்டு எண் ஐந்து, எட்டு வரும் நாட்களில் விவாகப் பதிவு செய்யக்கூடாது. செய்தால் அக்குடும்பம் நிலைக்காது. எண் ஐந்து அதிஷ்டமான எண்ணென்றாலும் விவாகப் பதிவுக்கு எண் எட்டைப்போல் தீமை செய்யும்.

கூட்டு எண் 1, 3, 6, 9 வரும் நாட்களில் விவாகப் பதிவுக்குச் சிறந்தது.

## விழாக்கள்

| | | |
|---|---|---|
| 1வது | ஆண்டு நிறைவு | - கடதாசி விழா |
| 2வது | ஆண்டு நிறைவு | - பருத்தி விழா |
| 5வது | ஆண்டு நிறைவு | - இரும்பு விழா |
| 10வது | ஆண்டு நிறைவு | - தகர விழா |
| 25வது | ஆண்டு நிறைவு | - வெள்ளி விழா |
| 50வது | ஆண்டு நிறைவு | - பொன் விழா |
| 60வது | ஆண்டு நிறைவு | - வைரவிழா |
| 75வது | ஆண்டு நிறைவு | - பவள விழா |
| 80வது | ஆண்டு நிறைவு | - அமுத விழா |
| 100 வது | ஆண்டு நிறைவு | - நூற்றாண்டு விழா |

## எண்களுக்குரிய இரத்தினக்கல்

| | |
|---|---|
| 1. மாணிக்கம் | Ruby |
| 2. முத்து | Pearl |
| 3. புஸ்பராகம் | Golden Sapphire |
| 4. கோமேதகம் | Cinnamim |
| 5. வைரம் | Diamond |
| 6. மரகதம் | Emarald |
| 7. வைடூரியம் | Cat's Eye |
| 8. நீலம் | Blue Sapphire |
| 9. பவளம் | Coral |


கண்ணீர் அஞ்சலி
"பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்"
மட்/கது/முறக்கொட்டான்சேனை இ.கி.மி.வித்தியாலயம்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், கல்விசாரா ஊழியர்கள்


விழிநீர் அஞ்சலி
அன்னாரின் குடும்பத்தினருக்கும், உற்றார் உறவினர்களுக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.
பூம்புகார் இந்து கலாச்சார மன்றமும்
பூம்புகார் பொது மக்களும்


எமது ஆழ்ந்த அனுதாபங்கள்
Our Deepest Sympathies
உறவின் பிரிவால் துயருறும் குடும்பத்தினரின் துயரில்
நாமும் இணைநது கொள்கின்றோம்.
we wholeheartedly share the sorrowfulness of the family and relatives
மயக்க மருந்து, அதி தீவிர சிகிச்சை மற்றும் வலி நிவாரண பிரிவு,
போதனா வைத்தியசாலை, மட்டக்களப்பு.
Department of Anaesthesia, Intensive Care and Pain
Teaching Hospital, Batticaloa


கண்ணீர் அஞ்சலி
"பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவித்துக் கொள்கின்றோம்"
மட்/ககு/செங்கலடி மத்திய கல்லூரி
அதிபர்,ஆசிரியர்கள்,மாணவர்கள்
கற்பிக்காப்பணியாளர்கள்


விழிநீர் அஞ்சலி
அமரர்.வேலுப்பிள்ளை கனகராஜா
மண்ணுலக
வரவு
01.10.1941
விண்ணுலக
விரைவு
27.09.2015
இவரின் மறைவிற்கு எங்களது ஆழ்ந்த அனுதாபத்தைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்
இங்ஙனம்
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கற்பிக்கா பணியாளர்கள், S.D.C, S.M.C
மட்/நாவலடி நாமகள் வித்தியாலயம், கிரான்மடு


கண்ணீர் அஞ்சலி
மலர்வு
01
10
1941
உதிர்வு
27
09
2015
அமரர்.வேலுப்பிள்ளை கனகராஜா


கண்ணீர் அஞ்சலி
மலர்வு
01
10
1941
உதிர்வு
27
09
2015
அமரர்.வேலுப்பிள்ளை கனகராஜா
(ஓய்வு பெற்ற உதவிப்பதிவாளர் நாயகம் வடக்கு, கிழக்கு மாகாணம்)
முருகேசு அண்ட் பிரதர்ஸ், மட்டக்களப்பு


கண்ணீர் அஞ்சலி
"அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு,"
அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினர்,
உற்றார் உறவினர்கள் அனைவருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.
பாடசாலைச் சமூகம்,
மட்/ஐயன்கேணி தமிழ் வித்தியாலயம்.


விழிநீர் அஞ்சலி
தோற்றம்
01.10.1941
மறைவு
27.09.2015
அமரர். வேலுப்பிள்ளை கனகராஜா
லக்கி கல்வி நிலையம்
மட்டக்களப்பு


கண்ணீர் அஞ்சலி
மலர்வு
01.10.1941
உதிர்வு
27.09.2015
அமரர். வேலுப்பிள்ளை கனகராஜா
பதிவாளர் நாயகம் திணைக்களம்



கண்ணீர் அஞ்சலி
மண்ணில்
01.10.1941
விண்ணில்
27.09.2015
அமரர்
வேலுப்பிள்ளை கனகராஜா
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதோடு,
அவரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்.
ஆழ்ந்த துயரத்துடன்
வே.கார்த்திகேசு குடும்பம்
தம்பசிட்டி, பருத்தித்துறை




THE ART OF LIVING
கண்ணீர் அஞ்சலி
அன்னாரின் பிரிவால் துயருறும்
குடும்பத்தினருக்கு ஆழ்ந்த
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப்
பிரார்த்திக்கின்றோம்.
வாழும்கலைக் குடும்பத்தினர்


விழிநீர் அஞ்சலி
மலர்வு
01.10.1941
அமரர்
உதிர்வு
27.09.2015
வேலுப்பிள்ளை கனகராஜா
அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்


விழிநீர் அஞ்சலி
மண்ணில்
01.10.1941
விண்ணில்
27.09.2015

# வம்சா விருட்சம்

வேலுப்பிள்ளை + தங்கம்மா

- கனகராசா ⟷ பராசக்தி
- கமலவேணி
- விவேகானந்தராசா ❋
- செல்வராசன்
- விஜயரெத்தினம் ❋
- அன்னசோதி ❋
- யோகம்மா
- மங்கையற்கரசி
- நாகலெட்சுமி
- கேதீஸ்வரராஜா
- புவனேஸ்வரி

இராமுப்பிள்ளை + இராசம்மா

- பராசக்தி

கனகராசா + பராசக்தி

- நிரஞ்ஜனி + ஜெகதீஸ்வரன்
- நிரஞ்சன் + வளர்மதி
  - அக்ஷயா
  - அராங்கன்
- சுதர்சனி + விஜயராகவன்
  - விக்னா
- அனுஷா + சிறிசாங்கர்
  - அருணோதன்
  - சோபிறா

(❋ அமரர்களைக் குறிக்கும்)

# நன்றி நவிலல்

எங்கள் குலதெய்வம் இறையடி சேர்ந்த செய்தி
அறிந்ததும் உடன் வந்து உதவிக்கரம்
நீட்டியவர்களுக்கும், அன்பான ஆறுதல் வார்த்தைகள்
கூறியவர்களுக்கும், தொடர்பூடகங்கள் மூலம் துயர்
பகிர்ந்தோருக்கும், கண்ணீர் அஞ்சலிகள்,
பதாதைகள், மலர் வளையங்கள் மூலம் தங்கள்
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தவர்களுக்கும்,
இறுதிக் கிரியை, இரங்கல் உரை மற்றும்
காடாற்றும் கிரியை என்பவற்றில் கலந்து
கொண்டோருக்கும், மேலும் பல வழிகளிலும்
உதவிகள் பல புரிந்த உற்றார், உறவினர்கள்,
நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் எங்கள்
உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்
கொள்கின்றோம்.

- குடும்பத்தினர் -


இல. 513/ 49,
திருமலை வீதி,
மட்டக்களப்பு
T.P - 065 2224493

# கீதாசாரம்

எது நடந்ததோ, அது
நன்றாகவே நடந்தது.
எது நடக்கின்றதோ, அது
நன்றாகவே நடக்கின்றது.
எது நடக்க இருக்கின்றதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய்,
அது வீணாவதற்கு.
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கிருந்தே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகும்



"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

– பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



Evergreen Printers, Batticaloa. 065-2222607